இதழ்: 62

சுபா



# இறுதி யாத்திரை

## 1 இறுதி யாத்திரை

ஜோதிராமன் தன்னுடைய அகலமான மூக்கை வருடிக் கொண்டார். ரீத் பிரஷ்ஷின் முனை போல் இருந்த வெள்ளையும், கறுப்பும் கலந்த மீசையை ஒற்றை நகத்தால் சொரிந்து கொண்டார்.

"உன் பெயர் என்ன சொன்னாய்?" என்றார்.

"நரேந்திரன். ஈகிள்ஸ் ஐ நரேந்திரன்"

"பிரைவேட் டிடெக்டிவ்"

"ஆமாம்"

"இதோபார், எனக்கு உங்களைப் போன்ற ஆட்களையெல்லாம் பழக்கமில்லை. என் வக்கீல் சிபாரிசு செய்தார். தொழிலில் இப்போது நீங்கள்தான் நம்பர் ஒன் என்று"

"உங்கள் வக்கீலுக்கு நாங்கள் கடமைப் பட்டிருக்கிறோம், சார்"

ஜோதிராமன் திடீரென்று ஸ்விட்ச் அணைக்கப்பட்டவர் போல மறுபடியும் மௌனமானார். மேஜையிலிருந்த டெலிபோன் ஒயரை விரலில் திருகினார்.

"என் பெண் இறந்து விட்டாள்" என்றார் முன்னறிவிப்பின்றி, "ஒரே மகள் எனக்கு. வீட்டில் அம்மா இருந்திருந்தால் ஒழுங்காக வளர்ந்திருப்பாளோ, என்னவோ... என்னிடத்தில் முட்டாள்தனமாகவும், முரட்டுத்தனமாகவும் வளர்ந்து விட்டாள்"

காற்றை விரலால் குத்தினார்.

"என்னுடைய சொத்து எவ்வளவு தெரியுமா? ஆறு கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது. ஒரே வாரிசு அவள்தான். ஆனால் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை அவள்"

"கேன்ஸரா, ஹார்ட் அட்டாக்கா?"

"அப்படிச் செத்திருந்தால் அவள் சமாதியைச் சுற்றி ரோஜா தோட்டம் போட்டிருப்பேனே... என் பேச்சை மீறிக் கொண்டு எவனோ இரண்டாந்தரப் பையன் பின்னால் ஓடிப்போனாள். அவனுடைய குறி எல்லாம் அவளுடைய பணத்தின் மீதுதான் என்பதை புரிந்து கொள்ள மறுத்தாள். அவளை விட்டுப் பிரிய வேண்டும் என்பதற்காகவே, அவனைக் கல்யாணம் செய்து கொண்டால் சொத்தில் பைசா கூடக் கிடையாது என்று மிரட்டினேன். அவள் பணிந்து விடுவாள் என்று நம்பி... ஆனால் பிடிவாதமாயிருந்தாள். உங்கள் பணம் சல்லிக்காசு வேண்டாம் என்று சவால் விட்டு விட்டுப் போனாள். எட்டு மாதம் கூட வாழவில்லை அவனோடு, செத்துப் போய்விட்டாள், இல்லை, சாகடிக்கப்பட்டு விட்டாள்"

பேசும்போது அவ்வப்போது கோபம் அவரது உதடுகளை இழுத்தது. பற்கள் இறுகின. முன் வழுக்கை பளபளத்தது.

"மர்டரா?" என்றான் நரேந்திரன், தன் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து.

"மர்டர்... பச்சை மர்டர். ஆனால் சாமர்த்தியமாக அதை விபத்து போல செட் அப் செய்துவிட்டான், பாவி"

"பாவியின் பெயர் என்ன?"

"ராதாகிருஷ்ணன்... கே.எம்.ஆர் ஆட்டோ மொபைல்ஸில் சூபர்வைஸராக தொள்ளாயிரத்து சொச்சம் பிச்சை வாங்கிக் கொண்டிருக்கிறான்"

"விபத்து எப்படி நடந்தது?"

ஜோதிராமன் தன்னுடைய சேற்று நிற கோட்டை தளர்த்திக் கொண்டார்.

"கார் கிராஷ்.. விபத்தில்லை, அது அவன்தான் பிரேக்கையோ, இல்லை வேறு எதையோ கெடுத்து வைத்திருப்பான்"

"அவளைக் கொல்வதால் அவனுக்கு என்ன லாபம்?"

"மூன்றரை லட்சம். மூன்றரை லட்சத்திற்கு அவள் பெயரில் இன்சூரன்ஸ்

எடுத்திருந்தான். பணம் முழுவதும் இப்
போது அவனுக்குக் கிடைக்கப் போகிறது..."
"இன்சூரன்ஸ் கம்பெனியில் கண்ணை
மூடிக் கொண்டு கொடுத்து விடமாட்டார்
கள்.. உங்களுக்கு வந்த சந்தேகம்
அவர்களுக்கும் வந்திருக்குமே?"
"அவர்களுக்கு வேண்டுமானால் அது
சந்தேகமாய் இருக்கலாம்... எனக்கு சந்தேகம்
எதுவும் இல்லை. நிச்சமாகத் தெரியும். இது
அவன் போட்டிருக்கும் வேலைதான்"
"உங்கள் மகள் பெயர் என்ன சொன்னீர்
கள்?"
"இன்னும் சொல்லவில்லை, அனுசூயா"
"அனுசூயாவை ராதாகிருஷ்ணன் கொன்
றானா? என்று கண்டு பிடிக்க வேண்டுமா,
நான்?"
"கொன்றானா என்பது கேள்வி இல்லை.
எப்படிக் கொன்றான் என்பதுதான் நீ
கண்டுபிடிக்க வேண்டும். அதுவும் சீக்கிரம்...
இன்சூரன்ஸ் பணம் அவன் கைக்குப்போய்
சேர்வதற்கு முன்னால்!"
"விபத்து எப்பொழுது நடந்தது"
"டிசம்பர் மாதம். உருத்தெரியாமல்
எரிந்து போயிருந்தாள் அனுசூயா. அப்
பொழுதே எனக்கு சந்தேகம்தான். ஆனால்
இன்சூரன்ஸ் பற்றி எனக்கு அப்போது
தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால்,
அப்பொழுதே உன்னை கூப்பிட்டு அனுப்
பியிருப்பேன். அவன் கைகளில் விலங்கு
ஏற்றி கோர்ட்டில் அவனை ஆஜர்படுத்தி,
யாருமில்லாத தனிமைச் சிறையில் ஆயுள்
தண்டனை கொடுக்க வேண்டும். அப்போது
தான் என் மனசு ஆறும்.."
"மறுபடி மறுபடி உங்களைக் கேட்க
கஷ்டமாயிருக்கிறது. விபத்தைப் பற்றி இன்
னும் பல தகவல்கள் எனக்குத் தேவைப்
படுகின்றன யாரிடம்?"
"யாரிடமும் கேட்க வேண்டாம்! விபத்



தைப் பற்றி வந்த நியூஸ் ரிப்போர்ட்ஸ்,
போலீஸ் விசாரணை, அடாப்ஸி அறிக்கை
எல்லாம் இந்த ஃபைலில் இருக்கின்றன"

## 2 இறுதி யாத்திரை



கடற்கரை.
புறாவுக்கு போட்ட கடலை போல
அங்கங்கே சிதறியிருக்கும் மக்கள். கறுப்புப்
பெயின்ட் அடித்து, கால் சாய்ந்து நின்ற
படகின் கீழ் நரேந்திரனும், வைஜயந்தியும்
உட்கார்ந்திருந்தார்கள். உடலில் விளை
யாடிய காற்று வைஜயந்தியின் தலைமுடியுட
னும் விளையாடியது. அடிவானம் சிவந்து
இருளாகிக் கொண்டிருந்தது. வைஜயந்தி
யின் லிப் அவுட் முகம் நரேந்திரனை
ஈர்த்துப் பிடித்திருந்தது. அவள் பேசும்
பொழுது உதடுகளின் அசைவு அவனுள்
கிளர்ச்சியை உண்டு பண்ணியது. மெல்ல
அவளுடைய ஒற்றைக் கையை பற்றிக்
கொண்டான்.
"சாயந்திரம் போயிருந்தாயே, ஜோதிராம
னைப் பார்க்க, என்ன விஷயமாம்?" என்றான்
வைஜயந்தி மணலைக் கையில் அள்ளி
நூலாய் வழியவிட்டு.
"என் ஜாதகம் கேட்டார் அவர் பொண்
ணுக்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்
கிறாராம்"
வைஜயந்தி நண்டை உதறுவது போல்
அவன் கையை உதறினாள். "ஏன்? பேட்
டையில் வேறு நல்ல ரவுடி கிடைக்கவில்லை
யாமா அவருக்கு?"
"கேட்டார் என்றுதானே சொன்னேன்.
கொடுத்தேன் என்றா சொன்னேன்? என்ன
பொறாமையடா இந்தப் பெண்களுக்கு"
"போகலாமா?" என்றாள் வைஜயந்தி.
"தப்புதான்... உன் மூடைக் கெடுத்தது
தப்புதான். அதற்காக இவ்வளவு சுருக்கமாக
கிளம்ப வேண்டுமா, வைஜ்? ஜோதிராமன்

எதற்குக் கூப்பிட்டார் என்று சொல்லட்டுமா?"

"இஷ்டமிருந்தால் சொல்" வைஜயந்தி அலைகளை பார்த்து திரும்பி உட்கார்ந்தாள்.

"ஜோதிராமனுக்கு ஒரே மகள். பெயர் அனுசூயா. அம்மா இல்லாத குழந்தை. அப்பா பணத்தைத் துரத்திக் கொண்டிருந்த நேரத்தில், தனக்கு ஒரு ஆளைத் தேடிக் கொண்டு விட்டது அந்தக் குழந்தை"

"குழந்தைக்கு எவ்வளவு வயசு?"

"இருபத்தியிரண்டு. மன்மதனின் பெயர் ராதாகிருஷ்ணன்"

"அனுசூயா - ராதாகிருஷ்ணன்... நன்றாயிருக்கிறதில்லை பேர் காம்பினேஷன்?"

"காதில் விழுந்தால் உன்னைத் தூக்கி வங்காள விரிகுடாவில் மூக்கி விடுவார் ஜோதிராமன்"

"காதலை அவர் அப்ரூப் பண்ணவில்லையா?"

"அவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் சல்லிக் காசு கிடையாது என்று கூட மிரட்டியிருக்கிறார். பெண் ஓடிவிட்டது. அவன் கே.எம்.ஆர் ஆட்டோமொபைல்ஸில் சூபர்வைஸராம். எட்டுமாதம் ஆகியது ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொண்டு... போன மாதம் இரண்டு பேருமாக கொடைக் கானல் போயிருந்தார்களாம்.... அனுசூயாவுடைய தோழி வீட்டிற்கு போன இடத்தில் சும்மா இருந்திருக்கக் கூடாதோ? காரைக் கொஞ்ச தூரம் ஓட்டிப் பார்க்கிறேன் என்று அனுசூயா கிளம்பியிருக்கிறாள்"

"காரெல்லாம் வைத்துக் கொள்கிற அளவு வசதி இருந்தா?"

"ராதாகிருஷ்ணன் எங்கே வேலை செய்கிறான்? ஆட்டோமொபைல் ஓர்க் ஷாப்பில் ஒரு கார் கிடைப்பது கஷ்டமா அவனுக்கு? சாம்பல் நிற அம்பாஸிடர் கார் நம்பர் TMI -



4031 காரை அனுசூயா தனியே எடுத்துக் கொண்டு மலைப்பகுதியில் கிளம்பியிருக்கிறாள். இரண்டு நிமிடம் கூட ஆகவில்லையாம். அடுத்த திருப்பத்திலோ அதற்கடுத்த திருப்பத்திலோ கார் ரோடை விட்டு வெளியே போய் குட்டிச் சுவரையெல்லாம் மோதிக்கொண்டு செங்குத்தாய்... ஃப்ரெண்டும் ஓடிப் பார்த்திருக்கிறார்கள். கீழே விழுந்த கார் டமார் என்று வெடித்து பள்ளத்தில் விழுந்து விட்டது. சத்தம் கேட்டு ராதாகிருஷ்ணனும் பார்க்க, அனுசூயாவுடன் கார் பற்றி எரிந்திருக்கிறது. அப்புறம் அவர்கள் தகவல் கொடுத்து ஃபயர் சர்வீஸ்காரர்கள் வந்து அந்த இருட்டுப் பள்ளத்தாக்கில் வெளிச்சம் போதாமல் கஷ்டப்பட்டு இறங்கித் தேடி எடுத்திருக்கிறார்கள். அனுசூயாவின் எரிந்து போன உடம்பை..."

"ச்சே, என்ன கொடுமைடா! பொண்டாட்டி செத்துப் போனதில் பாதிக்கப்பட்டது அந்த ராதாகிருஷ்ணன்தானே அப்புறம் ஜோதிராமன் எதற்கு உன்னைக் கூப்பிட்டார்"

"மூன்றரை லட்சம்"

"என்னது மூன்றரை லட்சம்?"

"இன்சூரன்ஸ் பணம் பத்தை பத்தையாக கிடைக்கப் போகிறது ராதாகிருஷ்ணனுக்கு"

"ஸோ, அவன்தான் க்ளோஸ் பண்ணியிருப்பானோ என்ற ஜோதிராமனுக்கு சந்தேகம்"

"எக்ஸாட்லி எப்படிக் கொலை பண்ணினான் என்று கண்டுபிடிப்பதற்காகத் தான் ஈகிள்ஸ் ஐ..."

"கல்யாணமாகி எட்டு மாதம் தான் ஆகிறது என்று சொன்னாயா?"

"ஆமாம்"

"மூன்றரை லட்சத்திற்கு பாலிஸி எடுக்க வேண்டுமென்றால் ப்ரீமியம் எவ்வளவு கட்ட வேண்டியிருக்கும்! ஒரு சாதாரண சூபர்

வைஸரால் அவ்வளவு முடிந்திருக்குமா நரேன்?"

"ஒவ்வொன்றாய்க் கண்டுபிடிக்கத்தானே போகிறோம்? இப்போதைக்கு ப்ரைம் சஸ்பெக்ட்"

"தமிழிலேயே சொல்"

"சந்தேக லிஸ்ட்டில் முதலில் இருப்பவன் ராதாகிருஷ்ணன்தான்"

"இவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்கப் போகும் இன்சூரன்ஸ்காரர்கள் இது உண்மையிலேயே விபத்துதானா என்று கவனிக்க மாட்டார்களா, நரேன்"

"விசாரிக்க வேண்டும்"

"முதல் மூவ் என்ன?"

"இதுதான்" என்று நரேந்திரன் கை வைத்த இடத்திலிருந்து அவன் கையைப் பிய்த்து எறிந்தாள் வைஜயந்தி. "அதற்குத் தான் இருட்டின பிறகு இன்டீஸன்ட்டான ஆட்களோடு பீச்சுக்கெல்லாம் வரக்கூடாது என்கிறது"

"ஏய்... ஏய்..."

"இன்றைக்கு நீ ரொம்ப ரொமான்டிக் மூடில் இருக்கிறாய். இன்னும் கொஞ்ச நேரம் இருந்தாலும் ஆபத்து கிளம்பு கிளம்பு..." வைஜயந்தி மணலைத் தட்டிக் கொண்டு எழுந்து விட்டாள். அவள் நீட்டிய கையை மனசில்லாமல் பிடித்து எழுந்தான் நரேந்திரன்.

மணலில் கால்கள் புதையப் புதைய நடந்து புல்லட்டை நிறுத்தியிருந்த இடத்திற்கு வந்தார்கள்.

நரேந்திரன் ஸ்டாண்டிலிருந்து புல்லட்டை எடுத்ததுமே அது சொத்தென்று உட்கார்ந்து விட்டது.

நரேந்திரன் குனிந்து பார்த்தான்.

"பின் வீல் பங்க்சர்" என்றான் உதடுகளைப் பிதுக்கி.

"ஐயையோ. இப்போது என்ன செய்வது?"



"போட் பிடித்து பெசன்ட் நகர் போக வேண்டியதுதான்"

"நரேன் விளையாடாதே!" வைஜயந்தி தார்சாலையை ஹைஹீல்ஸால் உதைத் தாள்.

"எனக்குத் தெரிந்து பீச் ரோட்டில் பங்க்சர் ஒட்டுகிற கடை எதுவும் கிடையாது"

"நரேன், வயிற்றில் புளியைக் கரைக்கிறது"

"இங்கே என்ன மீனாட்சியம்மாள் புத்தகத்தையா திறந்து வைத்திருக்கிறோம்? புளியைக் கரைக்காதே, உப்பைக் கொட்டாதே என்று... இரண்டாவது விளக்குக் கம்பம் வரை நான் தள்ளுகிறேன். அப்புறம் இரண்டு விளக்குக் கம்பங்களுக்கு நீ தள்ளு. இப்படி மாற்றிமாற்றி தள்ளிக் கொண்டு போய் விடுவோம்"

"இது என்ன அட்லஸ் சைக்கிளா, இல்லை பி.எஸ்.ஏ.சாம்பியனா? புல்லட்டை ஸ்டாண்ட் போட்டதற்கே எனக்கு ஒரு பாட்டில் அமிர்தாஞ்சனம் செலவாயிற்று இடுப்பைப் பிடித்துக் கொண்டுவிட்டது"

"இங்கேயா..."

"இருக்கும் ஆத்திரத்திற்கு எட்டி ஒன்று விட்டேனென்றால் உன் இடுப்பு சுளுக்கிக் கொள்ளும் ஆகிற வழியைப் பார்"

"இன்னா சார் பங்க்சரா...?"

சலங் சலங் என்று மணியடித்துக் கொண்டே வந்து அவர்கள் அருகில் க்ரீய்ச் என்று பிரேக் அடித்தது ஒரு ரிக்ஷா.

"ஆஞ்சநேயா எப்படியப்பா கரெக்டாக மோப்பம் பிடித்துக் கொண்டு வந்தாய்?"

"இங்கே டியூப் ஒட்டற கடை எதுவும் கெடயாது சார் இராயப்பேட்டைதான் போவணும்"

"வீலைக் கழற்றி எடுத்துப் போய் விடலாமா?" சார்

"இன்னாத்துக்கு

ரோதனையெல்லாம்? வண்டியைத் தூக்
அப்படியே ரிக்ஷால வச்சமா, எறிக் கு
தினமா, பங்க்சர் ஒட்டினமா, அங்கேர்ந்
அப்படியே புறப்பட்டமான்னு"

"நீ என்றைக்கு வாக்கியத்தை முடித்
என்றைக்கு வண்டியை ஏற்றுவது? கொ
கை கொடு"

"ஏ... ஏ ஐலேஸா ஏ ஏ ஐலேசா" என்
அவன் பாட்டெல்லாம் ஜோராகப் பா
னானே தவிர சும்மா ஹேண்டில் பாரை
தொட்டுக் கொண்டு இருந்தானே தவி
புல்லட்டின் எடை முழுவதையும் நரேந்திர
தான் சமாளித்து ரிக்ஷாவில் ஏற்ற வேண்டி
தாயிற்று.

ஏற்றி முடித்ததும் விமானம் போல மூச்
விட்டுக் கொண்டு நரேந்திரன் ரிக்ஷாவி
ஏறி அமர்ந்தான். பக்கத்தில் தட்டிக் காட்
வைஜயந்தியை உட்காரச் சொன்னான்.

கீய்ங் கீய்ங் என்று எண்ணெய்ப் ப
யுடன் சக்கரங்கள் சுழன்றன. ஒவ்வொரு
கஜத்திற்கும் ஒருமுறை ரிக்ஷா விநோத
மாகக் குலுங்கியது.

"வைஜ் குனிந்து பார் சக்கரம் ரவுண்டா
இருக்கிறதா இல்லை சதுரமாக இருக்கிறத
என்று"

"இன்னா சார் பங்க்சர் வண்டி வச்சி
கினு நம்ம வண்டியை கிண்டல் பண்றியே?

"உன் பெயர் என்னப்பா?"

"சடலைங்க"

"வண்டி இந்த குலுக்கு குலுக்கிறதே
சடலை?"

"டயர் பூடிச்சி சார். ரோடா போட்டு
வச்சிருக்கான் மெட்ராஸ்ல? டயர் இன்னா
துக்காவும்? கிளிஞ்ச டயருக்கு ஒட்டு
போட்டிருக்கேன். அதான் இந்த ஆட்ட
ஆடுது. மணி இன்னா சார்?"

நரேந்திரன் ஸோடியம் வெளிச்ச
விலகுமுன் வாட்சைப் திருப்பி நேரா



பார்த்து "ஏழு ஐம்பது" என்றான்.

"அச்சச்சோ எட்டு மணிக்கு இன்னொரு
எடத்துல நான் இருக்கணும்பா"

"கவர்னருடன் அப்பாயிண்ட்
மெண்ட்டா?"

அவன் நரேந்திரனின் கிண்டலை
ரசித்ததாகத் தெரியவில்லை. புதுவேகத்
துடன் சீட்டில் உட்காராமலேயே நின்று
பெடலை மிதித்தான்.

"வண்டி எப்படி சல்லுன்னு போவுது
பாத்தியா வாத்தியாரே"

"நேராக சொர்க்கத்துக்குத்தான் கூட்டிப்
போகிறாய் போலிருக்கிறது"

"அக்காங் நைனா எப்டீ கரெக்டா
கண்டுபிடிச்சே"

தெரு சரிந்து இறங்கியதாலோ என்னவோ
ரிக்ஷா சளைக்காமல் ஜெட் வேகத்தில் ஓடி
திடீரென்று ஒரு இடத்தில் சக்கரங்களில்
திரும்பியது. நடைபாதையில் அரிக்கேன்
வெளிச்சத்தில் பஜ்ஜி, பரோட்டா, வடை,
பக்கோடா என்று கடைகள்.

ரிக்ஷா க்ரீய்ச்ச்ச்ச் என்று பிரேக் அடித்து
நிறுத்தத்திற்கு வந்தது. கண்ணுக்கெட்டிய
தூரம் வரையிலும் பங்க்சர் ஒட்டும் கடை
எதுவும் தென்படவில்லை.

"வாத்யாரே, வந்துட்டியா?" என்று ஒரு
குரல் கூவியது. நடைபாதையிலிருந்து
தள்ளாடி இறங்கி, சடலையின் தோளில் கை
விழுந்தது.

நரேந்திரன் அப்போதுதான் அந்தப்
போர்டைப் பார்த்தான்.

'மலிவு மது விற்பனை நிலையம்' என்ற
பெயர் அடிக்கப்பட்டு, 'நாட்டு மதுக்கடை'
என்று சாக்பீஸில் எழுதப்பட்டிருந்தது.

"அடப்பாவி... வண்டி பங்க்சர் போட
வேண்டாமா நான்?" நரேந்திரன் கீழே
இறங்கி சடலையின் முக வாயைப் பிடிக்க,
அவனுடைய தோழன் நரேந்திரன் கையை

விலக்கினான்.

"தொழிலாளி வவுத்துல அடிக்காதப

போ... ரிக்ஷா வராது"

நரேந்திரன் வைஜயந்தியைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"உன்னைப் பார்த்தாலும் பாவமாகத்தான் கீது குட்டிய வேற இட்டாந்திருக்கற வேணா ஒண்ணு செய்யி... ரிக்ஷாவை நீ எடுத் துக்கினு போ இன்னும் நாலு தெரு தள்ளி ஒரு அரசமரத்தாண்டை இருக்குது ட்யூப் ஒட்டுற கடை. அங்க ரிக்ஷாவை ஓட்டிட்டு போ சுடலை ரிக்ஷாவை எவனும் தைரியமு தொட மாட்டான்"

"சுடலை நீ கொஞ்சம் மனது வைத் தால்..."

"ஊச்.. நம்மளை விடு வாத்யாரே பங்க்சர் கடைல சிவான்னு ஒரு பேமான் இருப்பான். அவனாண்டை நம்ம டயரையும் கவனிக்கச் சொல்லு"

சுடலை சரேலென்று தட்டிக்கு பின்னால் போய்விட்டான்.

## 3 இரவு யாத்திரை 

பங்க்சர் ஒட்டிக் கொண்டிருந்த நேரத்தில் வியர்த்து கக்கத்தோடு ஒட்டிக் கொண்டிருந்த சட்டையை உதறிவிட்டுக் கொண்டு, தெரு முனையில் பெட்டிக்கடை வரை நடந்தான் நரேந்திரன்.

வைஜயந்தி சலிப்போடு பின் தொடர்ந் தாள்.

"ஆல்ரெடி லேட்டாகி விட்டது. எட்டரை மணிக்கு நான் ஒரு இடத்தில் இருக்க வேண் டும்" என்றாள்.

நரேந்திரன் சரேலென திரும்பிப் பார்த்தான் "பேசாமல் சுடலையோடு உள்ளே போயிருக்க வேண்டியதுதானே"

"பூ... ஸ்டின்ச்கிங் ராஸ்கல்... நான் சொன் னது எங்கள் வீட்டை, என் ஃப்ரெண்ட் ஒருத்தி வருவதாகச் சொல்லியிருக்கிறாள்"

நரேந்திரன் கடையில் சிகரெட் வாங்கி எலக்ட்ரி நெருப்புக்கு முத்தம் கொடுத்து பற்ற வைத்துக் கொண்டு நிமிர்ந்தபோது கண்கள் அகலமாய் விரிந்தன.

"வைஜ்... நாம் கரெக்டான இடத்திற்குத் தான் வந்திருக்கிறோம்"

"என்ன உளறுகிறாய்?"

"அங்கே பார்"

அடுத்த தெருவின் மையத்திலிருந்து பெரிய ஒற்றைக் கல் கட்டிடத்தை வைஜ யந்தி இப்போதுதான் கவனித்தாள்.

"கே.எம்.ஆர் ஆட்டோமொபைல்ஸ்" என்று சத்தமாகப் படித்தாள்.

"நம் ஹீரோ இங்கேதான் ஒர்க் பண்ணு கிறான்"

"விளக்கையெல்லாம் அணைக்க ஆரம் பித்து விட்டார்கள். கடை மூடுகிற நேரம் இப்போது போய் என்ன பண்ணப் போகி றாய்?"

நரேந்திரன் வைஜயந்தியின் கேள்வியை கவனிக்கவில்லை.

ஒர்க்ஷாப்பிலிருந்து யூனிஃபார்மோடு வெளிப்பட்டு, பெட்டிக்கடைக்கு வந்து சிக ரெட் பற்ற வைத்தவனை நெருங்கினான்.

"சூப்பர்வைஸர் இருக்கிறாரா?"

"யாரு... ராதாகிருஷ்ணனா?" அவன் வைஜயந்தியை அடிக்கண்ணால் பார்த்துக் கொண்டே புகையை ஊதினான்.

"அவரேதான்"

"இன்னும் அரை அவர் ஆகும் அவர் கிளம்ப வண்டி விட்டிருக்கீங்களா?"

"விட வேண்டும்... எப்படி... பைக்கில் போவாரா அல்லது?"

"பைக்ல இன்னாதுக்குப் போறது கைல பத்து இருபது வண்டி வச்சிகினு இன்னிக்கு பச்சை ஃபியெட் எடுத்துக்கினு போவாரு..."

"சும்மாதான் கேட்டேன்?"

அதற்கு மேல் அவன் நரேந்திரன் பால் ஆர்வம் இல்லாமல் ஒரு பான் பராக்கை வாங்கி பாக்கெட்டில் இட்டுக்கொண்டு ஒர்க்ஷாப்பிற்குள் நடந்தான்.

"ரைட்" என்றாள் வைஜயந்தி வேகமாக நடந்து விலகி.

பங்க்சர் கடையில் புல்லட் ரெடியாகியிருந்தது.

நரேந்திரன் பணத்தை செட்டில் செய் தான்.

புல்லட்டை உதைத்துக் கிளப்பினான்.

தெருமுனை திரும்பி நிறுத்தினான். காத் திருந்தான்.

இருபது நிமிடங்களுக்குப் பிறகு பச்சை ஃபியட் பின் பக்கத்தை முதலில் வெளியே கொண்டு வந்து திரும்பி, வெகு லாவகமாகக் கிளம்பியது. உடன் சடுதியில் வேகம் பிடித்தது.

நரேந்திரன் புல்லட்டில் கியரைப் பொருத்தினான்.

மெலிந்திருந்த சென்னையின் இரவுப் போக்குவரத்தில் அந்தக் காரைத் தொடர் வது கஷ்டமாயில்லை.

சில சந்துகளை சமாளித்து, ஐஸ் ஹவுஸ் போலீஸ் ஸ்டேசனைத் தாண்டி, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் வேகம் குறைத்து, வாலாஜா சாலையில் திரும்பி, சிந்தாதிரிப்பேட்டையில் நுழைந்து, எழும்பூரை கார் சமீபித்தது.

ராதாகிருஷ்ணன் எதில் கெட்டிக்காரனோ இல்லையோ, கார் ஓட்டுவதில் மகா சமர்த்தன் என்று நரேந்திரனுக்குப் புரிந்தது.

மெர்க்குரி விளக்குகள் அழுது வடிந்த ஒரு வளைவிற்குள் கார் நுழைந்ததுமே நரேந்திரனுக்குப் புரிந்துவிட்டது.

ஹோட்டல் சொர்ணப்பிரகாஷ்.

பர்மிட் ரூம் மற்றும் மஸாஜ் கிளப் மற்றும் இரவு நடனங்கள் மற்றும் காசிருந்தால் சொர்க்கபுரி.

காரை நிறுத்தி விட்டு இறங்கியவன் ஆறடி இரண்டங்குலம் இருந்தான்.

ஹோட்டல் கார் பார்க்கிங் வெளிச்சத்தில் அவனுடைய அகலமான தோள்களும், அகன்ற மார்பும் மெல்லிய பனியன் சட்டையை மீறி புலப்பட்டன.

உறுதியான எலும்புகளால் உருவாக்கப்பட்ட சதுரமான முகம், அகலமான நெற்றி, கறுத்த புருவங்கள், நீளமான நாசி, மெல்லிய லிப்ஸ்டிக் போட்டிருப்பானோ என்று சந்தேகிக்க வைக்கும் ரோஸ் நிற உதடுகள்.

காரின் கதவை அறைந்து சாத்திவிட்டு ஹோட்டலுக்கு அவன் நடந்த நடையில் ஒரு தாளம் இருந்தது. நடந்து கொண்டே சிகரெட்டை வாயில் பொருத்தி கைகளைக் குவித்து லைட்டர் ஜோதியால் பற்ற வைத்து கண்களைச் சுருக்கிப் புகையை இழுத்ததில் கம்பீரம் இருந்தது.

அனுசுயா தலையும், காலுமாய் அவனிடத்தில் சரண் அடைந்தது ஆச்சரியமில்லை என்றே தோன்றியது.

நரேந்திரன் கிட்டத்தட்ட அவனுடைய குதிகாலிலேயே பின் தொடர்ந்தான்.

ரிசப்ஷனில் இருந்தவன் பரிச்சயப் புன்னகை செய்து, "குட் ஈவினிங் ராதாகிருஷ்ணன்" என்றதும் நரேந்திரன் சரியான ஆளைத்தான் பின் தொடர்ந்து வந்திருக்கிறோம் என்று ஆறுதலானான்.

ராதாகிருஷ்ணன் பதில் வாழ்த்து தந்துவிட்டு லிஃப்டிற்குள் நடந்தான். நரேந்திரன் அவனோடு லிஃப்ட்டில் பயணம் செய்த போது, ராதாகிருஷ்ணனை இன்னும் அருகாமையில் பார்க்க முடிந்தது.

இருவருக்கும் இடையிலான இறுக்கத்தைப் போக்குவதற்காக, நரேந்திரன் ஒரு

சிகரெட்டை வாயில் பொருத்திக் கொ
டான் பாக்கெட்டுக்களில் தீப்பெட்டிக்காக
தட்டிப் பார்த்துவிட்டு, ராதாகிருஷ்ணனை
அர்த்தத்துடன் நிமிர்ந்து பார்த்தான்.

ராதாகிருஷ்ணன் லைட்டரை க்ளிக்
ஜோதி ஏற்படுத்தி நரேந்திரனின் சிகரெ
நுனியை சிகப்பாக்கினான்.

"தேங்க்யூ... பார் இரண்டாவது மா
தானே?"

"ஆமாம்" ராதாகிருஷ்ணன் குரல் அடக்
வாசித்த இடியைப் போல கரடு முரடாயிரு
தது.

"டான்ஸ் ஹால்?"

"அதுவும் இரண்டாவது மாடிதான்"

"தேங்க்யூ"

இரண்டாவது மாடியில் லிஃப்ட் கத
திறந்ததும் ராதாகிருஷ்ணனை முன்னே
விட்டு நரேந்திரன் ஷூ லேஸை சரிப்படு
திக் கொண்டான்.

'ரம்பா ஹால்' என்று கண்ணாடியி
செதுக்கப்பட்ட கதவைத் திறந்து அவ
நுழைந்தான்.

நரேந்திரன் அதே கதவைத் திறந்ததும்
நெஞ்சில் ஒரு கை பதிந்து தடுத்தது
"டிக்கெட்?" கேட்டவன் ரூம் உயரத்திற்கு
கதவு அகலத்திற்கு இருந்தான்.

"டிக்கெட் இங்கே தானே?"

"இல்லை, கீழே ரிசப்ஷனில் வாங்
வாருங்கள்"

ராதாகிருஷ்ணன் டிக்கெட் எதுவு
வாங்கவில்லையே! ஆயுள் சந்தா ஏதாவ
கட்டி விட்டானா அல்லது...

அல்லது? நரேந்திரனுக்கு விடை தெரிய
வில்லை.

ரம்பா ஹாலுக்குள் இப்போது ரை
ராயலாக நுழைந்தான்.

வட்ட வடிவமான ஹால். சுவரெங்கு



கண்ணாடிகள்.

மையத்து உயரக் குறைவான மேடையில் வர்ண வெளிச்சம் பொழிந்து கொண்டிருந்தது. மேடையின் ஒரு துணுக்கில் அடுத்த இரண்டு மணி நேரத்திற்கு காது டமாரத்தைக் கிழிக்க கித்தாரை நீட்டிக் கொண்டிருந்தான் ஒரு அல்போன்ஸ்.

நரேந்திரன் மேடையிலிருந்து ஒதுக்கமான ஒரு மேடையில் உட்கார்ந்தான். சுற்றிலும் பார்வையை மேயவிட்டு, ராதாகிருஷ்ணனைத் தேடினான்.

ராதாகிருஷ்ணனைக் காணவில்லை.

நரேந்திரனுக்கு அடிவயிற்றில் சுரீர் என்றது டிக்கெட் வாங்க அவன் கீழே போன நேரம், ராதாகிருஷ்ணன் தப்பித்துப் போய் விட்டானா? ஒருவேளை பாருக்குப் போயிருப்பானோ?

நரேந்திரன் சீட்டிலிருந்து எழுந்திருக்கலாம் என்று தீர்மானித்த நேரம் அவன் மேஜையில் ஒரு பச்சை வண்ண பிளாஸ்டிக் உறை விழுந்தது.

"யுவர் ஆர்டர் ப்ளீஸ்?"

துல்லியமான ஆங்கில உச்சரிப்பு. ரம்மியமான பர்ஃப்யூமின் மணம்"

இறக்கிக் கட்டிய பாவாடையும், தூக்கிக் கட்டிய ரவிக்கையுமாக நின்றிருந்த பெண்ணுக்கு இருபத்தெட்டு வயது இருக்கலாம். அவளுடைய மேப்பை வைத்துக் கொண்டு இனிமேல் டான்ஸ் ஆடுவது அர்த்தமில்லை என்று பேரர் உத்தியோகத்திற்கு தள்ளி விட்டார்களோ என்னவோ!

"வாட் வுட் யூ ஹேவ்?"

"நான் இங்கிலாந்திலிருந்து வரவில்லை. இங்கே பெசன்ட் நகர் குப்பத்திலிருந்துதான் வருகிறேன். தமிழிலேயே கேள்"

"ஹெ நாட்டி" என்று அவன் வயிற்றில் செல்லமாகக் குத்தினாள்.

ராதாகிருஷ்ணன் பற்றி இவளிடம் கேட்க

லாமா? அவன் உள்ளே நுழைந்த தோரணை யிலிருந்து அவன் இங்கே ரெகுலர் கஸ்டம ராக இருக்க வேண்டும் என்று தோன்றியது.

"நீ எப்போது ஃப்ரீயாவாய் பேபி?"

பேபி என்றழைக்கப்பட்டதில் அவள் மலர்ந்தாள்.

"டான்ஸ் ஆரம்பித்ததும் சார்"

"சும்மா எனக்கு கம்பெனி தா இங்கே உட் காரக் கூடாதா?"

"உட்காரலாம்... ஆனால் பில்லில் சேர்ந்து விடும்"

"கொடுப்பதற்கு ஒரு மகானுபாவன் இருக்கிறான் நீ வா..."

அவள் அடுத்த மேஜைக்கு நகர்ந்தாள்.

நேரத்தை வீணடித்துக் கொண்டிருக் கிறோமோ என்ற குற்ற உணர்வுடன் நரேந் திரன் கால்களை மெல்லத் தாளமிட்டுக் கொண்டிருந்தான்.

மியூசிக் குழுவினருக்கருகில் ஒரு சிறு கதவு இருந்தது. அதன் வழியேதான் பெண் கள் உள்ளே பிரவேசிக்கப் போகிறார்கள் என்று நரேந்திரன் கவனித்தான். கதவு திறந்தது. நரேந்திரனை ஆச்சரியப்பட வைத்து, ராதாகிருஷ்ணன் அந்த கதவு வழியே ஹாலிற்குள் நுழைந்தான். முன் வரிசையில் ஒரு மேடையில் உட்கார்ந்தான்.

உள்ளே போய் பெண்களோடு பேசி விட்டு வருகிற அளவு பரிச்சயம் இருக் கிறதோ என்னவோ! இப்போது அவன் உட்கார்ந்திருந்த இடத்தைத் தடங்கல் இல்லாமல் நரேந்திரனால் கண்காணிக்க முடிந்தது.

விளக்குள் அணைந்து எரிந்து முதல் பெண் பிரசன்னமானாள்.

கவலைகள், நிரம்பிய கண்களுடன், தாளத்திற்கேற்ப சாவி கொடுத்த பொம்மை போல் அவள் சுழன்று ஆடியதை நரேந் திரனால் ரசிக்க முடியவில்லை. மஞ்சள்



அரை டிராயரும் ஆரஞ்சு நிற லூஸ் சட்டை யும் அணிந்திருந்தாள். வயிற்றில் யாரோ சாடிஸ்ட்டின் சிகரெட் சுட்ட வடு.

அவளருகில் நாற்காலி அசையும் சப்தம் கேட்டது.

"நீங்கள் கேட்ட கம்பெனி" என்றாள் அவன் பீர் பாட்டிலை மேஜை மீது வைத்து.

"பேபி உன் பெயர் சொல்லவில்லையே"

"பேபி என்பதே எனக்குப் பிடித்திருக் கிறது"

"இந்த டான்ஸ் ஹாலுக்கு ஆயுள் சந்தா எவ்வளவு?"

"புரியவில்லை"

"ஆயுளுக்கும் இவ்வளவு பணம் என்று கட்டிவிட்டால் அப்புறம் டெய்லி டிக்கெட் வாங்க வேண்டாம் பார்..."

"அந்த மாதிரி சிஸ்டம் எதுவும் இங்கே கிடையாது"

"பொய் சொல்கிறாய் பேபி"

"உங்களிடம் நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்"

"அதோ முன் வரிசையில் உட்கார்ந் திருக்கிறாரே, மஞ்சள் பனியன் போட்டுக் கொண்டு ஒருத்தர்... அவர் டிக்கெட் எதுவும் வாங்காமல்தான் உள்ளே வந்தார்"

"அவனா?" பேபி சிரித்தாள். "அவன் கஸ்டமர் இல்லை... கெஸ்ட்..."

"யாருடைய விருந்தாளி?"

"ஸ்டெல்லாவின் விருந்தாளி. தினமும் வந்து டான்ஸ் முடியும் வரை குடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்து விட்டு ஸ்டெல்லாவை காரில் அழைத்துப் போய் விடுவான்"

"அதனால்தான் அவன் டான்ஸர்ஸ் ரூமிற்குள் தைரியமாகப் போனானா?"

சுற்றியிருந்தவர்கள் திடீரென்று ஹோ என்று கூச்சல் எழுப்ப, நரேந்திரனின் கவனம் மேடைக்குப் போனது. நாட்டியப்

பெண் கடைசி வரிசையில் இருந்த ஒரு ஆளைப் பார்த்து சைகை செய்ததால் வந்த ஆர்ப்பரிப்பு.

"ஸ்டெல்லா அவனுடைய காதலியா?"

"ஏன் மறுபடி மறுபடி அந்த ஆளைப் பற்றியே விசாரித்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"உண்மையைச் சொல்லட்டுமா?" நரேந்திரன் பாக்கெட்டிலிருந்து ஐம்பது ரூபாய் நோட்டை உருவி மடித்து மேஜையில் வைத்து அவள்புறம் நகர்த்தினான். அவள் அதை கழுகு கொத்துவது போல கொத்தி, இருந்த துக்கிளியூண்டு ஜாக்கெட்டிற்குள் மறைத்தாள்.

"அந்த ஆளுக்கு கல்யாணம் நிச்சயமாக விருக்கிறது. பெண் வீட்டார் அவனைப் பற்றி விசாரிப்பதற்காக என்னை அனுப்பியிருக்கிறார்கள்" என்றான், நரேந்திரன், கண் இமைக்காமல்.

"அந்த ஆளுக்குக் கல்யாணமா?" பேபியின் கண்கள் அகல விரிந்தன. "குடியும், நைட் கிளப்பும்தானே அவன் வாழ்க்கை! ஏற்கனவே நல்ல இடத்தில் வேலை வாங்கித் தருகிறேன் என்று இன்னொரு டான்ஸரைக் கூட்டிப் போனான் என்ன பண்ணினானோ தெரியவில்லை. அவள் இவனை விட்டு விட்டு ஓடியே போய் விட்டாள் என்று ஸ்டெல்லா சொன்னாள்"

"மறுபடியும் இங்கே வரவில்லையா அவள்?"

"இங்கே எப்படி வருவாள்? இந்த ஹோட்டல் ஓனர் சந்தோஷ்க்கு அவளுக்கும் தகராறு என்றுதான் வேறு வேலை தேடிப் போனாள். கூட்டிப்போன ஆளும், ஓனரும் ரொம்ப நெருக்கமான தோஸ்த்துகள் வேறு... அவனை நம்பி பெண் கொடுக்க வேண்டாம் என்று சொல்லி விடுங்கள்... பாவம்"

"தேங்க்யூ" என்றான் நரேந்திரன்.



"பீர் சாப்பிடவில்லை?"

"பீர் என்னுடைய ப்ரெஸண்டேஷன். உனக்கு..." என்றான் நரேந்திரன். "ஓடிப் போனாளே ஒருத்தி அவள் பெயர் என்ன?"

"ஆனந்தி..."

"கம்பெனிக்கு தேங்க்ஸ்..." நரேந்திரன் எழுந்தான்.

## 4 இறுதி யாத்திரை

நரேந்திரன் ஊதுவத்தியை சுவரில் மோதி அணைத்தான். "பட்டாசு கொளுத்துகிற வத்தியையெல்லாம் வாசனை வத்தி என்று விற்று விடுகிறான்கள்... ச்சே.."

அந்த நிமிடத்தில் கதவு திறந்து வைஜயந்தி நுழைந்தாள்.

பிரவுன் நிறத்தில் கண்ணாடி வட்டங்கள் வைத்துத் தைத்த சுரிதார் அணிந்திருந்தாள்.

"நைட் நீ திரும்ப ரொம்ப லேட்டாகி விட்டது போலிருக்கிறது?" என்றாள் எடுத்தவுடனேயே.

"ஆமாம்... நைட் ஷோ ஔவையார் போயிருந்தேன்"

"ஹோட்டல் சொர்ணப்ரகாஷில் ஔவையார் சினிமாவெல்லாம் போட்டுக் காட்டுகிறார்களா, இப்போது?"

"நான் அங்கே போனதெல்லாம் உன் மூக்கில் எப்படி வியர்த்தது?"

"உன்னைக் கண்காணிப்பதற்காகவே மினி எகிள்ஸ் ஐ வைத்திருக்கிறேன், தெரியுமா?"

"அந்த ராதாகிருஷ்ணன் சந்தேகமான ஆசாமிதான். வைஜு... பெண்டாட்டி செத்து ஒரு மாசம்தான் ஆகிறது. துக்கத்தையே காணோம்.. ஜாலியாக ஷோக்குப் பேர்வழி போல செண்ட்டைப் பூசிக்கொண்டு, விஸ்கியும், நைட் கிளப்புமாக சுற்றிக் கொண்டிருக்கிறான். இதில் ஸ்டெல்லா

என்று ஒரு குட்டியை வேறு ராத்திரிகளில் தள்ளிப் போகிறானாம்..."

"பொண்டாட்டி போன துக்கம் தாங்காமல் தான் குடிக்கிறானோ என்னவோ?" என்றாள், வைஜயந்தி, கண்களைச் சிமிட்டி.

"இதையே நான் சொல்லியிருந்தால், காலிலிருப்பதை கழற்றியிருப்பாய்... ஜான் எங்கே, அவனிடம் அட்ரஸ் வாங்கி வரச் சொன்னேன். ஆளே காணவில்லையே?"

"என்ன அட்ரஸ்?"

"மலையிலிருந்து உருண்டு விழுந்து எரிந்ததே கார், அதன் ஓனருடைய அட்ரஸ்"

கதவு ஸ்ப்ரிங் போல் அடித்துத் திறந்தது. ஜான் சுந்தர் காலால் மூடிவிட முயற்சித்த கதவை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான்.

"காலங் காலையில் கம்ப்ளெயின்ட் பண்ண ஆரம்பித்து விட்டாயாக்கும்? இது என்ன குதிரை ரேஸ் முடிவு மாதிரி பார்த்து எழுதிக் கொண்டு வருகிற விஷயமா? அட்ரஸ் விசாரிக்க வேண்டாம், கண்டுபிடிக்க வேண்டாம்?"

"கிடைத்ததா இல்லையா?"

"ஜான் போய்விட்டு வெறுங்கையோடு வந்ததாக சரித்திரம் உண்டா?" ஜான்சுந்தர் துண்டுக் காகிதத்தை நீட்டினான்.

ராமாமிர்தம் பனியனும், சொட்டு நீலம் தோய்த்த வேட்டியும் முகத்தில் வழிகிற கேட்ராக்ட் கண்ணாடியுமாக தெரிந்தார். முகத்துத் தசையெல்லாம் லூஸாகி தொங்கின.

"யார் வேண்டும் உங்களுக்கு?"

"ராமாமிர்தம்!"

"அடியேன்தான்"

"நீங்கள்தான் வேண்டும்" என்றான் நரேந்திரன், தன் விசிட்டிங் கார்டை நீட்டி, வைஜயந்தி அரசியல்வாதி போல கும்பிட்டாள்.



"என்ன விஷயம்?"

மர நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்.

"உங்கள் பெயரில் ஒரு கார் இருந்தது இல்லையா, TMI 4031?"

"அந்தக் காரைப் பற்றித்தான் விசாரிக்க வந்தோம்"

"நீங்கள் இன்ஷூரன்ஸ் கம்பெனியா?" விசிட்டிங் கார்டை பார்க்காமலேயே.

"இல்லை... செத்துப் போன பெண்ணைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறோம்"

"கேளுங்கள். என்ன தெரிய வேண்டும் உங்களுக்கு"

"காரை எப்போது சர்வீஸிற்கு விட்டீர்கள்?"

"ஒரு நிமிஷம்" என்று எழுந்து போய் மர அலமாரியில் ஊதுவத்திப் பாக்கெட்டுகளுக்கு அடியிலிருந்து ஒரு பிரவுன் நிற டைரியை எடுத்து வந்துப் பிரித்துக் கொண்டார்.

"டிசம்பர் பத்தாம் தேதி காரை கே.எம். ஆரில் விட்டேன்"

"நார்மலாக சர்வீஸிற்கு எத்தனை நாளாகும்"

"கொஞ்சம் வெல்டிங் வேலையெல்லாம் இருந்தது... ஒரு வாரம் டயம் கேட்டிருந்தார்கள்"

"கொடைக்கானலுக்கு காரை உங்கள் பர்மிஷனுடன் தான் எடுத்துப் போனார்களா?"

"அது எதற்கு இப்போது?"

"எங்களுக்குத் தெரிய வேண்டும் சார்... ப்ளீஸ்"

"ராதாகிருஷ்ணன் என்று சூபர்வைஸர் இருக்கிறானே தங்கமான பையன்... ட்ரைய லுக்கு மெட்ராஸிற்குள் ஓட்டிப் பார்ப்பது தான் வழக்கம். ஆனால் பெண்டாட்டியை ஏற்றிக் கொண்டு ஜாலியாக கொடைக்

காணல் போயிருக்கிறான்... என்னிடம் பர்மிஷன் வாங்கவில்லை. ஆனால் கார் விழுந்து எரிந்து போனதும், பெண்டாட்டி செத்துப் போன துக்கத்தோடு முதலில் இங்கேதான் வந்தான். காரை எடுத்துக் கொண்டு போனதற்காக மன்னிப்பு கேட்டான். எப்படியும் இன்சூரன்ஸில் எனக்குப் பணம் கிடைக்கும் என்று தெரிந்திருந்தும், தன் கையிலிருந்து இருபதாயிரம் ரூபாய் கொடுத்தான்"

"எவ்வளவு?"

"இருபதாயிரம்"

"இன்சூரன்ஸில் எவ்வளவு கிடைக்கும்?"

"பழைய கார் அது. விற்றால் கூட முப்பது, நாற்பதுதாயிரம் தான் போகும் அவ்வளவுதான் கொடுப்பார்கள்"

"காரில் பிரேக் எல்லாம் ஒழுங்காக இருந்ததா?"

"சும்மா சொல்லக் கூடாது. இன்ஜின், பிரேக் எல்லாம் அட்டகாசமாய்த்தான் இருந்தது. மழைத்தண்ணீர் அடித்து அடித்து பாடியில் துருப்பிடித்து ஓட்டை விழுந்திருந்தது அவ்வளவுதான். அந்தப் பெண்ணுக்கு என் கார்தான் எமன் என்று எழுதி வைத்திருக்கிறது. போகிற போக்கில் காரையும் இழுத்துக் கொண்டு போய் விட்டது"

"இன்சூரன்ஸில் நீங்கள், ஏதாவது பொய் சொன்னீர்களா?"

"பொய் என்று ஏன் சொல்ல வேண்டும்? காரை என் பர்மிஷனோடு1'தான் எடுத்துப் போனான் என்று சொன்னேன். அப்பொழுது தான் க்ளெயிம் சீக்கிரம் செட்டிலாகும் என்றான் ராதாகிருஷ்ணன்"

"தேங்க்யூ சார்"

திநகர் ஐஸ்க்ரீம் பார்லர்.

கோன் ஐஸை நாவால் வருடிக் கொடுத்த



வைஜயந்தியை கடைக்காரன் ஒரு மாதிரிப் பார்த்தான்.

"ஏன் வைஜ், இருபதாயிரம் ரூபாய் களை காய்க் கொடுத்திருக்கிறான் என்றால்... அவனிடம் ஏது அவ்வளவு பணம்?"

"பர்ஸனல் ஸேவிங்க்ஸ் ஏதாவது இருக்கலாம்"

"நீ ஐஸ்க்ரீமைத் தீர்த்ததும் நாம் ஜோதிராமனைப் பார்க்கப் போறோம்" என்றான்.

"அவசரப்படுத்தாதே. இட் இஸ் ஸோ நைஸ்"

நரேந்திரன் கண்களை மூடிக் கொண்டு புல்லட்டில் சாய்ந்து உட்கார்ந்தான்.

ஐந்து நிமிடம் கழித்து தோள் தட்டப்பட்டது. "நரேன் ஓவர்"

ஜோதிராமன் வைஜயந்தியைக் கேள்விக் குறியுடன் பார்த்தார்.

"என் அஸிஸ்டென்ட் வைஜயந்தி"

"ஆண்களிடம் ஜாக்கிரதையாக இருந்து கொள்ளம்மா" என்றார் எடுத்தவுடனேயே.

"யெஸ், வாட் கேன் ஐ டூ ஃபார் யூ?" என்றார், நரேந்திரன் பக்கம் திரும்பி.

"உங்கள் மகள் கல்யாணமாகி போன போது, அவளுக்கு நீங்கள் சல்லிக்காக கூட தரவில்லை என்று தானே சொன்னீர்கள்?"

"ஆமாம்..."

"அனுசூயாவிடம் தனிப்பட்ட முறையில் ஏதாவது பணம் இருந்திருக்குமா?"

"அவளுடைய பர்ஸனல் அக்கவுண்ட் இருந்திருக்கலாம்"

"அதில் ஏதாவது அதிகப்படியான பணம் எடுக்கப்பட்டதா என்று பார்க்க முடியுமா?"

"நீங்கள் ஒன்று செய்யுங்கள்... அவள் அக்கவுண்ட் வைத்திருக்கும் பேங்க் எனக்குத் தெரிந்த பேங்க்தான்... அங்கே மேனேஜரைப் போய்ப்பாருங்கள். அவர் நீங்கள் கேட்கும் விவரமெல்லாம் தருவார்"

"அனுசுயாவிற்கு கார் ஓட்டும் லைசன்
இருந்ததா சார்?"

"லைசன்ஸாவது? அவள் டிரைவிங்
எக்ஸ்பர்ட்டம்மா. பெண்களுக்கான
ரேஸிலெல்லாம் கலந்து கொள்பவள் இ
தடவை முதல் பரிசே வாங்கியிருக்கிறா
எக்ஸ்பர்ட் டிரைவர் அவள்"

ஜோதிராமனுக்கு பழைய நினைவுக
நெஞ்சில் புரண்டன போலும். சிகரெட் பு
போல முகத்தை ஒரு சோகப்புகை வந்
மூடிக்கொண்டது. சோகம் கலந்த போ
அங்கே ஆத்திரம் குமுறியது. பற்களை
நறநறத்தார்.

"அவனைத் தூக்கில் போட வேண்டு
புறாக்குட்டி போல் இருந்தவளைக் கெடுத்
சீரழித்துக் கொன்றவனை சாகும்வ
தூக்கில் போட வேண்டும்"

"பேங்க் பெயர் தருவதாகச் சொன்ன
களே சார்" என்று அவருடைய மூடை மாற்
முயன்றான் நரேந்திரன்.

பேங்க் மேனேஜர் மீசை வைத்து
கொள்ளலாமா வேண்டாமா என்
குழப்பத்தில் இருந்தார் போல. மூக்குக்
கீழ் பேனாவை உதறியது போல மீசை. வ
வேற்று நாற்காலி உபசரித்து லெட்ஜரை
கொண்டுவரச் சொல்லி குறிப்பிட்
பக்கத்தையே திறந்து காட்டினார்.

"ரூல்ஸ்படி எந்த அக்கவுண்ட் பற்றியு
நாங்கள் வெளியே சொல்லவே கூடாது
ஜோதிராமனே கேட்டுக் கொண்டா
என்பதால் தான்"

"ரொம்ப நன்றி சார்"

அக்கவுண்ட்டில் ஆரம்பத்தில் நாற்பதா
யிரத்தி சொச்ச ரூபாய் இருந்தது.

மாதா மாதம் முதல் தேதியன்று இரண்டா
யிரத்தி ஐநூறு ரூபாய் பணம் எடுக்கப்
பட்டிருந்தது. டிசம்பர் மாதம் மட்டும்



மறுபடியும் ஐந்தாம் தேதி அக்கவுண்ட்டில் நூறு ரூபாய் பாக்கி வைத்து விட்டு இருபதாயிரத்து அறுநூறு ரூபாய் எடுக்கப் பட்டிருந்தது.

"இந்த அக்கவுண்ட்டை யார் ஆப்பரேட் பண்ணலாம்?"

"சிங்கிள் அக்கவுண்ட்தான். அனுசுயா மட்டும்தான் ஆப்பரேட் பண்ணலாம்"

வைஜயந்தி எந்தெந்த தேதிகளில் பணம் எடுக்கப்பட்டிருக்கிறது என்று குறித்துக் கொண்டாள்.

கடந்த எட்டு மாதத்தில் ஒரு தடவை கூட பணம் போடப்படவில்லை.

ஒவ்வொரு முறையும் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கவனித்தாள்.

மேனேஜருக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டார்கள்.

புல்லட்டில் போகும்போது, வைஜயந்தி கேட்டாள். "ராதாகிருஷ்ணன் பெரிய ஆளாயிருப்பான் போலிருக்கிறது நரேன், இல்லை"

"ம்?" நரேந்திரன் தலையை அசைத்தான். "இன்னும் கொஞ்சம் கிட்டே வந்து தான் பேசேன்... நீ சொன்னது எதுவும் காதில் விழவில்லை"

"ராஸ்கல்" என்று முணுமுணுத்து விட்டு வைஜயந்தி இன்னும் நெருக்கி உட்கார்ந்து அவன் வலது தோளில் முகவாய் பதித்து அதையே மறுபடியும் சொன்னாள்.

"நானும் நினைத்தேன்... திட்டமிட்டுத் தான் கொடைக்கானலுக்கு அவளை அழைத்துப் போகுமுன், அவள் அக்கவுண்ட்லிருந்து பணத்தை எல்லாம் வாங்கியிருக்கிறான் என்ன பொய்க் காரணம் சொன்னானோ? வாங்கிய பணத்தில் இருபதாயிரத்தை தூக்கி காருக்கு காம்பன் சேஷனாகக் கொடுத்து விட்டான்"

"அவள் அப்பா சொல்வதைப் பார்த்தா
கார் டிரைவிங் அவளுக்கு அட்டகாசமா
வரும் அப்புறம் எப்படி பள்ளத்தி
உருண்டாள்?"

"நேரே அந்த இடத்துக்கே போய்ப் பார்
தால்தான் தெரியும், வைஜ்..."

"கொடைக்கானல் போகும் போது
நானும் உண்டு தானே?"

"டு..."

"இன்றைக்கு நைட் என்ன ப்ரோகிராம்?

"எந்த சினிமா போகலாம்?"

"கிழிந்துவிடும்... நான் கேட்டது உ
ப்ரோகிராமை. நேற்று ஆரம்ப ஜரூர்தா
நடந்தது. இன்றைக்கு அந்த ராதாகிரு
ணனை மறுபடி ஃபாலோ செய்ய வேண்
டும்"

"இன்சூரன்ஸ் கம்பெனிக்கு போ
வேண்டும் என்றாயே?"

பார்க்க வேண்டிய பேப்பர்களை, டாக்கு
மெண்ட்களை காலண்டர், காலண்டரா
சுருட்டி வைத்துவிட்டு, தமிழக சட்டசபை
யைக் கலைத்தது நியாயமா இல்லையா
பட்டிமன்றத்தில் கலந்து கொண்டு அடுத்த
மேஜையைக் குத்திக் கொண்டிருந்த
ஆபீஸர் வேண்டா வெறுப்பாக வந்து
நாற்காலியில் உட்கார்ந்து "யெஸ்?"
என்றார்.

"டிசம்பர் பதினான்காம் தேதி கொடை
கானலில் ஒரு விபத்து நடந்து கார் எறிந்த
போனதே?" என்று நரேந்திரன் ஆரம்பித்
தான்.

"அதற்கு என்ன சார் இப்போது?"

"நீங்கள்தான் ஹஸ்பெண்டா?"

"இல்லை சார், கஸின் பிரதர்"

"தினம் இரண்டு தடவையாவது போன்
பண்ணிக் கேட்டுக் கொண்டிருக்கிறான்
புருஷன்காரன். அவனுக்காவது பணம் வந்த



சேரப் போகிறது... உங்களுக்கு என்ன சார்
இன்ட்டரஸ்ட்?"

"இன்சூரன்ஸ் க்ளெய்ம் செட்டில்
ஆனவுடன் தருகிறேன் என்று என்னிடம்
கொஞ்சம் கடன் வாங்கியிருக்கிறான் சார்,
அவன்..."

"பேப்பரெல்லாம் ஓகேயாகிவிட்டது.
சாங்ஷன் பண்ணியாகிவிட்டது. சொன்னால்
சிரிப்பீர்கள். செக் புக் தீர்ந்து போய்விட்டது.
பேங்கிலும் ஸ்டாக் இல்லை என்று இரண்டு
நாளாக ஹெட் ஆபீஸுக்கு தந்தி கொடுத்
துக் கொண்டிருக்கிறார்கள்... அனேகமாக
நாளைக்குப் போட்டு விடுவோம் சார்"

"அது ஆக்ஸிடெண்ட்தான் என்று
கன்ஃபார்ம் ஆகிவிட்டதா சார்?"

"நானேவா அங்கே போய் பார்த்தேன்?
விபத்து என்று போலீஸில் எழுதிக்
கொடுத்து விட்டார்கள். செத்தவன்
பொண்டாட்டி என்று இவன் அடையாளம்
சொல்லியாயிற்று... அப்புறம் என்ன?"

"பெண்ணுடைய அப்பா இது
விபத்தில்லை. திட்டமிட்ட கொலை என்று
சொல்லிக் கொண்டிருக்கிறார்... நீங்கள்
இன்சூரன்ஸ் பணத்தை ஏமாந்து கொடுத்து
விடப் போகிறீர்களே என்றுதான் எனக்கு
யோசனை"

"என்னது, கொலையா! என்ன சார் புதி
தாகக் குழப்புகிறீர்கள்! போலீஸே விபத்து
என்று க்ளோஸ் பண்ணிவிட்டது"

"க்ளெயிமை இன்னும் ஒரு வாரத்திற்கு
இழுத்தடிக்க முடியுமா சார்?"

"நீங்கள் எதற்கும் ஏ.ஜி.எம்மைப்
பாருங்கள்..."

"இன்சூரன்ஸ் கம்பெனி ஏமாறுவதி
லிருந்து தடுக்கிறீர்கள் என்கிறபோது,
நானும் ஒத்துழைத்தால்தானே நியாயம்?
கவலைப்படாதீர்கள். ஒருவாரம்தான்
பெண்டிங்கில் வைத்து விடுகிறேன். ஆனால்

அதற்கப்புறமும் இழுத்தடிக்க முடியாது... என்றார் ஏஜிஎம் நரேந்திரன் தான் ஈகிள் ஜயிலிருந்து வருவதாக உண்மையை சொன்னவுடன்.

"தேங்க்யூ வெரிமச்" என்று நரேந்திர சொன்னதை விட, வைஜயந்தி சொ னதைத் தான் அவர் அதிகம் ரசித்த மாதிரி இருந்தது.

## 5 இறுதி யாத்திரை



ஹோட்டல் சொர்ணப்ரகாஷ்.

நிலா மொட்டைமாடி நியானில் காய்ந்து கொண்டிருந்தது. நரேந்திரனின் புல்லட் போர்ட்டிகோ நிழலில் காத்திருந்தது.

இரவு பதினோரு மணியாகிவிட்ட நிலையில் பர்மிட் ரூம் சாத்தப்பட்டது.

சற்று நேரத்தில் லிஃப்ட்டிலிருந்து ராதாகிருஷ்ணனும், ஸ்டெல்லாவும் கை கோர்த்து கார் நிறுத்தியிருந்த இடத்திற்கு நடந்தார்கள்.

நரேந்திரன் ஹெல்மெட்டை அணிந்து கொண்டான்.

காரை இடைவெளி விட்டு சுலபமாகப் பின்பற்றினான்.

கார் மேம்பாலம் ஏறி இறங்கி இடதில் திரும்பி புரசைவாக்கம் நோக்கி விரைந்தது. ஒரு தியேட்டரின் நிழலில் இருந்த சிறு தெருவிற்குள் நுழைந்து, கடைசி வீட்டின் முன் நின்றது.

இருவரும் இறங்கினார்கள்.

ஸ்டெல்லா தன் ஹேண்ட் பேக்கிலிருந்து சாவி எடுத்தாள். கதவைத் திறந்தாள். இருவரும் உள்ளே நுழைந்தார்கள். கதவு சாத்தப்பட்டது.

இரவு டான்ஸ் ஆடுபவர்களின் பசிக் கொடுமையைப் பற்றியும், இல்லாமை பற்றியும் நரேந்திரன் வைத்திருந்த எண்



ணம் குழப்பப்பட்டது. இவளுக்கு நகரின் சந்தடி மிகுந்த இந்த பிரதேசத்தில் சொந்தமாக ஒரு வீடு இருக்கிறதா?

நரேந்திரன் கதவை ஓசைப்படாமல் திறந்து தன் உடலை மெல்ல உள்ளே நுழைத்தான். முகப்பு அறை ஜன்னல் இருட்டாயிருந்தது. பக்கவாட்டில் ஒரு ஜன்னலில் மட்டும் திரையை மீறி வெளிச்சம் தெரிந்தது.

அதுதான் பெட்ரூமாயிருக்க வேண்டும்.

நரேந்திரன் உட்கார்ந்து முழங்கால்களில் நகர்ந்து ஜன்னலுக்குக் கீழே வந்து அமர்ந்தான். தன் இருப்பிடம் கலைக்கப் பட்ட ஒரு சிலந்தி அவன் தலையில் பயந்து ஓடியது.

பாத்ரூமில் தண்ணீர் சத்தம். கூடவே விசிலில் ஒரு மெட்டு.

அவள் குளிக்கிறாள். அவன் மூடு தருவித்துக் கொள்கிறான்!

நரேந்திரன் அவர்களுக்குள் நிகழப் போகும் சம்பாஷணைக்காகக் காத்திருந் தான்.

வலுவான, உலோகமான சில்லென்றிருந்த ஒரு வட்டம் அவன் பின்னால் கழுத்தில் பதிந்தது.

"கைகளைத் தூக்கு"

ராதாகிருஷ்ணனின் குரல்! விசிலடித்தது ஸ்டெல்லாவா!

நரேந்திரனின் முடிகள் எழுந்து நின்றன. இவன் உள்ளே இன்னமும் விசிலடித்துக் கொண்டிருக்கிறான் என்று நினைத்தால்... எப்படி எப்போது வெளியே வந்தான்!

எழுந்தான். கைகளை உயரத் தூக்கிய படி.

"திரும்பு... நீயா... நேற்று நைட் கிளப்பில் பார்த்தவனில்லை. நீ?" ராதாகிருஷ்ணன் ரிவால்வர் நரேந்திரனின் நடு நெஞ்சைக் குறி பார்த்தது.

"ஆமாம்..."

"இங்கே இருட்டில் என்ன செய்கிறாய்

"நாலணா கீழே விழுந்து விட்டது.. தேடி கொண்டிருக்கிறேன்"

"ராஸ்கல். கிண்டலா... கையை தூக்கியபடி நட... வீட்டிற்குள் போகப் போ றோம். தப்பிக்க முயற்சி பண்ணினாயே சுட்டுப் பொசுக்கி விடுவேன்"

"ஆனால் நான் இன்னும் இன்ஷ்யூ செய்து கொள்ளவில்லையே" என்றா நரேந்திரன்.

அந்த பதில் ராதாகிருஷ்ணனின் உட பில் ஒரு திடுக்கிடலை ஓட்டியது.

"யார் நீ?" என்றான்.

"வீட்டிற்குள் போய்ப் பேசுவோமே!"

வீட்டைச் சுற்றிக் கொண்டு அவர்க முன்புறம் வந்தார்கள்.

கதவைத் திறந்து, "உள்ளே போ" எ றான் ராதாகிருஷ்ணன்.

வீட்டிற்குள் நரேந்திரன் நுழைந்தவே சரேலென்று காலை உயர்த்தி கதவை கொக்கி போட்டு அறைந்து சாத்தினான்.

நரேந்திரனின் வெகு பின்னே வந்த கொண்டிருந்தாலும், ராதாகிருஷ்ணன கையிலும், முகத்திலும், மார்பிலுமாக கதவ மோதியது.

அதே வேகத்தில் கதவைத் திறந்த ராதாகிருஷ்ணனின் திகைத்துப் போன கையிலிருந்து துப்பாக்கியைப் பறித்து ராதாகிருஷ்ணனையும் உள்ளே இழுத்துப் போட்டு கதவை அறைந்து சாத்திக் கொண்டு, வெளியே தாளிட்டான் நரேந்திரன்.

ராதாகிருஷ்ணன் தபதபவென்று பின்புறம் ஓடி பின் வாசல் வழியாக வெளி யேறி முன்புறம் வந்தபோது, புல்லட்டின் எக்ஸாஸ்ட் புகை அந்தத் தெருவில் சப்திக்கத் 'துவங்கியிருந்தது.



"பாஸ்டர்ட்" என்று கேட்டை அவன் உதைத்தது. நரேந்திரனுக்குக் கேட்டது.

மறுநாள் இரவு எட்டு மணி.

முந்தின இரவு பறந்து ஓடிய புல்லட் ஓய்ந்து நின்றது.

நரேந்திரன் இறங்கினான்.

எதிர்பார்த்தபடியே 'ஸ்டெல்லா இல்லம்' வெளியே பூட்டப்பட்டிருந்தது. நரேந்திரன் இருபுறமும் பார்த்தான்.

தெரு நிசப்தமாயிருந்தது. ஒரே ஒரு ஆங்கிலோ இந்திய நாற்பது வயது மாது குழந்தையை வண்டியில் வைத்து தள்ளிக் கொண்டு இரவு வாக்கிங்கிற்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

நரேந்திரன் அவளுக்கெதிரில் போய் நின்றான்.

"குட் ஈவினிங் மேடம்"

"காட் பிளஸ் யூ..." என்றாள் அவள்.

"அந்தக் கடைசி வீடு விலைக்கு வரு கிறது என்று யாரோ சொன்னார்கள்... ஓனர் யாரென்று தெரிந்து போகலாம் என்று வந்தேன்..."

வண்டியிலிருந்த குழந்தை உருண்டைக் கண்களால் நரேந்திணைப் பார்த்து சிரித்தது.

"நீங்கள் ஸ்டெல்லா வீட்டைச் சொல் கிறீர்கள்..." என்றாள் அவள். காற்றில் அவ ளுடைய பாப் செய்யப்பட்ட கூந்தல் அலைந்தது. "அந்த வீடு இப்போதுதானே ஆறு மாதத்திற்கு முன்னால் வாங்கப் பட்டது."

"அடடே..."

"ஸ்டெல்லா தான் இப்போது ஓனர்"

"என்ன ஒரு இரண்டு லட்சத்திற்கு போயிருக்குமா?"

"புரசைவாக்கத்தில் கிரவுண்ட் என்ன விலை என்று தெரியுமா உங்களுக்கு?" அவள் சிரித்தாள். "வீட்டோடு சேர்த்து

மூன்றே முக்கால் லட்சத்திற்கு வாங்கின
ஸ்டெல்லா"

"பெரிய பணக்காரியோ?"

"புவர்கேர்ள்... ஏதோ ஹோட்டலில் ரி
ஷனிஸ்ட்டாக இருப்பதாகச் சொன்னா
அவளுடைய புருஷன் ஸ்கூட்டர் ஆக்
டெண்ட்டில் செத்துப் போனான். இன்
ரன்ஸ் க்ளெய்ம் அவளுக்குக் கிடைத்தது

"ஐ ஸி"

"மூன்று லட்சமோ என்னவோ இன்
ரன்ஸ் பணம் கிடைத்தது. அது போக மிச்ச
திற்கு அங்கே இங்கே கடன் வாங்கித்தா
இந்த வீட்டை வாங்கியிருக்கிறாள்"

"நான் கொஞ்சம் லேட்?"

"ஆறு மாதம் லேட்" என்று சிரித்தா
அவள்.

"ஸ்டெல்லாவை நான் எங்கே பார்க்
முடியும் மேடம்"

"எக்மோரில் ஏதோ ஒரு ஹோட்டலி
ஒர்க் பண்ணுவதாகச் சொன்னாள். ராத்தி
பதினோரு மணியாகிவிடுகிறது. அவள் டூட்
முடிக்க தினமும் கம்பெனி கார்தான் அ
ளைக் கொண்டு வந்து இறக்கி விடுகிறது"

"ஓ... தேங்க்யூ ஆன்ட்டி"

"காட் ப்ளெஸ் யூ"

நரேந்திரன் குனிந்து குழந்தையின்
கன்னத்தைச் செல்லமாகத் தட்டினான்.

ஸ்டெல்லா.

விதவை.

கணவன் இறந்ததும் கிடைத்த இ
சூரன்ஸ் பணத்தில் வீடு.

இன்சூரன்ஸ் என்பது இங்கேயும் வந்
இடிக்கிறது.

ஸ்டெல்லா கணவனை இழந்தவள்.

ராதாகிருஷ்ணன் மனைவியை இழ
தவன்.

இருவரையும் பார்த்தால் அதற்கா
துக்கப்படுபவர்களாகத் தெரியவில்லை.



நரேந்திரன் புல்லட்டை நிறுத்தியிருந்த இடத்திலிருந்து விலகி நடந்தான். சற்று நேரம் கடைகளையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்து விட்டு, மறுபடியும் அதே தெருவிற்குள் நுழைந்தான்.

யாரும் கவனிக்கவில்லை என்பதை நிச்சயம் செய்து கொண்டு கடைசி வீட்டிற்கு வேகமாக நடந்தான்.

கேட்டை திறந்து நகர்ந்து வீட்டுக் கதவின் முன்பூட்டை மறைத்தபடி நின்றான். அவனிடமிருந்த சாவிக்கொத்து சப்திக்காமல் வெளியே வந்தது. ஆறாவது சாவி பூட்டைத் திறந்தது.

கதவைத் திறந்து உடன் மூடி உள்புறம் தாளிட்டான்.

பெரிய படுக்கையறை.

இரட்டைக் கட்டில், கட்டிலின் தலைமாட்டில் உதய சூரியன் போன்ற அரைவட்ட அமைப்பில் சுவரில் மெத்தைப் பின்னல் ஸ்டூலில் ஒரு கார்ட்லஸ் போன். மெத்தைகளின் மீது ரோஸ் நிறப் படுக்கை விரிப்பு.

அலமாரிகளை ஆராய்வதற்காக நரேந்திரன் டார்ச்சை திருப்ப முனைந்த சமயம் ஸ்ஸ் என்று காற்றில் ஒரு ஒலி முன்னறிவிப்பு செய்ய சரேலென நகர முற்பட்டதும், அவனுடைய வலது தோளில் கனமான உருட்டுக் கட்டை இறங்கியது.

டார்ச் எகிறியது.

குப்புறமடித்து எழுந்தான்.

இரண்டு கைகளையும் வெவ்வேறு ஷூக்கால்கள் மிதித்தன.

தேய்த்தன.

"எத்தனை நேரமாக உனக்காகக் காத்திருக்கிறோம் தெரியுமா?"

திறமையான ஒரு கை நரேந்திரனின் உடலில் ஒட்டப்பட்டது. இடுப்பிலிருந்து ரிவால்வர் எடுக்கப்பட்டது. ராதாகிருஷ்ணன் ரிவால்வர், பரிசோனைக் கூடத்தில் தவளை

யைத் திருப்பிப் போடுவது போல
நரேந்திரனை திருப்பிப் போட்டனர்.

"யார் நீ?"

நரேந்திரன் எதிராளியின் கையில் இருந்த ரிவால்வரின் சாதகத்திற்காகக் கவலைப் பட்டான்.

"நரேந்திரன்?" எப்படியும் அவன் பா கெட்டிலிருந்து விசிட்டிங் கார்டை எடு தால் தெரிந்து போகும்.

"இங்கே எதற்கு திருட்டுத்தனமா நுழைந்தாய்?"

"நான் ஒரு பிரைவேட் டிடெக்டிவ்"

"இங்கே யாரை வேவு பார்க்க வந்தாய்?"

"உங்கள் முதலாளியை"

"யார் எங்கள் முதலாளி"

"உங்களுக்குத் தெரியும்"

"நீ வாயைத் திறந்து சொல்லடா ஒருத்தன் கையை அரைத்து தேய்த்தான்.

நரேந்திரன் வலியின் காரணமாக கண்களில் கண்ணீர் தளும்புவதை உணர்ந் தான்.

"யாரை வேவு பார்க்க வந்தாய்?"

"சொன்னேனே..."

சட்டையைக் கொத்தாக பற்றி நரேந் திரனை நிமிர்த்தி நிறுத்தினார்கள்.

துப்பாக்கியை அவன் நெஞ்சுக்குக் குறி வைத்து, "யார் எங்கள் முதலாளி" என்றான் ஒருத்தன்.

நரேந்திரன் வெகு திடீரென்று செயல் பட்டான். துப்பாக்கியைப் பற்றிக் கவலைப் படாது அந்தக் கையைப் பற்றி இழுத்தான். அந்த ஆள் முழு வேகத்துடன் நரேந்திரனின் மீது மோதிய கணத்தில் தன் மண்டையால் அவன் முகவாய்க்குக் கீழே கொடுத்து எக்கித் தாக்கினான். எதிராளியின் பல் வரிசை கலைந்த சத்தம் கேட்டது. அவனை அப்படியே தூக்கி இன்னொருத்தன் மீது எறிந்து இருவதும் குழம்பி சுவரில் மோதி



எழுந்திருப்பதற்குள், கீழேயிருந்த ரிவால் வரைப் பொறுக்கி அதன் தோட்டாக்களை வெளியே எடுத்து ஜன்னல் வழியே தூர வீசி, போன் வைத்திருந்த ஸ்டூலை எடுத்து அவர்கள் மீது எறிந்து, கட்டிலை அள்ளிக் கவிழ்த்துவிட்டு, நரேந்திரன் அதற்கடுத்த கிச்சன் என்று பாவி வெளியே தோட்டத் துணுக்கில் குதித்து, இன்னொரு காம்பவுண்ட் ஏறிக் குதித்து...

"அடுத்த தடவை அந்த வீட்டிற்குள் நான் நுழைந்தால் என்னைக் கைப்பற்ற ராணுவப் படையே காத்திருக்கும்" என்றான் நரேந்திரன்.

தோல் வறண்டு போயிருந்த அவனு டைய புறங்கைகளுக்கு மிருதுவான ஆயின்ட்மெண்ட்டைத் தடவினாள் வைஜயந்தி.

"எவ்வளவு அடிபட்டாலும் நீ ஏன் அதே வீட்டையே குறி வைக்கிறாய்"

"வாலைக் கொளுத்தினாலும் அனுமார் இலங்கையைப் பார்க்காமலா வந்தார்"

"சரியாக ராமாயணம் தெரியாமல் உளறாதே உனக்கும் அனுமாருக்கும் ஒரே ஒற்றுமை - வால்தான்!"

"இனிமேல் அந்த வீட்டில் நுழைவதில் அர்த்தமில்லை. அங்கே இத்தனை நாள் நமக்கு சாதமாக ஏதாவது இருந்திருந் தாலும், நான் இரண்டு தடவை குறுக்கிட்ட தாலேயே அத்தனையையும் அந்த இடத்தை விட்டு இந்நேரம் நகர்த்தியிருப்பார்கள்"

"ரகசியமாக செய்ய வேண்டியதை இப்போது அவர்களை உஷாராக்கி விட்டு கஷ்டப்படப் போகிறாய்"

"இது ஒரு ட்ரிக் வைஜ்"

"என்ன ட்ரிக்?"

"குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும். நான் எவ்வளவு தூரம் கண்டுபிடித்து

விட்டேனோ என்று இரண்டு பேருக்குமே பயமாயிருக்கும். அந்தப் பதட்டத்திலேயே அடுத்த காரியத்தை குழப்பி விடுவார்கள் பார்"

"அவர்களை யார் கவனிப்பது?"

"அதெல்லாம் கவலைப்படாதே... எனக்கு ஒருவிஷயம் தான் உதைக்கிறது வைஜ்"

"என்ன?"

"மூன்று லட்சத்திற்கு மேல் கொடுத்து வீடு வாங்கியிருப்பவள் இன்னும் எதற்காக நைட் கிளப்பில் டான்ஸ் ஆடப் போக வேண்டும்? தினமும் அதே கிளப்பில் போய் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டிய அவசியம் ராதாகிருஷ்ணனுக்கு என்ன?"

"ராதாகிருஷ்ணனுக்குத்தான் அந்த ஹோட்டல் ஓனர் நண்பன் என்று பேபி என்பவள் சொன்னதாக சொன்னாயே"

"சந்தோஷ்! சந்தோஷை நாம் இன்னும் சந்திக்கவில்லையே, வைஜ்"

"நீ வேண்டாம். நான் மட்டும் போய் விட்டு வருகிறனே" என்றாள் வைஜெயந்தி.

"ராதாகிருஷ்ணனுடன் முதலில் ஓடிப்போனாளே ஒரு பெண் அவள் பெயர் என்ன சொன்னாய்?"

"ஆனந்தி..."

"ஆனந்தி, மைடியர் ஃப்ரெண்ட்" என்றாள் வைஜெயந்தி.

## 6 இறுதி யாத்திரை



சந்தோஷ் உயரமாயிருந்தான். தலையைப் படிய வாரியிருந்தான். விளிம்பில்லாத கண்ணாடி, மீசை இல்லாத முகம், நேர்மையில்லாத புன்னகை. வாயில் எதையோ மென்று கொண்டிருந்தான்.

"ஐம் வைஜயந்தி" என்றவுடன் எழுந்து "ஐம் சந்தோஷ்" என்று கையை நீட்டினான். வேறு வழியில்லாமல் அந்தக் கையைப்



பற்றி குலுக்கினாள் வைஜயந்தி. பொய்ப் புன்னகையுடன் அமர்ந்தாள்.

"நான் என் ஃப்ரெண்டைப் பார்க்க வந்தேன். அவள் வேலையை விட்டு நின்று விட்டதாகச் சொன்னாள்"

"யார்?" என்றான் 555சிகரெட் ஒன்றை ஸ்டைலாகப் பற்ற வைத்துக் கொண்டான்.

"ஆனந்தி..."

"ஓ. அவளா?" அவன் முகத்தில் துல்லியமான விநாடித்துணுக்கு நேரம் ஒரு மாற்றம் வந்து சகஜமானதை வைஜயந்தியின் கூர்மையான விழிகள் கவனித்து விட்டன. ஆஸ்திரேலிய சாக்லேட் ஒன்றை எடுத்து வாயில் அடக்கிக் கொண்டான். ஜிகினா பேப்பரைக் குப்பைத் தொட்டியில் எறிந்தான்.

"ஆனந்தி முன்பொருமுறை எனக்கு கடிதம் எழுதியிருந்தாள். மெட்ராஸ் வரும்போது வந்து பாரேன் என்று"

"அவள் இப்போது இங்கு இல்லை"

"வேறெங்காவது வேலையில் சேர்ந்து விட்டாளா?"

"நோ ஐடியா" ஒரு சாக்லேட்டை அவளிடமும் நீட்டினான்.

"அவளைப் பார்த்துவிட வேண்டும் என்று துடிப்புடன் வந்தேன்.. உங்களைப் பற்றிக் கூட எழுதியிருந்தாள்" என்றாள் வைஜயந்தி. சாக்லேட்டை வாங்கிக் கொண்டே.

"என்னைப் பற்றியா?" சந்தோஷின் குரலில் வியப்பு.

"எங்கள் முதலாளி நல்லவர். அவரிடம் சிபாரிசு செய்து உனக்கு ஒரு வேலை வாங்கித் தர முடியும் என்று எழுதியிருந்தாள்."

"நீங்கள் வேலை தேடிக் கொண்டிருக்கிறீர்களா?"

"இப்போதுகூட மெட்ராஸிற்கு ஒரு இண்டர்வியூவிற்காகத்தான் வந்தேன்.

வேலை கிடைக்கவில்லை"
"கல்யாணமாகிவிட்டதா உங்களுக்கு சார்?"
"இன்னும் இல்லை..." என்றா
வைஜயந்தி போலியாக முகத்தில் நாண
காட்டி.
"ஹோட்டலில் வேலைக்குச் சே
உனக்கு இஷ்டமா?" திடீரென்று ஒ
மைக்கு அவன் தாவி விட்டதை வைஜயந்
குறித்துக் கொண்டாள்.
"எங்கே வேலை பார்த்தால் என்ன
ஏமாற்றாமல் சம்பளம் தரும் முதலாளியா
இருக்க வேண்டும். நான் டெலிபோ
ஆபரேட்டர் கோர்ஸ் படித்திருக்கிறேன்"
சந்தோஷ் முகம் மெல்ல வாடியது
"இப்போது அந்த மாதிரி வேலைக
எல்லாம் இங்கே காலி இல்லை. உனக்
டான்ஸ் ஆடத் தெரியுமா?"
"பரத நாட்டியம் கற்றுக் கொள்
வேண்டுமென்று ஆசைதான் ஆனால்,
நேரமே போதவில்லை"
சந்தோஷ் சிரித்தான். "அதெல்லாம்
தேவையில்லை. நான் சொல்கிற நாட்
டியத்தை ஒரே மணி நேரத்தில் கற்றுக்
கொள்ளலாம்"
"இல்லை, சார் எனக்கு டான்ஸராக
இஷ்டமில்லை. இங்கு இல்லாவிட்டாலும்,
உங்கள் ஃப்ரெண்ட் ராதாகிருஷ்ணன்
என்று ஒரு நபரிடம் சொல்லி வேலை
வாங்கித் தர முடியும் என்றும், அவளுக்குக்
கூட அவர் வேறு ஏதோ வேலை வாங்கித்
தரப் போகிறார் என்று அவள்
எழுதியிருந்தாளே?"
சந்தோஷின் முகம் இறுகியது. "அதெல்
லாம் எழுதினாளா என்ன?"
"யெஸ், சார்"
"ராதாகிருஷ்ணனிடம் கூட டான்ஸர்
வேலைதான் கிடைக்கும்..."
"அவரும் ஹோட்டல் வைத்திருக்கிறாரா



"இல்லை. பிஸினஸில் இருக்கிறார். ஆனால், உன்னை மாதிரி இளமையான, அழகான பெண்களைத் தான் நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம். ஆனந்தி இருக்கும்போதே நீ வந்திருந்தால் சுலபமாயிருந்திருக்கும்"

"டான்ஸ் என்றால் எந்த மாதிரி டான்ஸ் சார்?"

சந்தோஷ் சிகரெட் சாம்பலைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

"யூ லுக் ப்ரெட்டி நீ கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டால், இந்தத் தொழிலில் நிறையப் பணம் சம்பாதிக்கலாம்"

வைஜயந்தி முகத்தில் திடுக்கிடலைக் காட்டினாள். "நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை சார்"

"இதோ பார், ஓப்பனாகவே பேசுகிறேன்... நானும், என் ஃப்ரெண்ட் ராதாகிருஷ்ணனும் சேர்ந்து பாண்டிச்சேரியில் ஒரு டான்ஸ் ஹாலை வாங்கலாம் என்றிருக்கிறோம். அங்கே பர்மிட் ரூமும், நைட் கிளப்பும் வைக்கலாம் என்று ஐடியா எங்களுக்குப் புதுப் பெண்கள் தேவை. இஷ்டமென்றால் உன்னை இப்பொழுதே புக் பண்ண நான் ரெடி"

"யோசிக்க எனக்கு கொஞ்சம் டயம் வேண்டும் சார்"

"பிப்ரவரி பத்தாம் தேதிக்குள் சொல்லியாக வேண்டும். பதினைந்தாம் தேதி திறப்பு விழா, உன் அட்ரஸ்" சந்தோஷ் பேனாவைத் திறந்து ஸ்க்ரிப்ளிங் பேடை அருகே இழுத்துக் கொண்டான்.

"வைஜயந்தி, 39, சேரிங் கிராஸ், ஊட்டி"

"ஊட்டியா? அதுதான் தளதளவென்று இருக்கிறாய். மெட்ராஸில் எங்கே தங்கியிருக்கிறாய்?"

"என் ஃப்ரெண்ட் வீட்டில், அண்ணா

நகரில்"

"நீ ஏன் நைட் ஒரு தடவை வரக்கூடாது என் ஃப்ரெண்டும் உன்னைப் பார்த்தா[ல்] நல்லது"

"எத்தனை மணிக்கு சார் வரவேண்டும்?"

"எட்டரை மணிக்கு?"

"வருகிறேன் சார் நைஸ் மீட்டிங் யூ" வைஜயந்தி ஹேண்ட் பேக்கை எடுத்து[க்] கொண்டு அழகாக கும்பிடு போட்டுவிட்டு வெளியே நடந்தாள்.

"ஸம் டிஷ்" என்று அவன் பின்னா[ல்] முணுமுணுப்பது காதில் உரசியது.

"பாஸ்டர்ட்!" என்றான் நரேந்திரன். சட்டையைப் மீறி அவன் புஜம் பெருகியது. "டான்ஸ் ஆடவாக் கூப்பிட்டான் உன்னை?"

"அமைதி, அமைதி!" என்று இரு கைகளையும் தூக்கினாள் வைஜயந்தி. "சதாம் உசேனிடம் வேலை கேட்டுப் போனால், கோயிலில் மணியடிக்கிற வேலையா கொடுப்பார்?"

"அதற்காக? உன்னைப் போய்?"

"ஷ் நான் என்ன டான்ஸ் ஆடிவிட்ட வந்துவிட்டேன். ஏன் இப்படி எண்ணெய் போல் எரிகிறாய்?"

"ஐயோ, இந்தப் போர் வந்தாலும் வந்தது. எதற்கெடுத்தாலும் சதான் உசேன், எண்ணெய் கிணறு என்று ஆரம்பித்து விடுகிறார்களடா"

"நரேன், உன் கொதிப்பில் முக்கியமான விஷயத்தை கோட்டை விட்டுவிட்டாய் பார்"

"என்ன?"

"ராதாகிருஷ்ணன் ஆட்டோமொபைல் ஓர்க்ஷாப் வைப்பதற்காகத்தானே முதலில் பேங்கில் கடன் கேட்டான்? இப்போது பார், அனுசுயா செத்ததும் வரப்போகிற பணத்தை காபரே ஹால் வாங்குவதில்



பார்ட்னர் ஷிப்பிற்கு உபயோகப்படுத்தப் போகிறான்"

"இது முக்கியமான நியூஸ்தான். அதுதான் திருட்டுப் பயல் இன்சூரன்ஸ் கம்பெனியைப் போட்டு தூத்து தூத்து என்று தூத்துகிறான். பாண்டிச்சேரி டான்ஸ் ஹாலில் சூப்பர்வைஸராகப் பெண்களுக்கு ட்ரெய்னிங்கெல்லாம் கொடுக்கப் போகிறார்கள் சொல்"

"ஆனந்தியா?"

"இருக்கலாம். அதற்காகத்தான் ஆனந்தியை அழைத்துப் போயிருப்பார்கள்"

"அப்படியிருந்தால் ஆனந்தி எங்கே என்று கேட்டதற்கு திருதிரு என்று முழித்திருக்க மாட்டானே. அவளை விட்டு என்னை கவர் பண்ணலாம் என்றுதானே திட்டம் போட்டிருப்பான்?"

"அதுவும் பாயிண்ட்தான்... மேடம் ஸ்டெல்லாதான் அந்த டான்ஸ் ஹாலின் மகராணியாய் இருக்கப் போகிறாள் என்பது என் யூகம்"

"சான்ஸஸ் ஆர் தேர். ஆனால், மெட்ராஸில் இவ்வளவு காசு போட்டு வீடு வாங்கி விட்டு பாண்டிச்சேரிக்குப் போவாளா அவள்?"

"யாருக்குத் தெரியும்? இப்போது இருக்கிற வீட்டை விற்று விட்டு அந்தப் பணத்தைப் போட்டு அவனும் பார்ட்னராய்ச் சேருவாளோ என்னவோ?"

"அப்படித்தான் இருக்கும்... இந்த விஷயமெல்லாம் எப்படி உன் மண்டையில் பளிச் பளிச்சென்று தோன்றுகிறது?"

"நைட் கிளப் சமாச்சாரங்களை அலசுவதற்காகவே என் மூளையில் ஒரு போர்ஷனுக்கு ட்ரெய்னிங் கொடுத்திருக்கிறேன் வைஜ்"

"அடி ஜோட்டாலே" என்று வைஜயந்தி குனிந்தாள்.

"ஸ்டாப் ஸ்டாப்" என்று இரண்
கைகளையும் தூக்கிக் கொண்டே ஜா
சுந்தர் உள்ளே வந்தான்.

"நரேன்... நீ கேட்ட இரண்டு அட்
களும் இதில் இருக்கின்றது"

"யார் அந்த இரண்டு பேர்?"

"சொர்ணப்ரகாஷில் ஆடுபவர்கள்தா
ஆவ்..." என்று நரேந்திரன் மிதிப
காலைப் பிடித்துக் கொண்டான்.

"ராதாகிருஷ்ணனின் வீட்டு அட்ரஸ்
கொடைக்கானலில் அனுசூயாவின் தே
அட்ரஸ்ும்"

"தேங்க்யூ பார்"

"அவ்வளவுதானா?" என்றான் ஜா
சுந்தர் ஏமாற்றத்துடன்.

"என்ன வேண்டும்?"

"ஒரு தம்"

"கேட்ச்" என்று சிகரெட் பாக்கெட்டை
அவன் திசையில் எறிந்தான் நரேந்திரன்.

"ஜான்... எனக்கு இன்னும் கொஞ்ச
விவரம் வேண்டுமே?"

"கொடுத்த சிகரெட்டிற்கு அவ்வள
தான்"

"ஹோட்டல் சொர்ணப்ரகாஷின் ஓனர்
தோஷ், அங்கே டான்ஸ் ஆடுகிற ஸ்டெல்
இந்த இரண்டு பேருடைய முன்கதை
சுருக்கமும் கிடைக்குமா?"

"ஒரு நாள் டயம் கொடு" என்றான் ஜா
சுந்தர், சிகரெட்டைப் பற்ற வைத்து
கொண்டே.

"வைஜ்... நைட் நீ ஃப்ரீயா?" நரேந்திர
கேட்டான்.

"ஏய்!"

"ஐயோ, தப்பர்த்தத்தில் கேட்கவில்லை
அந்த ராதாகிருஷ்ணனின் வீட்டில் கொ
சம் வேட்டையாடலாமே என்று பார்த்தே
அவன் வீட்டிற்கு வந்துவிடாதபடி இருக்
வேண்டுமே"



"ஸோ?"

"இன்னொரு தடவை நான் அவனை
ஹலோ பண்ணினால் அப்புறம் கூவத்தில்
நான் என்னைத் தோண்டி எடுக்க
வேண்டும். அந்தப் புண்ணிய வேலையை நீ
செய்தால் என்ன என்று கேட்கலாம் என்று..."

"ஒழிந்து போ" என்றாள் வைஜயந்தி.

"ராத்திரி வேளையில் நீ என்னதான்
ஜான்ஸி ராணியாய் இருந்தாலும், அந்த
மாதிரியான மிருகங்களிடம் மாட்டிக்
கொண்டால் வம்பு வைஜ்..." என்றான்
ஜான்சுந்தர். "வால் பிடிக்கும் வேலையை
நான் செய்கிறேன்"

"நீதான் குட்பாய்" என்று அவன்
தலையை கலைத்தாள் வைஜயந்தி.

## 7 இறுதி யாத்திரை

நுங்கம்பாக்கத்தில் ஸப்வே அருகே
திருப்பத்தில் இருளான தெருவில் இருந்தது
ராதாகிருஷ்ணன் வீடு.

கேட்டிற்குள்ளே நீளமான மண்பாதை.
கிட்டத்தட்ட ஒரு பர்லாங் தள்ளி தனிமை
யில் இருந்த கட்டடத்தின் கீழ்த்தளம்
ஆபீசிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. மேல்
தளத்தில் ராதாகிருஷ்ணனின் போர்ஷன்.

நரேந்திரன் போன நேரத்தில் ஆபீஸ்
மூடப்பட்டு ஒரே ஒரு கூர்க்கா வெற்றிலை
சீவலை மென்று கொண்டிருந்தான். அவன்
பேண்ட் ஜிப்பில் கை வைத்து சுவர்
மூலையைப் பார்த்து நின்ற தோதான
தருணத்தில் நரேந்திரன் மாடி ஏறிவிட்டான்.
பூட்டை திறப்பது நரேந்திரனுக்கு பெரிதா
யில்லை. இது எத்தனாவது திறப்புவிழா.
நூறு தடவையாவது இந்த மாதிரி சட்டத்
திற்குப் புறம்பாக பூட்டு திறந்திருப்பானா
என்று யோசித்துக் கொண்டே உள்ளே
நுழைந்தான்.

நீளமான காற்றோட்டமில்லாத ஹ
அதை அடுத்து இருபுறமும் அறைகள். வ
படுக்கை இடது பிரத்யேக அறை.

அலமாரிகளில் துணிகள்... துணிக
துணிகள்...

ஆண்களுக்கான துணிகள் என்று
பாதி என்றால் புடவை சூரிதார் வகைய
கள் மறுபாதியில் அனுசூயாவுடையதோ

மேஜைமீது ஸ்டாண்ட் போ
போட்டோ பிரேமில் அனுசூயா ராதாகிரு
ணன் எளிமையான ரோஜா மாலைகளுட
நின்றிருந்த போட்டோ.

அனுசூயா முகத்தில் கள்ளமில்லா
கணவனைப் பார்த்த பார்வையில், எல்
வற்றையும் உன்னை நம்பி சரண் கொ
தேன் தலைவா என்ற செய்தி இருந்த
இவளையா... இவளையா?

மேஜை இழுப்பறைகள் பூட்டப்பட்டி
தன.

தேக்குமரம்... பத்துநிமிடம் போரா
திறமை முழுதும் காட்ட வேண்டியிருந்த
பூட்டு திறந்தது.

முதல் டிராயரில் காலாவதியான நிரோ
ஒரு கத்தரிக்கோல், ஒரு அழுக்கு கை
குட்டை. இரண்டாவது கடிதங்கள். அதிக
இல்லை மொத்தமே பத்துப் பதினைந்
கடிதங்கள்தான். எதுவும் உருப்படியா
இல்லை எனலாம். புதுவருட வாழ்த்துக்க

மூன்றாவதில் ஒரு போட்டோ ஆல்பம்

அந்த ஆல்பத்தைத் திறந்தது
நரேந்திரன் வாய் பிளந்தான்.

பெண்கள்... ஒவ்வொரு பக்கத்திலும் ஒ
பெண். மொத்தம் நாற்பத்தெட்டு பெ
களின் போட்டோக்கள் இருந்தன.

ஒவ்வொரு பெண்ணும் மூன்று வித
களில் எடுக்கப்பட்டிருந்தாள்.

நாற்பத்தேழு பெண்களின் போட்டோ
கள் மூன்று விதங்களில் இருக்க, ஒரே ஒ



பெண்ணின் போட்டோக்கள் மட்டும்
இரண்டு தான் இருந்தன. முழு உருவப்படம்
இருந்த இடம் காலியாக இருந்தது. அந்த
போட்டோ மட்டும் ஏன் உருவப்
ட்டிருக்கிறது என்று நரேந்திரன் யோசித்
தான். அந்தப் பெண்ணின் க்ளோஸ்
படத்தை எடுத்து பாக்கெட்டிற்குள்
போட்டுக் கொண்டான்.

இரும்பு பீரோ கண்ணைக் கவர்ந்தது.

திறப்பதற்கு இருபது நிமிடம் பிடித்தது.

இரும்பு பீரோவினுள் இஸ்திரி போட்ட
துணிகள் சில வீடியோ கேஸட்கள். மேல்
தட்டில் இருந்த புத்தகம் நரேந்திரனை
இழுத்தது.

இன்சூரன்ஸ் விதிகள்.

நரேந்திரன் அந்தப் புத்தகத்தை எடுத்
தான். புத்தகம் தானாகத் திறந்தது ஆயுள்
இன்சூரன்ஸ் என்ற கட்டுரைப் பகுதி
தெரிந்தது. புத்தகம் தானாக திறந்ததன்
காரணம் புரிந்தது. அந்தப் பக்கத்தில்
அடையாளத்திற்கு ஒரு போட்டோ
வைக்கப்பட்டிருந்தது.

ஆல்பத்தில் காணாமல் போயிருந்த
அந்தப் பெண்ணின் முழு உருவப்
போட்டோ.

அந்தப் போட்டோவின் மீது நிறைய
குறுக்குக் கோடுகள் வரையப்பட்டு சில
அளவுகள் குறிக்கப்பட்டிருந்தன. அதைப்
பார்த்தபோது ஓவியர்கள் சில போட்
டோவை வைத்து பெரிய அளவு பெயிண்டிங்
வரையும் போது அளவுகள் குறித்துக்
கொள்வது போல் இருந்தது.

ராதாகிருஷ்ணன் ஓவியனா என்ன?

நரேந்திரன் போட்டோவைத் திருப்பிப்
பார்த்தான்.

போட்டோவின் பின்னால் மீண்டும் சில
அளவுகள் குறிக்கப்பட்டிருந்தன.

முகம்: 9 x 10

கழுத்து: 3
மார்பு: 35.5
இடுப்பு: 26.2
பிட்டம்: 36.
கால்கள்: 40.1
எடை: 48 கிலோ.
முடி: கறுப்பு.

எதற்காக இந்தப் பெண்ணின் அ
களை மட்டுமே இவ்வளவு அவசியமா
குறித்து வைத்திருக்கிறான் என்று ந
திரனுக்குப் புரியவில்லை. இருந்தா
அந்த அளவுகளைத் தன் பாக்
டைரியில் குறித்துக் கொண்டான்.

எடுத்ததை எல்லாம் எடு
இடத்திலேயே வைத்துவிட்டு (ஆல்
திலிருந்து உருவிய போட்டோவைத் த
கதவை முன்போல் மூடிப் பூட்டிக் கொண்
வாட்ச்மேன் அயர்ந்த சமயத்தில் இற
வெளியே வந்தான். முதல் தடவைய
அவன் ஒரு வீட்டை ஆராய்ந்து முடிக்கு
வரை எதிரி ஆட்கள் அடிதடிக்கு வராம
இருந்ததே அவனுக்குப் பெரிய ஆச்ச
மாயிருந்தது.

புல்லட்டை உசுப்பி ஒரு இருளா
மூலையில் நிறுத்தினான். சைட்பாக்
திறந்து எப்போதும் தயாராய் கொண்டுவரு
பொய்தாடி மீசையை எடுத்து ஒட்
கொண்டான்.

அடுத்த நிறுத்தம்.

ஹோட்டல் சொர்ணப்ரகாஷ்.

அறுபது ரூபாய் செலவில் தனக்
வசதியான மேஜையில் உட்கார்ந்தது
மெனுகார்டு வந்தது.

"பேபி..." என்றான்.

அவள் கண்கள் அகல விரிந்தன.

"அதே குரல். ஆனால் இரண்டு மூன்
நாட்களுக்குள் ரிஷிபோல் தாடி வளர்த்
விட்டீர்களே?"



"பேபி இப்படி உட்காரேன்..."

"டான்ஸ் ஆரம்பிக்கும் வரை நான் பிஸி.." என்றாள்.

நரேந்திரன் டான்ஸ் ஹாலை நோட்டமிட்டதில் இன்னமும் ராதாகிருஷ்ணன் வந்து சேரவில்லை. அல்லது வந்திருந்தாலும் உள்ளே பெண்களோடு பேசிக்கொண்டிருப்பவனாயிருக்கும்.

பேபி அடுத்த முறை மேஜையைக் கடந்தபோது நரேந்திரன் ஐம்பது ரூபாயைத் தவற விட்டான்.

பேபி குனிந்து பொறுக்கிக் கொடுத்தாள்.

"அது உனக்கு... இரண்டு நிமிடம் எனக்கு ஒதுக்கப் போவதற்காக"

"என்ன வேண்டும்?" என்றாள், மெனுகார்டைப் பற்றி விசாரிப்பவள் போல.

நரேந்திரன் பாக்கெட்டிலிருந்து உள்ளங்கையால் மறைத்து எடுத்து போட்டோவை மேஜைமீது மல்லாத்தினான்.

"இந்த அயிட்டத்தைப் பார்த்திருக்கிறாயா?"

"எங்கே கிடைத்தது இந்த போட்டோ?" பேபியின் குரலில் ஆச்சரியம்.

"உனக்கு இவளைத் தெரியுமா?"

"ஆனந்தி... ராதாகிருஷ்ணனோடு கிளம்பிப் போனாள் என்றேனே, இவள்தான்"

"தேங்க்யூ டியர்..."

நரேந்திரன் எழுந்தான்.

"டான்ஸ் பார்க்கவில்லை?"

"அதை விட முக்கியமான வேலை இருக்கிறது"

கதவைத் தாண்டும்போது வலது தோளில் மோதி உள்ளே நுழைந்தான் ராதாகிருஷ்ணன்.

இருவரும் ஸாரிகளை உதிர்த்து விட்டு எதிர்த் திசைகளில் பிரிந்தனர்.

நரேந்திரன் ஹோட்டலை விட்டு வெளியேறியதும் தெரு முனையில் கைவீசி

வண்டியை நிறுத்தச் சொன்ன உருவத்தை
பார்த்து ஆச்சரியப்பட்டான்.

புல்லட்டை நிறுத்தினான்.

"ஜான்... நீ எப்படி இங்கே?"

"ராதாகிருஷ்ணனை ஃபாலோ செய்வ
தானே என் வேலை? அவன் டான்
பார்த்துவிட்டு வருவதற்குள் என் டின்ன
முடித்துக் கொண்டு வந்து விடுகிறேன்"

ஹோட்டல் காஞ்சியில் டின்னர் ஆர்
பண்ணிவிட்டுக் காத்திருந்த நேரத்தி
"எனிலக்?" என்றான் ஜான்சுந்தர்.

"லக்கா இல்லையா என்று புரியவில்லை
என்றான் நரேந்திரன்.

"இது ஆனந்தி" போட்டோவை எடுத்
ஜான் சுந்தரிடம் நீட்டினான் "இ
அளவுகள் எல்லாம் என்ன என்று புரிகிறத
ஜான்?"

"அளவுகளைப் பார்த்தால் ஆட்டே
மொபைல்காரன் உபயோகப்படுத்துவ
போல் இல்லையே நரேன்..."

"பின்னே?"

"ஒன்று டைலராயிருக்க வேண்டும
இல்லையென்றால் சவப்பெட்டி செய்கிற
னாக இருக்க வேண்டும்"

"ச்சே... ஒரு பெண்ணின் அளவுகளுக்
வேறு அர்த்தமே தோன்றவில்லைய
ஜான்?"

"நீதான் சொல்லேன்..."

"இந்த ஆனந்தி ஒரு ஐடியல் கேர்
டான்ஸர்களுக்கு இருக்க வேண்டிய உயர
எடை, அளவுகள் எல்லாம் கரெக்டா
இருப்பவள்..."

"ஸோ?"

"அவளை முன் மாதிரியாக வைத்
அவளைப் போலவே பெண்களைத் தன் பு
நைட் கிளப்பிற்கு செலக்ட் பண்ண
ராதாகிருஷ்ணன் நினைத்திருக்கலா
இல்லையா?"



நயாயமான பாயிண்ட்தான் ரத்தம், அடிதடி இதிலேயே இருக்கிறோமா, எனக்கு சட்டென்று வேண்டாத அர்த்தங்கள்தான் தோன்றுகின்றன." என்றான் ஜான்சுந்தர்.

"நீ போன காரியம் என்ன ஆயிற்று ஜான்?"

"அந்த ஆள் என்னை லோகேட் பண்ணி விட்டான் என்று நினைக்கிறேன்"

"ஏன் அப்படி சொல்கிறாய்?"

"இன்றைக்கு ஒர்க்ஷாப்பிலிருந்து கிளம்பியவன் நேரே ஹோட்டலுக்கு வரவில்லை. காரை மவுண்ட் ரோடு பக்கம் விட்டான்... நான் புல்லட்டில் ஃபாலோ செய்வதை ரியர்வியூ மிர்ரரில் பார்த்து விட்டான் போலிருக்கிறது. அண்ணா சிலையருகே வாலாஜா ரோடில் திருப்பி உடனே எல்லிஸ் ரோடிற்குள் புகுந்து விட்டான். ஒரு பான் கடையில் ஜர்தா பீடா வாங்கிக் கொண்டான். காரை இரண்டு மூன்று சந்தில் திருப்பி நிறுத்திவிட்டான். நானும் புல்லட்டை நிறுத்திவிட்டு நடந்தேன். திடீரென்று ஒரு பார்மஸியில் நுழைந்தான். அங்கேயிருந்து வலதும் இடதும் வலதும் பார்த்தான். நான் பதுங்கினேன். இருந்தாலும் சந்தேகம் தீரவில்லை போலிருக்கிறது. இரண்டு மூன்று சந்துக்களைச் சுற்றினான்."

"நீயும் விடாமல் ஃபாலோ செய்தாய்?"

"ஆமாம்... இத்தனைக்கும் நான் நிழலில்தான் ஒதுங்கியிருந்தேன். அப்புறம் அக்பர் சந்தில் நுழைந்தான். நான் போவதற்குள் மறைந்துவிட்டான். எனக்காக எங்கேயோ ஒளிந்திருக்கிறான் என்று புரிந்தது. அவனை டபாய்க்க, அந்த சந்தைவிட்டு விலகுவது போல் விலகிவிட்டு ஒரு லாரியின் பின்னே நின்று பார்த்தேன். நான் போய்விட்டேன் என்று நினைத்து ஒரு க்ளீனிக்குள்ளிருந்து வெளிப்பட்டான்"

"க்ளினிக்கா?"


"ஆமாம் யாரோ டாக்டர் மானோகர் பிளாஸ்டிக் சர்ஜன் என்று போர்டு போட்டிருந்தது. சின் க்ளினிக்தான் என்று நினைக்கிறேன். என்னை ஏய்க்க கொஞ்ச நேரம் பேஷண்டுகளோடு உட்கார்ந்து விட்டு நான் விலகி விட்டேன் என்று நினைத்து வெளிப்பட்டான். திரும்பத் தன் காருக்குள் நடந்தான். புல்லட்டில் நான் ஃபாலோ செய்தால் நான் நிச்சயம் கண்டு கொள்வான் என்று எனக்குத் தோன்றிய தால், ஒரு ஆட்டோவைப் பிடித்தேன். புல்லட் எல்லிஸ் ரோடிலேயே நிற்கிறது. அப்புறம் நேரே ஹோட்டல் சொர்ணப்ரகாஷ் வந்துவிட்டேன்"

"நீ வேண்டுமானால் என் புல்லட்டை எடுத்துக் கொள். நான் எல்லிஸ் ரோடு போய் உன் வண்டியை எடுத்துக் கொள்கிறேன்"

"தேங்க்யூ" என்றான் ஜான்சுந்தர்.

டின்னர் முடித்துவிட்டு, ஆட்டோ பிடித் தான் நரேந்திரன். மறுநாள் கொடைக்கானல் புரோக்ராமிற்கு வைஜயந்தியை இப்போதே டிரெஸ் பண்ணிக் கொள்ளச் சொல்ல வேண்டும் என்று திட்டமிட்டான்.

## 8 இரவு யாத்திரை



காஷ்மீரத்து சால்வையை இருபுறமும் இழுத்துக் கொண்டாள் வைஜயந்தி. "என்ன இங்கே இந்த குளிர் குளிருகிறது?"

வாடகைக் காரின் ஜன்னல்களை மேலேற் றினான் நரேந்திரன்.

"அட்ரஸ் என்ன சார் சொன்னீங்க?"

"39, பிள்ளையார் வீதி"

"பிள்ளையார் வீதிக்கு வந்துவிட்டோம் சார்"

சர்ரென்று மேம்பாலம் போல சரிந்து திரும்பிய பெரிய பிரைவேட் பாதையில் கார்



இருமி இருமி ஏறியது.

முப்பத்தொன்பதின் வாசலில் நிறுத் தினான் டிரைவர். ஹேண்ட் பிரேக்கைப் போட்டுவிட்டு, சந்தேகத்திற்கு இரண்டு கற்களை டயர்களுக்கு அடியில் முட்டுக் கொடுத்துவிட்டு, புகையும் பானெட்டைத் திறந்து வைத்தான்.

சிறிய வீடு.

கதவு தட்டி "மைதிலி" என்றாள் வைஜயந்தி.

திறந்தவளுக்கு இருபத்தைந்து வயது இருந்தால் அதிகம். இடுப்பில் ஒரு குழந்தை. அவள் புடவைத் தலைப்பு இடது கன்னம், குழந்தையின் முகம் முற்றிலும் பருப்புச் சாதத் தீற்றல்.

தூக்கிக் கட்டிய புடவையை இறக்கி விட்டுக் கொண்டே "வாருங்கள் நீங்கள்?" என்று இழுத்தாள்.

"மைதிலி?"

"நான்தான்"

"நாங்கள் மெட்ராஸிலிருந்து வருகி றோம். அனுசூயாவின் விபத்து பற்றி"

"உட்காருங்கள்" என்று நாற்காலிகளைக் காட்டி விட்டு உள்ளே பரபரப்பாக போனாள்.

ஐந்து நிமிடங்களில் முகத்தைத் திருத் திக் கொண்டு உடைகளை சரி செய்து கொண்டு வந்துவிட்டாள். "நீங்கள் அனுசூயாவின் ஃப்ரெண்டா" என்றாள் வைஜயந்தியைப் பார்த்து.

"இல்லை அந்த விபத்தைப் பற்றி விசாரிக்க வந்திருக்கிறோம்"

"போலீஸ்காரர்கள் விசாரித்து கேஸையே முடித்து விட்டார்களே? ஏய், இங்கே வா" கடைசியாக சொன்னது குழந்தையிடம் அது பிடிவாதமாக நரேந்திரனின் பாண்ட்டைப் பிடித்து இழுத்தது.

"பரவாயில்லை, குழந்தைதானே" என்று

நரேந்திரன் அதைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான்.

வைஜயந்தி ஈகின்ஜ பற்றிச் சொன்னாள்.

"அனுசூயா ரொம்ப திறமையாக கா ஓட்டுவாள் என்று அவள் அப்பா சொன்னா அதனால், தான் சந்தேகம் வருது" என்றா வைஜந்தி. "ஒருவேளை காரில் பிரே எதாவது கெட்டுப் போயிருக்கலாம்?"

"சான்ஸே இல்லை" என்றாள் மைதிலி. "எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அனுசூயாவும் ராதாகிருஷ்ணனும் வந்திருந் தார்கள். பேசிக் கொண்டே வாசலுக்கு வந்தோம். மலையேறும்போது ஒரு தடவை கூட ஸ்டியரிங்கைத் தரமாட்டேன் என்று சொல்லி விட்டாளே என்று நிறுத்தி யிருந்த காரில் ரிவர்ஸ் எடுத்தாள். அம்பா ஸிடர் காரை பெண்கள் ஓட்டுவது என்பது கஷ்டம் என்று நினைத்திருந்த நான் அவள் காரை எடுத்த ஸ்பீடைப் பார்த்து அரண்டு விட்டேன். மிகத் திறமையாக மேலே ஏற்றினாள்"

"இடத்தைக் காட்ட முடியுமா?"

மூவரும் வாசலுக்கு நடந்தார்கள். குரங்குக் குட்டி போல குழந்தை நரேந் திரனிடம் ஒட்டிக் கொண்டது.

வீட்டிற்கு வெளியே இப்போது காரை நிறுத்தியிருந்த இடம் ஏற்றமாக இருந்தது.

"இந்த ரோடில் ரிவர்ஸிலேயே காரைக் கொஞ்ச தூரம் ஏற்றி அதோ மட்டமாக இருக்கிறதே ஒரு திறந்தவெளி அங்கே கொண்டுபோய் காரை ஒடித்துத் திருப்பினாள். சர்ரென்று அம்புபோல இறங்கி வந்து எங்களிடமிருந்து அரை அடி இருந்த போது பிரேக் அடித்து நிறுத்தினாள். நான் அசந்து விட்டேன். ஜன்னலுக்கு வெளியே தலைநீட்டி "ராதா, கார் அட்டகாசமான கண்டிஷனில் இருக்கிறதே" என்று சிரித்தாள். இன்னும் கொஞ்ச தூரம்



போய் விட்டு வருகிறேன் என்று கிளம்பினாள். நானும் வரட்டுமா வரட்டுமா என்று ராதாகிருஷ்ணன் கேட்டபோது வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். இருட்டாகிவிட்ட நேரம் காரை ரொம்ப வேகமாக ஓட்டிக்கொண்டு போனாள். நிமிடம்... பத்து நிமிடமாயிருக்கும் கார் உருண்டு விழுகிற சத்தம் கேட்டது. நானும் ராதாகிருஷ்ணனும் ஓடிப் போய் பார்த்தோம். அம்பாஸிடர்தான் விழுந்து நொறுங்கியிருந்தது."

"அது எந்த இடம் என்று காட்ட முடியுமா?

கதவை மூடிக் கொண்டு அவர்களுடன் இவள் இறங்கினாள். கிட்டத்தட்ட பன்னி ரெண்டு நிமிட நடை. சாலை ஹேர்ப்பின் வளைவு வளைந்து, மீண்டும் மறுபடி வளைந்து திரும்பிய இடத்தில் அணைப்புச் சுவர் புதிதாகக் கட்டப்பட்டிருந்தது.

"இந்த சுவரைத்தான் இடித்துக்கொண்டு விழுந்து விட்டது கார்" என்று சுட்டிக் காட்டினாள்.

அந்த குறிப்பிட்ட விளிம்பிற்குக் கீழே மலை திடீரென்று உள்வாங்கி செங்குத்தாக இறங்கியிருந்தது.

"திருப்பத்தில் பாலன்ஸ் இழந்ததால் வந்து மோதியிருக்கலாம்" என்றாள் வைஜயந்தி.

"கார் உங்கள் வீட்டிலிருந்து கிளம்பி பத்து நிமிடம் ஆயிற்று என்றா சொன்னீர்கள் சத்தம் கேட்டபோது?"

"இருக்கும்... உள்ளே ரேடியோவில் இரண்டு பாட்டு மூன்றாவது பாட்டு முடியும் நேரத்தில் தான் சத்தம் வந்தது!"

"ஆனால், உங்கள் வீட்டிலிருந்து காரில் இறங்கி வருவதற்கு இந்த இறக்கத்தில் அதிகபட்சம் இரண்டு நிமிஷத்துக்கும் மேல் ஆகாது மீதி நேரம் அனுசூயா என்ன செய்து

கொண்டிருந்தாள்?"

"அதையும் போலீஸ் விசாரித்தது... ஒரு வேளை இன்னும் இரண்டு வளைவுகள் கீழே இறங்கிவிட்டு மறுபடியும் மேலே ஏறி வந்து கொண்டிருப்பாள் என்று ராதாகிருஷ் ணன் சொன்னபோது அப்படித்தான் இருந் திருக்க வேண்டும் என்று தோன்றியது"

"வீட்டைப் பூட்டாமல் வந்திருக்கிறீர்களே நாங்கள் கொஞ்ச நேரம் இந்த இடத்தை ஆராயப் போகிறோம் காத்திருப்பீர்களா?"

"புரிகிறது... என்னைப் போகச் சொல் கிறீர்கள் குழந்தையைக் கொடுங்கள்" என்று பிடிவாதம் பிடித்த குழந்தையை நரேந்திரனிடமிருந்து கிட்டத்தட்ட பிய்த்து எடுத்துக்கொண்டு போனாள் மைதிலி.

"வைஜ்... போலீஸ் தியரி இடிக்கிறது" என்றான் நரேந்திரன்.

"எப்படி?"

"இந்தக் கவரைப் பார்... மேலேயிருந்து இறங்கிவரும் கார் மோதும் கோணத்தில் தான் இருக்கிறதே தவிர, மேலே ஏறிவரும் வண்டி இந்த கோணத்தில் இடிப்பது அசாத்தியம். வேண்டுமானால் இங்கே இடிக்கலாம்" என்று சுவரின் ஆரம்பத்தைத் தொட்டுக் காட்டினான்.

"இன்னொரு விஷயம் பார்த்தாயா? நரேன்? சுவரின் கடைசி மூலை மட்டும்தான் இடிந்திருக்கிறது. அதிகபட்சம் ஆறேழு அங்குலம் நீளமுள்ள சுவரைத்தான் கார் மோதியிருக்கிறது. சுவரைத் தாண்டியிருக் கும் இடைவெளியில் தான் கார் அதிகம் போயிருக்கிறது. இதை வைத்துப் பார்த் தாலும் மேலேயிருந்து இறங்கும் கார்தான் மோதியிருக்க முடியும்..."

"இறங்கி வந்த காரை நிறுத்திவிட்டு அனுசுயா ஒருவேளை இந்த இடத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் திருப்பாளோ? மறுபடி காரை எடுத்தபோது



சரிந்து இறங்கியிருக்குமோ?"

"இருக்கலாம்... அது ஒன்றுதான் புத்தி சாலித்தனமான விளக்கம்... கார் மேலே ஏறி வந்தபோது மோதியிருக்கலாம் என்று ராதா கிருஷ்ணன் ஏன் சொன்னான்?"

"மைதிலி சொன்னதிலிருந்து இன் னொன்றைக் கவனித்தாயா? ராதாகிருஷ் ணன் அவளைக் கார் ஓட்டச் சொல்லி தூண்டவில்லை. அவளாகவேதான் காரை எடுத்திருக்கிறாள். பிரேக் எல்லாம் சரியாக இருந்திருக்கிறது. அவனை சந்தேகப்படுவது தப்போ?"

"மைதிலி பொய் சொல்லியிருந்தால்? அவள் ராதாகிருஷ்ணனின் ஆளாயிருந் தால்?"

"அனுசுயாவோடு காரில் ஏறிவந்து அவளைக் கொன்று காரோடு உருட்டி விட்டிருப்பானோ?"

"இருக்கலாம்"

"எனக்கு என்னவோ மைதிலி பொய் சொல்கிறாள் என்று தோன்றவில்லை... அவள் முகத்தைப் பார்த்தால் அப்படி இல்லை"

"உன் முகத்தைப் பார்ப்பவர்கள் கூடத் தான் கண்ணியமான ஆள் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள்"

"ஏய்!"

"சரி உன் பேச்சுக்கே வருவோம். மைதிலி பொய் சொல்லவில்லை. அனுசுயா காரில் கிளம்பிவந்தாள். ராதாகிருஷ்ணன் மைதிலி யோடு மேலே அவள் வீட்டில் பேசிக் கொண்டு நின்றாள். அப்படியிருந்தால் அனுசுயாவை தள்ளிவிட்டது யார்?"

"ராதாகிருஷ்ணன் தன் கையாலேயே தன் காரைத் தள்ளியிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. அவனுடைய ஆட்கள் இங்கே காத்திருந்து..."

"இங்கேயா?"

"இங்கே என்றால் இந்த சுவர் பக்க
திலேயே இல்லை மறைவாக பக்கத்திலே
ஒளிந்துகொண்டு... அதோபார் எதிர்ப்புறம்
சாலையின் மறுபுறம் மலையை ஒட்
யிருந்த பக்கத்தில் பாறை நாக்கை மடித்
வைத்தது போல் இருந்தது. பெரிய பாறை
குக் கீழ் சுதந்திரமாகச் செடிகொடிக
வளர்ந்திருந்தன.
"மூன்று நான்கு ஆட்கள் தாராளமா
அந்த இடத்தில் ஒளிந்து கொள்ளலாம்
என்றான் நரேந்திரன்.
சாலையைக் கடந்து செடிகளை விலக்கி
பார்த்தான். வைஜயந்தி அவனோடு எட்
நின்று பார்த்தாள். திடீரென் அவள் கண்க
அகலமாயின.
"நரேன்... அந்தப் பேப்பரை எடு"
அவள் சுட்டிக் காட்டிய இடத்தில் புதரி
பறந்து ஒட்டிக்கொண்டிருந்த பளபளப்பா
உள்ளங்கை அகலப் பேப்பர் இருந்தது
நரேந்திரன் இன்னும் சற்று முன்னேறி அ
எடுத்தான்.
"சாக்லேட்டைச் சுற்றிவரும் பேப்பர்..
ஆஸ்திரேலிய சாக்லேட்"
"யார் இங்கே ஒளிந்திருந்தான் என்
தெரிந்துவிட்டது நரேன். சந்தோஷ்
ஹோட்டல் சொர்ணப்ரகாஷின் ஓன
சந்தோஷ்... ராதாகிருஷ்ணனின் நண்ப
சந்தோஷ்.. அவன்தான் இந்த சாக்லே
களை ரெகுலராக சாப்பிட்டுக் கொண்டிரு
பவன்..."
நரேந்திரன் வைஜயந்தியின் கையை
குலுக்கினான். ஆனால், அவன் உற்சாக
உடனே வடிந்தது.
"சந்தோஷிற்கு அனுசூயா தனியா
இறங்கி வருவாள் என்று எப்படி தெரி
திருக்கும்?"
"நான் ஒரு தியரி சொல்லட்டுமா?" எ
றாள் வைஜயந்தி.



"என்ன?"

"ராதாகிருஷ்ணனும், அனுசூயாவும் இருட்டிய பிறகு காரில் இறங்கி வரும்போது கை காட்டி காரை நிறுத்தி சந்தோஷ் ஏறிக் கொள்வதாயிருக்க வேண்டும். இருவருமாக சேர்ந்து அனுசூயாவை க்ளோஸ் பண்ணி காரில் வைத்துத் தள்ளத் திட்டம் போட்டிருக்கலாம். யூரின் பாஸ் பண்ணுவதற்காக காரிலிருந்து அவர்கள் இறங்கிய நேரம், அனுசூயா விளையாட்டாக காரை எடுத்து ஓட்ட ஆரம்பித்து, கார் கவிழ்ந்துவிட்டது என்று சொல்லிக்கூட அவர்கள் தப்பித்திருக்கலாம்..."

"ஆனால், காரை நிறுத்திய பிறகுதான் சந்தோஷிற்கு அனுசூயா மட்டும் தனியே வந்திருக்கிறாள் என்பது தெரிந்திருக்கும் என்கிறாய்..."

"ஆனால், நிலைமை கையை மீறி விட்டுப் போய்விட்ட பின் அவன் என்ன செய்வான்? தனியாக அனுசூயாவை சமாளித்து காரோடு உருட்டி விட்டிருப்பான். அதனால் சுவர் அதிகம் சவால் செய்யாத மூலையாகப் பார்த்து தள்ளி விட்டிருப்பான்"

"தள்ளி விட்டு காத்திருந்து வேறு வண்டியில் அவன் போயிருக்கலாம் என்கிறாய்?"

"ஆமாம்..."

"வரவர நீ தேறிவிட்டாய் வைஜ்..." நரேந்திரனுக்கு ஆச்சரியமாயிருந்தது. கோர்வையாக காரணங்களோடு அவள் அம்பலத்தை யூகித்து சொல்லும் சாமர்த்தியம் அவனுக்கு மிகப் பிடித்திருந்தது.

"சரி, இங்கே இன்னும் நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை..."

"அனுசூயாவின் அடாப்ஸி ரிப்போர்ட்டைப் பார்க்க வேண்டும். மறுபடியும், கார் கிராஷில் தான் இறந்தாளா, அல்லது

சாகடிக்கப்பட்டு தள்ளப்பட்டாளா என்று
விடை கிடைக்கலாம்" என்றான் நரேந்திரன்
மைதிலிக்கு நன்றி சொல்லிவிட்டு
நரேந்திரன், வைஜயந்தி இருவரும் காரில்
ஏறும்போது "ம்மா...ம்மா' என்று கூப்பிட்டது
குழந்தை.

என்ன என்று நிமிர்ந்து பார்த்தான்.

"அடப்பாவி... தூக்கிவைத்திருந்த நேரம்
என் ஹீரோ பேனாவை லபக்கியிருக்கிறது
படவா ராஸ்கல்..." நரேந்திரன் பேனாவை
வாங்கிக் கொண்டான்.

"குழந்தை யாருது சார்... உங்களுதா?"
என்றான் டிரைவர், கார் கிளம்பியதும்.

"நான் சொல்கிற திருப்பத்தில் காரை
கொஞ்ச நேரம் நிறுத்து" என்றான் நரேந்
திரன்.

"எதுக்கு சார்?"

"உன்னைத் தூக்கிப் பள்ளத்தாக்கில்
கடாசத்தான்"

## 9 இறுதி யாத்திரை



"ஹூ ஹேவ் நியூஸ்" என்றான் ஜான்
சந்தா, மெட்ராஸ் மண்ணில் காலை
வைத்ததுமே.

"என்ன ஜான்?" என்றான் நரேந்திரன்,
ஆவலை அடக்க முடியாமல்.

"சந்தோஷ் பற்றியும், ஸ்டெல்லா
பற்றியும் விசாரிக்கச் சொன்னாயே"

"விசாரித்தாயா?"

"ஸ்டெல்லாவின் ஹஸ்பெண்ட் ஆக்ஸி
டெண்டில் உயிரை விட்டதில் அவளுக்கு
இன்சூரன்ஸ் பணம் கிடைத்திருக்கிறது"

"அந்தக் கதை தெரியும்"

"பெங்களூரில் இரண்டு முறை அவளை
ப்ராஸ்ட்டிட்டுஷனுக்காக அரெஸ்ட்
பண்ணியிருக்கிறார்கள்"

"ஐஸீ..." கார் ஈகிள்ஸ் ஐ வந்த



சேர்ந்துவிட்டது.

"சந்தோஷ்-ம் பெங்களூர்க்காரன்தான்.
அங்கே முதலில் சின்ன எலக்ட்ரானிக் கடை
வைத்திருக்கிறான். டெலிவிஷன், ஃப்ரிஜ்
என்று என்னென்னவோ வைத்திருந்த
போது கடை பற்றி எரிந்துவிட்டதாக
இன்சூரன்ஸ் க்ளெய்ம் பண்ணி கிட்டத்தட்ட
பன்னிரெண்டு லட்சரூபாய் கிடைத்தது
அவனுக்கு. ஆனால் சுலபத்தில் க்ளெய்ம்
செட்டிலாகவில்லையாம். ஏனென்றால்,
கடையில் நெருப்பை அணைத்தபிறகு
எதேச்சையாக பார்த்ததில் மிதியடிக்குக்
கீழே கொஞ்சம் பெட்ரோல் வாசனை
இருந்ததாம். கேட்டதற்கு பெட்ரோல்
வைத்துதான் சில எலக்ட்ரானிக்ஸ் அயிட்டங்
களை கிளீன் பண்ண முடியும். அது இது
என்று ஏதோ விளக்கம் கொடுத்து தப்பித்து
விட்டான். உண்மையில் காலி டி.வி.
பெட்டிகளையும், கம்ப்ரெஸரை எடுத்து
விட்டு இரும்புத் தகடுகளால் ஆன ஃப்ரிட்ஜ்
களையும்தான் எரித்திருப்பான் என்று ஒரு
சந்தேகம் இருக்கிறது"

"சந்தோஷ் ஒரு இன்சூரன்ஸ் ஃப்ராட்,
ஸ்டெல்லா ஒரு இன்சூரன்ஸ் ஃப்ராட்,
இரண்டு ஃப்ராடுகளுமாக ராதாகிருஷ்
ணனையும், நண்பனாக்கி இன்னொரு
ஃப்ராடு செய்து விட்டார்கள் போலிருக்
கிறது" என்றான் நரேந்திரன்.

"நீ ஊரில் இல்லாதபோது ராதாகிருஷ்
ணனை ஃபாலோ செய்த போது, அதே
வாடிக்கையான ஹோட்டல் ஸ்டெல்லாவின்
வீடு அவன் வீடு என்றுதான் அலைந்தான்.
ஒரே ஒரு வித்தியாசத்தைத் தவிர"

"என்ன வித்தியாசம் ஜான்?"

"பப்ளிக் எஸ்.டி.டி. பூத்திலிருந்து ஒரு
போன் பண்ணினான் நம்பரை நோட்
பண்ணி வைத்திருக்கிறேன்"

"நம்பர் உனக்கு எப்படித் தெரியும்?"

"நீ இந்த யூத்திற்குப் போனதில்லையா?
நம்பர் டயல் செய்யச் செய்ய டிஸ்ப்ளேயில்
அது வரும் கண்ணாடிக் கூண்டுக்கு
இருப்பவன் எந்த நம்பருடன் பேசுகிறான்,
எவ்வளவு நிமிஷம், எவ்வளவு ரூபாய்
எல்லாம் வெளியே இருப்பவனாலும் பார்க்க
முடியும்"

"எந்த ஊர்?"

"பெங்களூருக்குத்தான்.."

"நம்பரைக்கொடு" என்றான் நரேந்திரன்
"நாம் இப்போது ஆனந்தியுடன் பேசினா
லும், ஆச்சரியமில்லை"என்றான். டெலி
போனை இழுத்து ஜான்சுந்தர் கொடுத்த
எண்ணை எஸ்.டி.டி செய்தான்.

"ஹலோ" என்றது மறுமுனை, பெண்
குரல்.

"மெட்ராஸிலிருந்து பேசுகிறேன்" என்
றான் குரலை கிசுகிசுப்பாக்கி, மாற்றி.

"கோன்?"

"கோனும், இல்லை ஜஸ்டும் இல்லை,
ராதாகிருஷ்ணன் பேசுகிறேன்"

"கிழிந்தது போ...பெங்களூரில் போய்
ஒரு இந்திக்காரி போனை அட்டெண்ட்
பண்ணுவாள் என்று நான் எதிர்பார்த்தேனா?
கால் ஆனந்தி..." என்றான்.

"க்யா மாங்தா ஹை ஆப்கோ?"

நரேந்திரன் ரிசீவரை வைத்துவிட்டான்.

"எது கேட்டாலும் இந்தியிலேயே பேசு
கிறாளே ஜான். நீ ஏதாவது தப்பான நம்
பரைக் குறித்துக் கொண்டு வந்தாயா?"

"ஒருவேளை வேலைக்காரியாய் இருக்
கும், நரேன்.... நீ நகரு... நான் இந்தி
யிலேயே பேசிப் பார்க்கிறேன்"

ஜான்சுந்தர் டயல் செய்து பேசினான்
இந்தியில்.

"கொஞ்சம் ஆனந்தியைக் கூப்பிடுங்
களேன்"

"ஆனந்தியும் இல்லை, மொடிந்தியும்



இல்லை... என்ன நம்பர் வேண்டும் உனக்கு?"

"நான் யார் பேசுகிறேன் என்று புரிய வில்லையா? ராதாகிருஷ்ணன்"

"நீ எவனாயிருந்தால் எனக்கென்ன? என்ன வேண்டும் உனக்கு? கொழுப்பு பிடித்த மதராஸியாய் இருக்கிறாயே?"

ஜான்சுந்தர் ரிசீவரை வைத்து விட்டான். இரண்டு கைகளாலும் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டான். "நரேன்... சத்தியமாக இந்த நம்பரை டயல் செய்துதான் அவன் அன்றைக்குப் பேசினான்..."

"பேசியிருப்பான் இதே இந்திக்காரியுடன்... நீ ஃபாலோ செய்கிறாய் என்று தெரிந்து உன்னைக் குழப்புவதற்காக ஏதோ ஒரு ராங் நம்பருடன் பேசி கொஞ்சம் காசை வீணடித்தானோ என்னவோ?"

போன் ஒலித்தது.

"நரேன்... இரண்டு நாட்களாக ஒருத்தர் போன் பண்ணிக் கொண்டிருக்கிறார். உன்னுடன்தான் பேச வேண்டுமாம்" என்றாள் மீரா.

"கொடு..."

"நரேந்திரன்? நான் இன்சூரன்ஸ் கம்பெனியிலிருந்து பேசுகிறேன்... என்னப்பா ஆயிற்று?"

"கிட்டத்தட்ட கண்டுபிடித்து விட்டோம் சார்"

"என்ன கண்டு பிடித்தீர்கள்?"

"அது விபத்து இல்லை சார்..."

"நீ பாட்டுக்கு ரிலாக்ஸ் பண்ணிக் கொண்டிருக்கிறாய். இங்கே ராதாகிருஷ்ணன் ஒரு வக்கீலை அனுப்பி விட்டான். எதற்காக என் க்ளையண்ட்டிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை டிலே பண்ணுகிறீர்கள், காச்மூச் என்று அந்த லாயர் குதிக்கிறார்"

"நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

"கையெழுத்துப் போடும் ஆபீசர் லீவில்

போயிருக்கிறார் என்றெல்லாம் சொல்லி
பார்த்தேன். எடுபடவில்லை. மண்டே அ
றைக்கு நிச்சயமாய்த் தருவதாய் சொ
லியிருக்கிறேன். இன்றைக்கு சனிக்கிழமை
"இன்னும் இருபத்து நாலு மணி நேர
இருக்கிறதே சார்... அதற்குள் பார்த்
விடுவோம், ஒரு கை..."

"மண்டே காலை பதினோரு மணிக்கு
நீ எதுவும் அர்த்தமுள்ள அப்ஜெக்ஷ
கொண்டு வரவில்லையென்றால் நா
செக்கை பாஸ் பண்ணித்தான் ஆ
வேண்டியிருக்கும்"

"சரி சார்... இவ்வளவு தூரம் இழுத்து
பிடித்ததற்கே தாங்க்ஸ் சார்" ரிசீவ
வைத்தான்.

"நேரம் நெருங்குகிறது" என்றான்.

திடீரென்று மூளையில் ஒரு மின்னல்.

"வைஜ்... இப்போது ஒரு சின்ன டிராம
ஆடுவோமா?"

"என்ன?"

"நீ ராதாகிருஷ்ணனுக்கு போன் பண்ணு..
பெங்களூரிலிருந்து பேசுவதாகச் சொல்..
அவனாக ஆனந்தி என்று பெயர் சொல்லி
கூப்பிடுவான் அப்புறம் பேச்சுக் கொடு..
ஏதாவது க்ளிக் ஆகலாம்"

வைஜயந்தி டயல் செய்தாள்.

ரிசீவரை வைத்துவிட்டு உதட்டை
பிதுக்கினாள். "ராதாகிருஷ்ணன் விடிகாலை
யில் கிளம்பி மதுரைக்குப் போய்விட்டானாம்
இரண்டு நாள் ஆகுமாம் வருவதற்கு"

"என்ன ஜான்?"

"கோட்டை விட்டு விட்டேன் என்
றாயா? காலையில் எல்லாம் ஒர்க்ஷாப்பிற்கு
தானே போய்க் கொண்டிருந்தான் என்று
அசால்ட்டாக இருந்து விட்டேன். பட்சிக்கு
மதுரையில் என்ன வேலை?"

"அங்கே ஏதாவது ஒரு ரீட்டாவோ
சீனாவோ பார்த்து வைத்திருப்பான்"



"நீ போன காரியம் என்ன ஆயிற்று நரேன்?"

நரேந்திரன் கொடைக்கானல் ட்ரிப்பின் முழு விவரங்களையும் கொடுத்தான்.

"ஜோதிராமன் கொடுத்த ஃபைலை எடு வைஜ், அடாப்ஸி ரிப்போர்ட் பார்க்க வேண்டும்"

வைஜயந்தி ஃபைலை எடுத்து நீட்டினாள்.

பேப்பர்களைப் புரட்டினான் நரேந்திரன். இறுதியில் இருந்த ஜெராக்ஸ் பிரதிகளை எடுத்தான்.

"பெயர் அனுசூயா, வயது இருபத்திரண்டு. உயரம் சுமார் ஐந்தடி, ஐந்தங்குலம், பிணம் முற்றிலும் எரிந்து காணப்பட்டது. வலது காலில் கணுக்காலுக்குக் கீழ் மட்டும் மிச்சமிருந்தது. அதில் இருந்த வெள்ளி மெட்டிகள் இருந்தன. பிணத்தை அடையாளம் காட்டியவர் ராதாகிருஷ்ணன், கணவன். எலும்புகளை ஆராய்ந்ததில் கழுத்து எலும்பு முறிந்திருந்தது. காரின் ஸ்டியரிங் மோதியதால் உடைந்திருக்கலாம்"

"மற்ற விவரங்கள்"

நரேந்திரன் முகத்தில் திடீரென்று மின்னல் பாய்ந்தது.

"ஜான், நான் நினைப்பது சரியாக இருந்தால் ராதாகிருஷ்ணனை வம்பில் மாட்டலாம்... உடனே பெங்களூர்க்கு டிக்கெட் புக் பண்ணு" என்றான் குரலில் பரபரப்பு ஏற.

## 10 இறுதி யாத்திரை

பெங்களூர்.

ஜான்சுந்தர் கொடுத்த போன் நம்பரை வைத்து டெலிபோன்ஸ் டிபார்ட்மெண்டில் அட்ரஸ் விசாரித்து ஜீவன் ஹள்ளி களக்ஸ் டவுனுக்கு ஆட்டோ பிடித்து.

நரேந்திரன் அந்த குறிப்பிட்ட வீட்டை கண்டு பிடித்துவிட்டான்.

வரிசையான தெரு வீடுகளிலிருந்து பிரியும் சந்திற்குள் இருந்தது அந்த வீடு. வழியெல்லாம் கோதுமை காய்ந்தது. பெட்ரோல் லாரியை நிமிர்த்தி வைத்த சைஸில் புடவையை தாவணியாய்க் கட்டி யிருந்த இந்திக்காரியிடம் தான் போனில் பேசி டோஸ் வாங்கிக் கொண்டிருப்போம் என்று தோன்றியது. அவள் வீட்டிற்குள் டெலிபோன் கேபிள் போவதை கவனித் தான்.

"நமஸ்தே மாதாஜி"

"நமஸ்தே" என்றாள் சந்தேகக் கண்களு டன்.

"நான் மதராஸியிலிருந்து வருகிறேன். என் சகோதரியை இங்கே"

"மாடி போர்ஷன்" என்றாள்.

குறுகலான படிகள் ஏறினான்.

சுண்ணாம்பு வற்றிப் போன சிமெண்ட் பூச்சுடன் மாடி போர்ஷன் சிறு வீடாகத் தெரிந்தது.

கதவில் அழைப்பு மணி இல்லை தட்டி னான்.

நான்கங்குலம் திறந்து என்ன நடக்கிறது என்று யூகிப்பதற்குள் முன்னால் ஒரு கை அவனை பற்றி சரேலென உள்ளே இழுத்துப் போட்டது கதவு சாத்தப்பட்டது.

சுவரில் மோதி வாழைப் பழத்தோல் போல் தரைக்கு வழுக்கிய நரேந்திரன் நிமிர்ந்து பார்த்தான்.

உடனே ஆளை அடையாளம் புரிந்தது.

ஹோட்டல் சொர்ணப்ரகாஷில் டான்ஸ் ஹாலில் டிக்கெட் கிழிக்கும் ராட்சஸன். இரண்டு கைகளையும் தேய்த்து நரேந்திர னின் காதுகளைப் பிடித்து உயர்த்தினான்.

"ஒரு தடவை சொன்னால் உனக் கெல்லாம் புரிகிறதில்லை, எருமை ஜன்மம்



என்று குரல் வந்தது.

உள்ளறையிலிருந்து வெளியே வந்து நின்ற ராதாகிருஷ்ணன்.

நரேந்திரன் வலியுடன் சிரித்தான்.

"ராதாகிருஷ்ணன் உன் முகத்திரை முழு வதும் கிழிந்துவிட்டது"

"முகத்திரைதானே... இப்போது உன் உடம்பு முழுவதுமே கிழியப் போகிறது, நரேன்" ராதாகிருஷ்ணன் கேலியாக உதடு களைக் கோணிக் கொண்டான்.

தடியன் நரேந்திரனின் காதுகளை பிசைய ஆரம்பித்தான்.

முட்டாள் என்று நினைத்தான் நரேந் திரன். என் கைகளையும், கால்களையும் சுதந்திரமாக விட்டுவிட்டு காதைத் திருகுகிறாயே முட்டாள். நரேந்திரன் இரு கைகளையும் கத்தி போலாக்கி தடியனின் வயிற்றின் இருபுறமும் இறக்கினான்.

அவன் வயிற்றுக்குள் பிரளயமே புரள்கிற சத்தம் கேட்டது.

காதுகள் விடுபட்டன. ஆனால் தடியன் பற்களை அரைத்து நரேந்திரனின் தலை யில் தன் முழங்கையை இறக்-

நரேந்திரன் விலகித் தரையில் வேகமாக உட்கார்ந்தான். உட்கார்ந்த வேகத்தில் தடிய னின் கால்களைத் தன் முதுகால் அவன் முதுகை ரயில் பெட்டி வேகத்துடன் மோதினான்.

தடியனின் மூக்கு சப்பென்று சுவரில் ஒட்டிக் கொண்டது.

அதற்குள் பதறி ராதாகிருஷ்ணன் பதறி ரிவால்வரை எடுக்குமுன் -

நரேந்திரன் காற்றில் பறந்தான். இரண்டு கால்கள் கத்தரிப் பிடியாய் மணிக்கட்டைப் பிடித்துத் திருக, ரிவால்வர் நழுவிப் பறந்தது.

நரேந்திரனின் இரண்டு கைகளிலும் இப்போது துப்பாக்கிகள்.

ஒன்றை ராதாகிருஷ்ணன் நெற்றிக்கும் மற்றதை தடியன் வயிற்றுக்கும் கா பித்தான்.

"உட்காருங்கள், மண்டியிட்டு..." என்றான்.

நான்கு கண்களும் விரிந்தன.

மண்டியிட்டு உட்கார்ந்தார்கள்.

நரேந்திரன் உள்புறம் திரும்பினான் "அனுசூயா, வெளியே வா" என்ற குரல் கொடுத்தான்.

ஜோதிராமனின் அழகு மகள் அனுசூய தன் நைட்கவுனில் தயங்கித் தயங்கி மிரண்ட கண்களுடன் அந்த அறைக்கு பிரவேசித்து சுவரோடு தேய்த்து நின்றாள்.

வாசல் கதவு தட்டப்பட்டது "திற என்றான் அனுசூயாவிடம்.

அனுசூயா ராதாகிருஷ்ணனிட அனுமதிக்காக பார்வையை வீசினாள்.

"துப்பாக்கி இருப்பது என்னிட அவனிடம் என்ன பர்மிஷன்? திற"

அனுசூயாவின் உடலில் நடுக்க ஓடியது. கதவை நெருங்கினாள் திறந்தா

ஜான்சுந்தர் உள்ளே நுழைந்து விசிலடி தான், உடன் கதவை சாத்தினான்.

"ஜான் இந்த இரண்டு பேரில் யாராவ அதிகமாகக் கண்ணைச் சிமிட்டினால் கூட அவன் மூளையை இந்த ரூம் பூராவு சிதறடித்து விடு" என்றான் நரேந்திரன்.

"சந்தோஷமாக" என்று நரேந்திரனி மிருந்து ரிவால்வர்களை வாங்கி கொண் சௌகர்யமாக உட்கார்ந்து கொண்டா ஜான் சுந்தர்.

"அனுசூயா... இறந்து போன அனுசூய திங்கள்கிழமை அன்று உன் சாவை காட் மூன்றரை லட்சம் இன்சூரன்ஸில் பண வாங்கலாம் என்று திட்டமெல்லா போட்டிருக்கும் நேரத்தில் இப் உயிரோடு வந்து நிற்கிறாயே, அனுசூயா



என்றான் நரேந்திரன்.

"பாஸ்டர்ட்... நீ இத்தோடு தப்பித்து விடப் போவதில்லை" என்று உறுமினான் ராதாகிருஷ்ணன்.

"அனுசூயா... இவன் வலையில் நீ எப்படி விழுந்தாய்?"

அனுசூயாவின் கண்களில் கோபப் பொறி பறந்தது. "என் வீட்டிற்குள் வந்து என் ஹஸ்பெண்டையே கேலி பேசுகிறாயா நீ" என்றாள் வெடித்த குரலில்.

"நரேந்திரா!" ராதாகிருஷ்ணப் புலி மறுபடியும் உறுமியது.

"ஜான், இவர்களை நீ கவனித்துக் கொள், நான் இவளிடம் தனியே போய்ப் பேசுகிறேன்"

"எதுவாய் இருந்தாலும் இங்கேயே பேசு" என்றாள் அனுசூயா.

"அனுசூயா... நீ பணக்கார வீட்டுப் பெண்... காதல் வந்தது. ராதாகிருஷ்ண னிடம். அவனுக்கு உன் மேல் ஆசை வந்ததற்குக் காரணமே உன் சொத்துதான். கோடீஸ்வரரின் ஒற்றை மகள் என்ற காரணம் தான். ஆனால், உன் அப்பா சல்லிக்காக தரத் தயாராயில்லை. தனியாக ஒர்க்ஷாப் வைப்பதாகச் சொல்லி உன் செல்வாக்கில் பேங்க்கிலிருந்து லோன் வாங்க முயற்சி பண்ணியதும் தோல்வியடைந்து விட்டது.

"இந்த நிலையில் ராதாகிருஷ்ணனுக்கு புது ஆசை வந்தது. அவனும் சந்தோஷ் என்பவனும் சேர்ந்து பாண்டிச்சேரியில் ஒரு காபரே ஹால் ஆரம்பிக்கத் திட்டம் போட்டார்கள்"

"பேத்தல்!" என்றாள் அனுசூயா. "இரண்டு பேரும் சேர்ந்து ஆட்டோ மொபைல் கடைதான் வைப்ப தாயிருக்கிறது"

"Automobile இல்லை" என்றான் நரேந் திரன். "நீ இங்கே தனியாக ஒளிந்து

கொண்டிருக்கிறாயே... அங்கே ராதாகிருஷ்
ணன் தினமும் நைட் கிளப்பும், ஸ்டெல்லா
வின் கட்டிலுமாக கிடக்கிறான் தெரியுமா?
"டேய்" என்று புலி மறுபடி உறுமியது.
"பிசினஸ் பண்ண பணம் கேட்டா
என்பதற்காக இந்த திட்டத்திற்கு ஒத்து
கொண்டாயே, அனுசுயா? இதற்கா
இன்னொரு பெண்ணைக் கொலை செய்ய
கூட பர்மிஷன் கொடுத்துவிடுகிற அளவுக்கு
உன் புத்தி எப்படி கீழே போனது!"
"கொலையா? என்ன உளறுகிறாய்?"
அனுசுயாவின் குரலில் மிரட்சி இருந்தது.
"ஆரம்பத்தில் இருந்து சொல்கிறேன்.
நைட்கிளப் ஆரம்பிக்க பணம் தேவை என்
தும், ராதாகிருஷ்ணனின் நண்பன் சந்தோஷ்
தான் இந்த ஐடியா கொடுத்திருப்பான்
அவன்தான் இன்சூரன்ஸ் விவகாரத்தில்
தில்லுமுல்லு பண்ணுவதில் கை தேர்ந்
தவன். போதாதற்கு ஸ்டெல்லாவும் சேர்ந்து
கொண்டாள்"
"மூன்றரை லட்சத்திற்கு பாலிசி உ
பெயரில் எடுப்பது. அப்புறம் உன்னை
தீர்த்துக் கட்டுவது என்று கூட பேசியிரு
பார்கள். ஆனால் நீ படித்த பெண்.
எதற்காக இவ்வளவு தொகைக்கு உ
பெயரில் பாலிசி எடுக்கப்படுகிறது என்
உனக்குச் சந்தேகம் வரலாம் என்
உன்னையும் ஆட்டத்தில் சேர்த்து
கொண்டார்கள். இன்னொரு காரணம் மாத
மாதம் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபா
பிரீமியம் யார் கட்டுவது? அதுவும் உ
பணமாகவே இருந்தால் நல்லது பார்"
"எட்டு மாதத்தில் நீ செத்து விட்டதா
செட்டப் செய்வோம்... பணம் நம் கைக்
வந்ததும். பிஸினஸில் போடுவோம்
ஆனால், நீயும் எங்களோடு சேர்ந்து வா
ஒரு வழி பண்ணலாம் என்று ராதா
கிருஷ்ணன் சொல்லியிருப்பான். அவனு



குத் தெரிந்த பிளாஸ்டிக் சர்ஜன் ஒருத்தன் உதவியுடன் உன் முக ஜாடையை மாற்றி அமைத்து உன்னை வேறு பெண்ணாக மறு கல்யாணம் கூட செய்து கொள்வதாக சொல்லியிருப்பான் சரியா?"

அனுசுயா ராதாகிருஷ்ணனின் பக்கம் திரும்பினாள். "நம் ரகசியத்தையெல்லாம் சொல்லிவிட்டீர்களா?" என்றாள் தோல்வியுற்ற குரலில்.

"அவன் சொல்வதை நம்பாதே" என்றான் ராதாகிருஷ்ணன் துடித்து.

"நல்ல ஐடியா என்று உனக்குத் தோன்றியது" என்று தொடர்ந்தான் நரேந்திரன்.

"கொடைக்கானலுக்குக் காரில் ஒரு தோழியைப் பார்க்கப் போகலாம் என்றும், அங்கே ஒரு விபத்து நடந்தது போல் செட்டப் செய்யலாம் என்றும் தீர்மானித்தீர்கள். விபத்தில் எரிந்து போக உன்னைப் போலவே ஒரு பெண் தேவைப்பட்டாள். என்னதான் கருகிவிட்டாலும், எலும்புகளை வைத்து உயரம், முக அளவு எல்லாம் தெரிந்து கொண்டு விடும் வசதிகள் போலீசில் இப்போது இருப்பதால் தான் உன் அளவுகளும், உன் எடையும் இருக்கிற ஒரு பெண்ணை கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. ஆனந்தி மாட்டினாள். நைட் கிளப்பில் அவளுக்கும் சந்தோஷிற்கும் தகராறு. அதை சாக்காய் வைத்து அவளுக்கு வேறு வேலை வாங்கித் தருவதாக வெளியே கூட்டி வந்துவிட்டான் ராதாகிருஷ்ணன். அப்புறம் அவனிடமிருந்து அவள் ஓடிப்போய்விட்டாள் என்று ஸ்டெல்லா மூலம் வதந்தியைப் பரப்பிவிட்டு அவளை கைதியாய் வைத்திருந்தான்"

"கொடைக்கானல் பயணம் நிச்சயமானதும், செத்துப்போன பின் பணம் எதுவும் அக்கவுண்டிலிருந்து எடுக்க முடியாது

என்பதால் இருந்த பணத்தையெல்லாம் பேங்கிலிருந்து வித்ட்ரா செய்து விட்டாய். அந்த பணம் தான் கார் ஓனருக்கு எக்ஸ்ட்ரா காம்பன்சேஷனாகத் தர உபயோகமானது. கொடைக்கானலுக்கு நீயும், ராதாகிருஷ்ணனும், ஒரு காரில் வந்தீர்கள். சந்தோஷ்-ம், அவனால் கொலை செய்யப்பட்ட ஆனந்தியின் பிணமும் இன்னொரு காரில் கொடைக்கானலில்தான் வந்தனர். அவளுக்கு இறுதி யாத்திரை பாவம்..."

"இல்லை... மார்ச்சுவரியிலிருந்து காசு கொடுத்து என் அளவு இருந்த பிணத்தைத் தான் வாங்கி வந்தார்கள்"

"அப்படித்தான் உன்னிடம் சொல்லி ஏமாற்றினார்கள். சந்தோஷ் ஆனந்தியின் பிணத்தின்மீது பெட்ரோல் கொட்டி தயாராய் பாறைக்குக்கீழே பதுங்கியிருந்தான். நீ காரை எடுத்துக்கொண்டு வந்தாய். உன் கால் மெட்டிகளை பிணத்திற்குப் போட்டு விட்டாய்... காரில் வைத்துப் பற்ற வைத்து நீயும், சந்தோஷ்-மாக மலையிலிருந்து உருட்டிவிட்டு சந்தோஷின் காரில் ஏறித் தப்பி விட்டீர்கள்"

"அப்போது கொண்டு வந்து உன்னை பெங்களூரில் போட்டதுதான்... பணம் கிடைக்கும் வரை நீ வெளியே தலைகாட்டக் கூடாது என்பது ஏற்பாடு. அப்புறம் பெங்களூரில் உனக்கு பிளாஸ்டிக் சர்ஜரி..."

"அவசரம், அவசியமென்றால் உன்னுடன் பேச கீழே இருக்கும் வடக்கத்தியக்காரர்களின் போனை உபயோகித்தான், ராதாகிருஷ்ணன். எப்போதுமே அலர்ட்டாக தன்னை யாராவது கண்காணிக்கிறார்களா என்று கவனிப்பான்தான். என்னைக் கூட இரண்டு தடவை அடித்துப் போட ட்ரை பண்ணினான். ஆனால், ஜான்சுந்தர் தொடர்ந்து போனபோது மறைக்காமல் இந்த போன் நம்பர் தெரிந்து விட்டது."



"பாஸ்டர்ட் நீதான் என் வீட்டில் நுழைந்து ஆனந்தியின் போட்டோவைத் திருடியவனா?" என்றான் ராதாகிருஷ்ணன்.

"தமிழில் எவ்வளவோ நல்ல வார்த்தை இருக்கும் போது இங்கிலீஷில் ஏன் திட்டுகிறாய், பிரதர்? முதலில் புது காபரே ஹாலுக்கு டான்ஸர்களை செலக்ட் செய்யும் ஆல்பம் அது என்றுதான் நினைத்தேன். அப்புறம்தான் தெரிந்தது, அனுசுயாவுக்குப் பதிலாக எரிக்கப்பட வேண்டியவளைத் தேர்ந்தெடுக்க உனக்கு அத்தனை போட்டோக்கள் தேவைப்பட்டது என்று... முகத்தின் அளவிலிருந்து ஒவ்வொரு அளவும் கிட்டத்தட்ட அனுசுயாவின் அளவு இல்லை, ஆனந்திக்கு?"

"நீ பிளாஸ்டிக் சர்ஜன் மனோகர். வீட்டில் நுழைந்தபோது என்னிடமிருந்து தப்பிக்கத்தான் அப்படிச் செய்தாய் என்று நினைத்தேன்" என்றான் ஜான்சுந்தர் "ஆனால், இப்போது போலீஸோடு டாக்டரை மிரட்ட அவருக்கு நீ அனுசுயா முகத்தை மாற்ற கொடுத்த அட்வான்ஸ் பற்றிக் கூடச் சொல்லிவிட்டார்"

"சந்தோஷ், ராதாகிருஷ்ணன் இவர்களோடு வீட்டை விற்று பணம் போடவும், கிளப்பை நிர்வாகம் செய்யவும் ஸ்டெல்லா என்ற டான்ஸரும் கூட்டாளியாய் சேர்கிறாள் தெரியுமா?"

"ராதா" அனுசுயா அழுகை முகத்துடன் கணவன்புறம் திரும்பினாள். "இவன் சொல்வதெல்லாம் உண்மையா? ஒர்க்ஷாப் வைத்து நாமும் வாழ்க்கையில் முன்னுக்கு வந்து உன் அப்பா முகத்தில் கரியைப் பூசுவோம் என்றுதானே என்னிடம் சொன்னீர்கள்?"

"இவன் என்னிடம் உதை வாங்கிச் சாகப் போகிறான்" என்றான் ராதாகிருஷ்ணன்.

"உண்மைகளைச் சொன்னதற்காகவா?

இதோ போலீஸ் வந்துவிடும்... அவர்களி
சொல்லி உதைக்கு ஏற்பாடு பண்ணு
நரேந்திரன் சிரித்தான்.

கீழே போலீஸ் ஜீப் வந்து பி
அடிக்கும் சப்தம் கேட்டது.

சென்னை.

"டாடி" என்று ஓடினாள், அனுரு
ஜோதிராமனின் தொப்பை இடிக்க அ
தோளில் தலைசாய்த்து குலுங்கிக் குலு
அழுதாள்.

கண்களில் துளிர்த்த நீரை சுட்டுவிரலா
சுண்டிவிட்டு ஜோதிராமன் அகலம
கையை நீட்டினார் "தேங்க்யூ மை பா
தேங்க்யூ வெரிமச்..."

"ராதாகிருஷ்ணன், சந்தோஷ், குரூப்
அரெஸ்ட் பண்ணியது போல இன்சூரா
கம்பெனியை மோசம் செ
முயற்சித்ததற்காக உங்கள் மகளை
கைது செய்வார்கள் சார்" என்று
நரேந்திரன்.

"எந்த வக்கீலை வைத்து எப்
வெளியே கொண்டு வருகிறது என்று ந
பார்த்துக் கொள்கிறேன்... உனக்கு எவ்வள
ஃபீஸ் வேண்டும் கேள்..."

"ஆறுகோடி ரூபாய் வரை தருவத
முதல் அத்தியாயத்தில் சொன்னீர்கள்"

"அது என் மகள் செத்து விட்டாள் என்
நினைத்து, பிழைத்து வந்துவிட்டாளே
குறைத்துக் கொள் அப்பனே"

"ஐந்துகோடியே தொண்ணூற்றொன்
லட்சத்து, தொண்ணூற்று ஒன்பதாயிர
தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்
ரூபாய் கொடுங்கள் சார் போதும்" என்று
நரேந்திரன், பெருந்தன்மையாக.

சுபம்



விற்பனையில்

125-வது இதழ்
மெகா சிறப்பிதழ்

நாவல்லீடர்

தென்றல் தேகம்
வருடும் நடையில்...

ரமணிசந்திரன்

எழுதியது...



உங்கள்
நாவலை
வாங்கி
விட்டீர்களா?






ஜோத்ஸ்னா கன்னத்தில் பூவிதழால் தடவப்பட்டு விழித்தாள். நீளமான காம்புடன் கூடிய ரோஜாப் பூவுடன் அப்பா "குட்மார்னிங்" என்றார். ரோஜாவிற்கு அழகான காண்ட்ராஸ்ட்டாக காம்பில் பச்சை நிற இலைகள் இரண்டு. இலைகளின் நரம்புகளில் பச்சை நிற பூனை முடி.

"ஹாய் டாட்" என்று இரண்டு கைகளையும் நீட்டி அவருடைய கழுத்தைக் கட்டிக் கொண்டாள். கன்னத்தில் முத்தமிட்டாள்.

"அசிங்கம், அசிங்கம்... பல் தேய்க்காமல் முத்தம்"

"டாட்" ஜோத்ஸ்னா பொய்க் கோபத்துடன் குழந்தை போல கால்களை உதைத்துவிட்டு கட்டிலிலிருந்து இறங்கினாள். போர்வையை உதறி நுனியோடு நுனி பொருத்தி மடித்தாள். கசங்கிய தலையணையை சரி செய்து அதன் அருகில் அழகாக வைத்தாள்.

"நைட் நான் எத்தனை மணிக்கு தூங்கினேன், தெரியும், டாடி?"

"பன்னிரண்டு மணி?"

"ஊஹூம்..."

"ஒன் ஓ க்ளாக்?"

"இல்லை..."

"ஒரு மணிக்கு அப்புறமுமா விழித்திருந்தாய்?"

"நாலு மணி வரை தூக்கம் வராமல் புரண்டு கொண்டே இருந்தேன் டாடி... அப்புறம் எப்படித் தூங்கிப் போனேன் என்று எனக்கே ஞாபகமில்லை...."

"ஏண்டா கண்ணா?"

"எக்ஸைட்மெண்ட்"

"பைத்தியம். நாலு மணி வரைக்கும் தூங்காமல் இருந்ததற்கு, ஆபீசில் முதல் நாளே தூங்கி வழிந்து தொலைக்கப் போகி

நாய்..."

"என்னை பார்த்தால் அப்படியா இருக்கிறது?"

ஜோத்ஸ்னா கண்ணாடிக்கு எதிரில் இடுப்பில் கை வைத்து நின்றாள். பிங்க் நிற நைட்டி. பாரமில்லாத காட்டன் துணி. கொக்கிகள் போடும் இடத்தில் வெல்வெட் ரிப்பனால் அமைக்கப்பட்ட ரோஜாப்பூ நைட்டி ஏன்?

முகம். தலைமுடியில் நான்கு மட்டும் கலைந்திருந்தது. சிறிய நெற்றி. கத்தரித்த கரிய புருவங்கள். இரவு தீற்றிக் கொண்ட கண் மை கூடக் கலையவில்லை. கண்களில் மெலிதான சிகப்பு இருந்ததே தவிர தூக்க மில்லை. அவளுடைய சருமநிறம் வெளிச்சத்தை பிரதிபலித்தது. அவளுக்கு என்ன குறைச்சல்? இன்றைக்கு புதிய ஆபீலை ஒரு புயல் போல் புரட்டப் போகிறாள்.

"டாட்... டோண்ட் ஐ லுக் ஸ்வீட் அண்ட் ஸிம்பிள்?"

"உனக்கென்ன ராஜாத்தி? யூ ஆர் மார்வலஸ்"

அப்பா ரோஜாப் பூவை அங்கிருந்த பூ ஜாடியில் நளினமாக செருகிவிட்டு, "ஒன்பது மணிக்குள் கிளம்பினால், நானே காரில் ட்ராப் பண்ணி விட்டுப்போகிறேன்" என்றார்.

"முதல் நாளே லேட்டாகப் போவேனா? ஒன்றிலிருந்து நூறு வரை எண்ணிக் கொண்டிருங்கள். நூறு சொல்லும் போது முழுசாக நான் ரெடியாக இருப்பேன்"

அட்டாச்ட் பாத்ருமிற்குள் தென்றலாக நுழைந்தாள்.

ஜோத்ஸ்னா ரெடியாகி டைனிங் டேபிளுக்கு நடந்தபோது, மூடி வைத்த ஹாட் பேக்கிற்கு எதிரில் அப்பா மேஜைமேல் கைகளைக் கட்டிக் கொண்டு காத்திருந்தார்.



"என்ன ஸ்கோர், டாட்?"

"தொண்ணூற்றி எட்டு மா" என்றார், புன்னகையுடன் நிமிர்ந்து.

"சொன்னேன், இல்லையா? நூற்றுக்குள் வந்து விடுவேன் என்று!"

"தொண்ணூற்றி எட்டு என்றேனே தவிர இது முதல் தடவை எண்ணிய தொண்ணூற்றி எட்டு என்று சொன்னேனா? இது ஆறாவது தடவை..."

"பொய், பொய், பொய்" ஜோத்ஸ்னா தரையில் கால்களை உதைத்தாள்.

"கண்ணா, எனக்குப் பசிக்கிறது... ஒன்பதரைக்கு போர்டு மீட்டிங்கில் எம்.டி. பேசுவதற்கு நோட்ஸ் ரெடி பண்ண வேண்டும்... லேட்டாகப் போக முடியாது... உட்காரேன் ப்ளீஸ்..."

ஹாட் பேக்கைத் திறந்தாள். வெள்ளை நூல்களால் பின்னப்பட்டது போன்ற இடியாப்பம்.

அப்பாவின் தட்டில் இரண்டு, தனது தட்டில் இரண்டு என்று எடுத்து வைத்தாள். சமைப்பதற்கு ஒரு அம்மாள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாளே தவிர, பரிமாறும் போது அவளுடைய உதவியை அவர்கள் கேட்பதில்லை. அப்பா - மகளுக்கிடையில் இருக்கும் நெருக்கமான அன்னியோன்னியத்தில் இன்னொரு நிழல் அநாவசியம் என்று அவர்கள் தீவிரமாக நம்பினார்கள்.

"டாட்... முதல் நாள் ஆபீஸ் போகும் மகளுக்கு ஏதாவது ஸ்பெஷல் அட்வைஸ்?"

"நீ என்ன எல்.கே.ஜி.யில் சேரப் போகிற குழந்தையா என்ன? காலேஜ் கோல்டு மெடலிஸ்ட்... கம்ப்யூட்டர் படித்திருக்கிறாய். கார் ஓட்டத் தெரியும்... ஸ்விம்மிங் சாம்பியன்... உனக்கு நான் என்ன புதிதாய் அட்வைஸ் பண்ணுவது?"

"சரியான நழுவல் கேஸப்பா... கோல்டு மெடலிற்கும், நான் சேரப் போகிற கிளார்க்

வேலைக்கு என்னப்பா சம்பந்தம்? ஏதோ பெரிய கம்பெனியில் பர்ஸனல் மேனேஜராக இருக்கிறீர்களே. பொழுது விடிந்தால் பொழுது போனால் ஸ்டாஃப் மேட்டர்களை டீல் பண்ணுகிறீர்களே என்று அட்வைஸ் கேட்டால் என்னவோ மரத்தின் மேலே ஏறி உட்காருகிறீர்களே,"

"இதை நீ அவாய்ட் பண்ண வேண்டும்"

"எதை?"

"சீனியர்ஸை எடுத்தெறிந்து பேசுவதை..."

"டாட்..."

"இப்போது நான் உன் அப்பா இல்லை. பர்ஸனல் மேனேஜர் கோபிகிருஷ்ணன்.. உன் சீனியர்களிடத்தில் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும். உன்னுடைய பேக்ரவுண்டையெல்லாம் ஆபீஸ் வாசலிலேயே கழற்றி வைத்துவிட்டு நீயும் அந்த ஆபீஸில் ஒரு கிளார்க் என்ற கவனத்தோடு மற்றவர்களுடன் பழக வேண்டும். ஆபீஸ் மேட்டர் தவிர, மற்றவர்களுடைய பர்ஸனல் மேட்டர்களை வம்பு பேசக் கூடாது. பத்து மணி ஆபீஸ் என்றால் ஒன்பது ஐம்பத்தொன்பதுக்கு அங்கே இருக்க வேண்டும். ஐந்து மணிக்கு முடிகிறதென்றால், ஐந்து ஒன்றுக்குத்தான் புறப்படலாம்... வாங்கும் சம்பளத்திற்கு சலிக்காமல் உண்மையாக உழைக்க வேண்டும்... போதுமா... இன்னும் கொட்டட்டுமா?"

"நீங்கள் சொன்ன க்வாலிட்டீஸ் எல்லாம் எனக்கு இருக்கிறதா, டாட்?"

"இல்லாத குணத்தையும் பழக்கப்படுத்திக் கொண்டால் போயிற்று. எனிவே, ஆல் தி பெஸ்ட்..."

சாப்பிட்டு கை கழுவினாள். அம்மாவின் படத்திற்கு எதிரே போய் நின்று நிமிட நேரம் கண்களை மூடிக் கொண்டாள்.

கண்ணாடியில் பார்த்து பருக்களைக்



கோபத்துடன் தட்டினாள் ... வையைத் தோளில் க்ளிப் செய்து கொ சார்... ல் "டாட், ஐ'ம் ரெடி" என்றாள். ராம்

பர்ஸனல் மேனேஜர் கோபிகிருஷ்ணா அதற்குள் காரில் ஏறியிருந்தார்.

"ஹாப் இன்" என்றார் கதவைத் திறந்து பிடித்து.

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 2

**கா**சா மேஜர் சாலையில் நவீனக் கண்ணாடி முகப்புக் கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் இருந்தது அலுவலகம்.

லிப்டிலிருந்து வெளிப்பட்டு பளிங்குக் கற்கள் பதித்த காரிடாரில் நடந்து, இந்து ஹவுசிங் பைனான்ஸ் என்று பித்தளை எழுத்துக்கள் அறிவித்த கண்ணாடிக் கதவை திறந்ததும், குளிரூட்டப்பட்ட காற்று தழுவிக் கொண்டது.

நாற்காலிகள் காலியாக இருந்தன. இன்னும் ஊழியர்கள் வரவில்லை. ஹால் கடிகாரம் 9:45 என்று முள்ளை தயக்கத்துடன் நகர்த்தியது.

காக்கி உடை அணிந்த இரண்டு பியூன்கள் மேஜைகளை சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

கதவு திறக்கப்பட்டு காற்று கலைந்ததும் நிமிர்ந்து பார்த்தார்கள்.

"என்னம்மா பணம் கட்டணுமா? பத்து மணிக்குத்தான் கேஷ் கவுண்ட்டர் திறப்பார்கள்" என்றான் ஒருத்தன்.

அவளை ஒரு கஸ்டமர் என்று நினைத்து விட்டார்கள்.

அவள் வசீகரமாகப் புன்னகைத்தாள். "நான் கஸ்டமரில்லை, புதிதாய் இன்றைக்கு வேலையில் சேர வந்திருக்கிறேன்"

"அதுதானே யோசிக்கிறேன் - இந்த மூஞ்சியை ஏற்கெனவே பார்த்திருக்கிறோமே என்று... போன வாரம் இன்டர்

வியூவிற்கு[illegible]சக் கலர் புடவை தானே கட்டிக் கொ[illegible] வந்தீர்கள்?"

"ஆமாம்"[illegible]என்று தலையசைத்தாள்.

"மேனேஜர் வந்து விட்டார். போய்ப் பாருங்கள்" என்று ஹாலை அடுத்து இருந்த மரக் கேபின்களைக் காட்டினான்.

மேனேஜர் ரூம் கதவைக் குட்டி விட்டு நுழைந்தாள்.

"குட் மார்னிங் மிஸ் ஜோத்ஸ்னா..."

"குட் மார்னிங்" என்றாள். இன்டர்வியூவிலேயே பரிச்சயமான முகம். முப்பது வயது? செழுமையான முகம். லிப் க்ளாஸ் போட்டது போல உதடுகளில் ரோஸ்ப் பளபளப்பு. ஆண்மை மிக்க, ஆனால் முரட்டுத்தனமில்லாத குரல். நட்பு ததும்பும் கண்கள், சூழ்நிலையின் இறுக்கத்தை உடனடியாக அகற்றும் ஒரு புன்னகை.

பிரகாசமாயிருந்தான்.

"என் பெயர் கிருபாசங்கர். மேனேஜர், ஓவர் ஆல் இன்சார்ஜ்... வெல்கம் டு இந்து..."

எங்கே பொத்தனை அழுத்தினானோ, பியூன் தலை எட்டிப் பார்த்தது.

"காஃபி" என்றான் பியூன் தலை மறைந்தது.

"நூறு பேர் டெஸ்ட் எழுதி, பதினாறு பேர் இன்டர்வியூ செய்யப்பட்டு, நீங்கள் மட்டும் செலக்ட் ஆனதற்கு காரணம் உங்கள் சர்டிபிகேட்ஸ் இல்லை ஜோத்ஸ்னா... உங்களிடம் இருந்த ஒரு துடிப்பு... ஒரு உறுதி... இந்துவால் நீங்களும், உங்களால் இந்துவும் வளர என் வாழ்த்துக்கள். முதலில் உங்களை அக்கவுண்ட்ஸ் பிரிவில் தான் போடப் போகிறோம்... இந்த ஆபீஸில் என்ன நடக்கிறது. நமது பிசினஸ் என்ன என்று அதன் சூட்சமங்களைத் தெரிந்து கொள்ள உங்களுக்கு ஒரு மாதம் ஆகலாம். அப்புறம் உங்களை அட்வான்ஸஸ் பிரிவிற்கு மாற்றலாம் என்பது திட்டம்"



"ஐ வில் டூ மை பெஸ்ட், சார்..."

"உங்கள் சீட்டிற்குப் போகலாம்.." என்று எழுந்தான். எழுந்தாள். காபின் கதவு திறந்து வெளியே வந்தால் ஆச்சரியம். சற்று முன் அவள் காலியாகப் பார்த்திருந்த அத்தனை இருக்கைகளும் அலாவுதீன் விளக்கு தேய்த்தது போல் நிரம்பியிருந்தன. மேஜைகளில் ஃபைல்கள் உதித்திருந்தன.

"குட்மார்னிங் எவ்ரிபடி... இது ஜோத்ஸ்னா... நம் ஆபீஸில் புதிதாகச் சேர்ந்திருக்கும் அஸிஸ்டென்ட்... ஒவ்வொரு சீட்டாக அறிமுகம் செய்து வைக்க சுமித்ரனுடன் அனுப்புகிறேன்... சுமித்ரன்... ஒன் மினிட்..."

அக்கவுண்ட்ஸ் என்று அட்டை வைத்த பிரிவிலிருந்து சுமித்ரன் விடுபட்டு அவர்களை நோக்கி வந்தான்.

ஜோத்ஸ்னாவின் நினைவு அடுக்குகளில் க்ளிக் என்ற சத்தம் கேட்டது. சுமித்ரன்! இவன் இங்கா இருக்கிறான்!

சுமித்ரனை அவள் கண்களுக்குள் நிறைவாய் வாங்கினாள்.

"ஐம் சுமித்ரன்" என்றான்.

"ஐம்..." உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள். "ஜோத்ஸ்னா"

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 3

ஹால் கடிகாரம் சங்கீதம் பாடியது. மணி ஐந்து என்றது.

நிறைய மேஜைகள் காலியாகிவிட்டன.

ஜோத்ஸ்னா ஃபைலையும், கணக்குக் குறிப்பையும் சரிபார்த்துக் கொண்டிருந்தாள். நிழலாடியதும் நிமிர்ந்தாள்.

"மேடம்... ஐந்து மணியோடு ஆபீஸ் ஓவர்" என்றான் பக்கத்து இருக்கை இளைஞன். இவன் பெயர் என்ன திவாகரா, சுதாகரா? காலையில் ஒரே மூச்சில் கிட்டத்தட்ட முப்பத்தி ஆறு பேரை அறிமுகம் செய்ததில் அவளுக்கு ஒன்றிரண்டு பெயர்கள் தவிர

எல்லாம் மறந்து விட்டன.

"இதோ இந்த பேப்பரைப் பார்த்ததும் மூடிவிடுகிறேன்" என்றாள் புன்னகையோடு.

அவன் அடுத்த மேஜைக்கு நகர்ந்து "என்ன மிக்ஸி ஒரு கேம் போடலாம், வருகிறாயா?" என்றான்.

மிக்ஸியா ஜோத்ஸ்னா இயல்பான ஆர்வத்துடன் சுமித்ரனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் கேமிற்கு வரவில்லை என்று தலையசைத்து விட்டு ஜோத்ஸ்னாவைப் பார்த்து புன்னகை எறிந்தான். "மிக்ஸி என்பது ஆபீஸ் நண்பர்கள் எனக்கு வைத்திருக்கும் செல்லப் பெயர்"

"அதென்ன மிக்ஸி?"

"சுமித்ரனை சுருக்கி சுமித் சுமித் என்று கூப்பிட்டார்கள். சுமித் இப்போது மிக்ஸியாகி விட்டது"

சிரித்தாள். "கேமிற்குக் கூப்பிட்டார் போலிருக்கிறது. நீங்கள் என்ன கேம் ஆடுவீர்கள்?"

"அவன் கூப்பிட்டது சீட்டாட... நான் விளையாடுவதில்லை... மேலே ரிக்ரியேஷன் ரூமில் கேரம், கார்ட்ஸ், செஸ், டேபிள் டென்னிஸ் எல்லாம் ஐந்து மணியிலிருந்து ஓட ஆரம்பித்துவிடும்"

"பெரிய ரூமா?"

"உங்களுக்குக் காட்டவில்லையே... பார்க்கலாம், வாருங்கள்..."

ரிக்ரியேஷன் ஹால் இரைச்சலாக இருந்தது.

"வரியா பிரதர் ஒரு கேம்?" என்று இரண்டு மூன்று மூலைகளிலிருந்து அழைப்பு வந்தது.

ஜோத்ஸ்னாவைப் பார்த்து எல்லோருமே பொதுவாய் ஒரு புன்னகை சிந்தினர்.

"நீங்கள் என்ன கேம் ஆடுவீர்கள், சார்?"

"சார் வேண்டாம். சுமித்ரன் என்றே கூப்பிடுங்கள்... பொழுது போகவில்லை என்றால்



டேபிள் டென்னிஸ் ஆடுவேன்..."

"டேபிள் காயமில்லாமல் புதிதாய் இருக்கிறது... பார்த்தால் எனக்கே ஆட வேண்டும் போலிருக்கிறது. ஒரு கேம் ஆடலாமா, சுமித்ரன்?"

"ஆல்ரெடி இரண்டு பேர் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்தது ஆடுவதற்கும் அதோ அவர்கள் வெயிட் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்." என்று சுட்டிக் காட்டினான் சுமித்ரன்.

டேபிளில் அடிபட்டுக் கொண்டிருந்த பந்து சட்டென்று ஓய்ந்து போனது. ஒரு ப்ளேயரின் கையில் தஞ்சமடைந்தது.

"மிக்ஸி ஆடுப்பா... ஒரு கேம் தானே... மேடம் ஆசைப்படுகிறார்களே..." என்று ஆடிக் கொண்டிருந்தவர்கள் பேட்டையும், பாலையும் கொடுத்தார்கள்.

ஜோத்ஸ்னா புடவையை இடுப்பில் செருகிக் கொண்டு எதிர்ப்பக்கம் போய் நின்றாள்.

கேரம், செஸ், சீட்டுக்கட்டு எல்லாம் இங்கேயே பார்க்க ஆரம்பித்தது.

சுமித்ரன் சற்றே சங்கோஜத்துடன் "லவ் ஆல்" என்று பந்தை எளிமையாக ஸர்வ் செய்தான்.

விளையாட்டு சூடு பிடித்தது.

சுமித்ரன் அசந்து போனான். ஜோத்ஸ்னாவிற்கு விளையாட்டில் மிக நல்ல தேர்ச்சி இருப்பது அவனுக்கு புரிந்தது. அவனுடைய திறமை முழுவதையும் சேகரித்து அவளை அவன் சந்திக்க வேண்டியிருந்தது.

அவன் ஸர்வ் செய்த அத்தனை பந்துக்களையும் அவளால் எடுக்க முடிந்தது. ஆனால் அவள் ஸர்வ் செய்த போது பந்து மேஜையின் முனையைத் தொட்டு சீறிக் கொண்டு இரண்டு முறை பறந்தது.

சுமித்ரன் தளர்ந்து விட்டான். முதல் கேம்

மிக சுலபமாக அவள் வெற்றி பெற்றாள். எல்லோரும் கை தட்டினார்கள்.

இரண்டாவது கேமில் ஜோத்ஸ்னா நிறைய தவறுகள் செய்தாள். சுமித்ரன் சுலபமாக வெற்றிபெற்றான்.

சட்டையும், பனியனும், வியர்வையும் ஈரமாகியிருக்க, சுமித்ரன் பேட்டை கொடுத்து விட்டு கை தட்டலுக்கிடையில் நெற்றி வியர்வையை ஒற்றை விரலால் வழித்துக் கொண்டான்.

படிகளில் இறங்கும் போது கேட்டான்.

"ஏன் ஜோத்ஸ்னா?"

"என்னது ஏன் ஜோத்ஸ்னா?"

"ஏன் இரண்டு கேம்களிலும் தோற்றுப் போனீர்கள்?"

"வேலையில் சேர்ந்த முதல் நாளே ஒரு தப்பான மூவ். எடுத்தவுடனே என் மீது உங்களுக்கு ஒரு கோபம் வந்துவிடும். உங்களை நான் அவமானப்படுத்தி விட்டது போல் ஒரு பழியுணர்ச்சி தோன்றிவிடும். என்னை எதிரியாகவே பார்க்கத் தோன்றும். டேபிள் டென்னிஸில் வேண்டுமானால் நான் என் திறமையைக் காட்ட முடியும். ஆபீஸ் வேலைகளைப் பொறுத்த வரையில் நீங்கள் உங்கள் பாண்டியத்தை காட்டத் தொடங்கிவிட்டால் நான் பூஜ்யமாகி விடுவேன். எதையும் ஒழுங்காகக் கற்றுக் கொள்ள முடியாது. உங்கள் ஃபீலிங்க்ஸை ஹர்ட் பண்ணக் கூடாது என்று நான் கொஞ்சம் விட்டுக் கொடுத்து ஆடினேன்... ஆனால் உங்கள் கேம் நன்றாகத்தான் இருந்தது"

"உங்களை சைக்காலஜி என்னை அசத்துகிறது. ஜோத்ஸ்னா..."

படிகளில் இறங்கிக் கீழே ஆபீஸிற்குள் வந்து விட்டார்கள்.

"ஜோத்ஸ்னா ..." மேனேஜர் அறைக்கதவு திறந்திருந்தது. கிருபா சங்கர் டெலிபோன்



ரிசீவரை உயர்த்திக் காட்டினான் "உங்களுக்கு போன்"

ஜோத்ஸ்னா புடவை சரசரக்க ஹாலைக் கடந்து ரிசீவரை எடுத்தாள்.

"காரை அனுப்பட்டுமா, ஜோ?" எதிர் முனையில் அவன் அப்பா.

"வேண்டாம் டாட்... நான் வந்து விடுகிறேன்"

"எப்படியிருந்தது முதல் நாள் அனுபவம்?"

"த்ரில்லிங்... நேரில் சொல்கிறேன் டாட்..." ரிசீவரை வைத்தாள். "குட்நைட் சார்" என்றார் கிருபாசங்கரிடம்.

"குட்நைட்... யார் அப்பாவா?"

"ஆமாம் சார்..."

"எப்படி இருந்தது முதல் நாள்?"

"ஐ என்ஜாய்ட் இட்"

"குட்நைட்"

லிப்ட் அருகே சுமித்ரன் காத்திருந்தான்.

"சுமித்ரன், காலையிலேயே கேட்க வேண்டும் என்று நினைத்தேன். என்னை உங்களுக்கு ஞாபகம் இல்லையா?"

அவன் தயக்கத்துடன் அவளை மறுபடியும் அலசிப் பார்த்தான்.

"ஐம் ஸாரி... எனக்கு ஞாபகம் வரவில்லை."

"நீங்கள் ப்ரெஸிடன்ஸி காலேஜில்தானே படித்தீர்கள்?"

"ஆமாம்... நீங்களும் அதே காலேஜா ஜோத்ஸ்னா?"

"எத்திராஜ். ஆனால் இண்டர் காலேஜ் காம்படிஷனில் உங்களைப் பார்த்திருக்கிறேன்... இப்போது ஞாபகம் வருகிறதா?"

"ஊம்ஹூ"ம்..." அவன் நினைவைக் கசக்கிப் பார்ப்பது தெரிந்தது.

"பனி விழும் மலர்வனம் பாட்டை நீங்கள் பாடினீர்கள்... ஃபர்ஸ்ட் ப்ரைஸ் கிடைத்தது. அப்படியே அசந்து போனேன். உங்களிடம்

ஆட்டோகிராப் வாங்கினேன். கையைப் பிடித்து குலுக்கினேன்... நீங்கள் ஷாக் ஆகிப் போய் என்னைப் பார்த்தீர்கள்."

"அந்தப்பெண்ணா நீங்கள்? இரட்டை ஜடைப்போட்டு, அதிகமாக லிப்ஸ்டிக் போட்டு அத்தனை பேருக்கு எதிரிலும் துணிச்சலாய் இருப்பதாய்க் காட்டிக் கொள்ள என் கையைப் பிடித்துக் குலுக்கிய இம்மெச் சூர்ட் பெண்ணா நீங்கள்!"

"இம்மெச்சூர்ட் என்ற வார்த்தையை நான் அப்ஜெக்ட் பண்ணுகிறேன்... யூ நோ எனக்குள் ஒரு விதமான இன்ஃபாச்சு வேஷன் வந்துவிட்டது. ப்ரஸிடென்ஸி காலேஜை பஸ் கடந்து போகிற போது கூட நீங்கள் எங்கேயாவது கண்களில் படுகிறீர்களா என்று தேடுவேன்... ஐ வாஸ் மேட்... எப்படியாவது உங்களை வாரத்திற்கு இரண்டு தரமாவது பார்த்துவிட வேண்டும் என்று எனக்கு ஒரு வெறி கூட இருந்தது."

"இப்பொழுதெல்லாம் நான் பாடுவதில்லை"

"ஏன் சுமித்ரன்?"

"காலேஜ் மாணவர்களுக்கு நடுவில் என் குரல் எடுபட்டது. மற்றபடி நான் ப்ரொஃபிஷனல் சிங்கர் இல்லை. ஆபீஸ் வேலை சம்பளம் என்பதுதான் எனக்கு அவசியமாய்த் தோன்றியது" வெளியே வந்துவிட்டார்கள்.

"சுமித்ரன்... வீடு எங்கே?"

"மந்தைவெளி..."

"என்னை ராயப்பேட்டையில் ட்ராப் பண்ண முடியுமா?"

சற்றே திகைத்துவிட்டு "வித் ப்ளெஷர்" என்றான். ஹீரோ ஸ்லீக் மோட்டார் சைக்கிளின் பில்லியன் சரிவாக இருந்ததால் அவன் மேல் தீற்றிக்கொண்டுதான் அவள் உட்கார்ந்தாள்.

"உங்கள் தோளைப் பிடித்துக் கொள்ளலாமா?"

"ம்" என்றான், எச்சிலைக் கூட்டி விழுங்கி.

அவனுடைய பின்னங்கழுத்து பூனைமயிரையும், கழுத்தில் புரண்ட மெல்லிய தங்கச் சங்கிலியையும், வியர்வையும், ஆஃப்டர் ஷேவ் லோஷனும் கலந்த ஒரு வாசத்தையும் அவள் நெருக்கமாக கவனிக்க முடிந்தது.

ஜோத்ஸ்னாவிற்குள் ரபரப என்று தாளம் ஒலிக்கத் துவங்கியது.

அவனுடைய தோளிலிருந்து கையை எடுத்து அவன் வயிற்றை அணைத்துப் போட்டுக் கொள்ள வேண்டும் போலெழுந்த துடிப்பைக் கஷ்டப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டாள்.

காலேஜ் நாளில் விழுந்த விதை திடீரென்று கனவு பூவாக மலர்ந்து அவளுக்கு மிக நிஜமானது. அவள் உடலில் இன்னும் அதிர்வுகளை ஓட்டிக் கொண்டிருந்தது.

ஸிக்னல் சிகப்பிற்காக அவன் பிரேக் அடித்தபோது, சற்றுக் கூடுதலாகவே அவன் மீது சாய்ந்தாள் ஜோத்ஸ்னா!

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 4

ஞாயிற்றுக்கிழமை என்றாலே ஜோத்ஸ்னாவிற்கு தனி குதூகலம் வந்துவிடும். அப்பா கால்களில் வெந்நீர் ஊற்றிக் கொண்டு குதிக்க மாட்டார். அரை டிராயரும், கான்வாஸ் ஷூக்களும் போட்டுக் கொண்டு இருவரும் கிளப்பிற்குப்போய் விடுவார்கள். டென்னிஸ் பந்தை உண்டு இல்லை என்று பண்ணிவிட்டு தொப்பலாக வியர்வையில் நனைந்துதான் வீடு திரும்புவார்கள்.

மதியம் சாப்பாடு.

ஒரு கேம் செஸ், செக் அண்ட் மேட் என்கிற கடைசிப் பிரயோகம் அநேகமாக ஜோத்ஸ்னாவின் பக்கத்திலிருந்துதான் வரும். நான்கு மணிக்கு பாத் டப்பில் ஊறி

ஊறிக் குளித்துவிட்டு, வீக்லி ஷாப்பி
நண்பிகளுடன் மீட்டிங், எப்போதாவது பி
சினிமா, ஞாயிறு சாயந்திரங்களில் அப்
விற்காக கிளப்பில் சீட்டாட்டத் தோழர்க
காத்திருப்பார்கள்.

இன்றைக்கும் அப்படித்தான். அப்
கிளம்பிப் போய்விட்டார். ஹேண்ட் பே
எடுத்துக் கொண்டு ஜோத்ஸ்னா புறப்ப
டாள். தோட்டத்துப் பூக்களைப் பார்வை
யிட்டுக் கொண்டே வெளியே வந்தாள்.

தெருமுனையிலேயே ஆட்டோ
ஸ்டாண்ட் அவளைப் பார்த்துமே பழக்கமா
டிரைவர் ஆட்டோவை இழுத்துக் கிளப்பி
கொண்டு கிட்டத்தில் வந்து பிரே
அடித்தான்.

"விதான்" என்று ஏறி உட்கார்ந்தா
"விதான் சூப்பர் மார்க்கெட்"

லஸ் முனையில் ஞாயிற்றுக் கிழமை
கான கூட்டம் இருந்தது. க்ராஸாரிகளை
பொறுக்கிக் கொண்டு, காஸ்மெடிக்ஸை
தேர்வு செய்து விட்டு, மாடிக்கு வந்தா
பரிசுப் பொருட்களும், ஸ்டேஷன
அயிட்டங்களும் இருந்த பிரிவில் நுழை
தாள். பிறந்தநாள், கல்யாணநாள், புது
குழந்தை, பரீட்சை வெற்றி என்று வெ
வேறு சந்தர்ப்பங்களுக்கான வாழ்த்
அட்டைகளில் அவளுக்குப் பிடித்தமா
ஒற்றை ரோஜா. அதன் இதழ்களில ஈர
பனித்துளிகள். ரோஜாவிற்கு சற்றே மேலே
இடைவெளி விட்டு இரண்டு உதடுகள்.
சிகப்பு உதடுகள், பெண்ணின் உதடுகள்.

அந்த வாழ்த்தை எடுத்துப் பிரித்தாள்
உள்ளே நான்கே வரிகள்.

என் கூந்தல்
இந்த ரோஜாவிற்காகக் காத்திருக்கிறது
இந்த ரோஜா
உன் விரல்களுக்காக காத்திருக்கிறது.

அவளுக்கு அந்த வரிகள் மிகவும்



பிடித்துப் போயின... இதை... இதை சமீரனுக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் அதற்கான நேரம் இன்னும் கனிந்து விட்டதா தெரியவில்லை. என்றைக்கிருந்தாலும் அவள் மனதை அவனுக்குத் திறந்து காட்டுவதற்கு இந்த வாழ்த்தைத்தான் முதலில் தரப் போகிறாள்.

"ஹலோ" என்ற பரிச்சயமான குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள்.

கிருபாசங்கர்.

"ஹலோ" என்றாள், கண்களைப் போலியாக அகல விரித்து. "எங்கே இந்தப் பக்கம்?"

"ஒரு கிரீட்டிங் கார்டு செலக்ட் பண்ணலாம் என்று வந்தேன்"

"செலக்ட் பண்ணி விட்டீர்களா?"

கிருபாசங்கர் வசீகரமாகப் புன்னகைத்தான். கண்களில் கூடுதல் பிரகாசமாய் மின்னியது.

"தங்கக் காசு வாங்கப் போன இடத்தில் தங்கச் சுரங்கத்திற்கு வழி திறந்து விட்டால் போலிருக்கிறது... வாழ்த்து அட்டைக்கு அவசியமில்லை என்று நினைக்கிறேன்"

"கவிதை மாதிரி ஏதோ பேசுகிறீர்கள். எனக்குப் புரியவில்லை" மனசிற்குள் சற்று முன் மலர்ந்த மின்னலை இவன் வரவு மேகமாய் மூடியது.

"நீங்கள் அவசரத்தில் இருக்கிறீர்களா, ஜோத்ஸ்னா? இல்லையென்றால் என்னுடன் ஒரு காபி சாப்பிட நேரமிருக்குமா?"

சிறிய ஹோட்டல் நவீனப்படுத்திய உள்தோற்றம். மின்சார நீரூற்று பல நிறங்களுக்கு மாறிக் கொண்டிருந்தது. திட்டுத்திட்டாய் சிறிய வட்ட மேஜைகள். சௌகரியமான குஷன் நாற்காலிகள். மறைக்கப்பட்ட வெளிச்சம். அடக்கப்பட்ட இசை. பிளாஸ்டிக் உறையுடன் மெனுகார்டு.

"இரண்டு பாஸந்தி" என்றான் கிருபா சங்கர்.

"ஸ்வீட்டா?" என்று ஜோத்ஸ்னா ஆச்சரியம் காட்டினாள்.

"இன்றைக்கு ஸ்வீட்டுடன்தான் பேச ஆரம்பிக்க வேண்டும்" என்றான் புன்னகைத்து.

"என்னுடைய ஆபீஸ் முகம் உங்களுக்குத் தெரியும். என்னைப் பற்றிக் கொஞ்சம் பர்ஸனலாகப் பேச விரும்புகிறேன். என் அப்பா தில்லியில் எனர்ஜி மினிஸ்ட்ரியில் அண்டர் செகரட்டரி. இந்த டிசம்பரில் ரிடையராகிறார். அம்மா தில்லியில் பெண்கள் பத்திரிகையின் சிறப்பு எடிட்டர். நான் மூத்த மகன். எனக்கு ஒரு தம்பி. பிலானியில் டபிள் டிகிரி படித்துக் கொண்டிருக்கிறான். அவ்வளவுதான் எங்கள் குடும்பம். சின்னக் குடும்பம். எனக்கு ஏப்ரலில் முப்பது முடிந்தது. அம்மா கல்யாணத்திற்காகக் கட்டாயப்படுத்திக் கொண்டிடேயிருந்தாள். நேரம் வந்ததும் நானே சொல்கிறேன் என்று இத்தனை நாள் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன். இப்போது என்னால் ஒரு முடிவுக்கு வர முடிந்திருக்கிறது"

ஸ்வீட் வந்தது.

கிருபாசங்கர் ஜோத்ஸ்னாவின் முகத்தை குறுகுறுவென்று பார்த்தான். அவளுக்குப் புரிகிற மாதிரி இருந்தது. ஐயோ புரிகிறதே என்றும் இருந்தது.

"யார் அந்த லக்கி கேர்ள்?" என்றாள், இயல்பான ரியாக்ஷனாகி.

"என் அம்மாவிற்கு உங்கள் போட்டோவை அனுப்பி வைக்கட்டுமா, ஜோத்ஸ்னா? அப்பாவையும், அம்மாவையும் வந்து உங்கள் வீட்டில் பார்க்கச் சொல்லட்டுமா?"

அவள் அலுவலகம் சேர்ந்து இருபத்தேழு நாள்தான் ஆகிறது. அதற்குள் கிருபாசங்கர் தீர்மானத்திற்கே வந்துவிட்டான். ஆனால்



மௌனப் பொய்யைவிட வலி பரவாயில்லை என்று தோன்றியது.

"உங்களை எந்தப் பெண் கல்யாணம் செய்து கொண்டாலும் அதிர்ஷ்டக்காரிதான் கிருபாசங்கர். ஆனால் அந்த அதிர்ஷ்டம் எனக்கில்லை என்று நினைக்கிறேன்"

"ஏன் ஜோத்ஸ்னா? பிடிக்கவில்லையா?"

"சீச்சீ... ஏற்கனவே வேறு ஒருத்தரைப் பிடித்துப் போய்விட்டது... ஐம் ஸாரி..."

"ஸாரி... சொல்ல வேண்டியது நான் தான்." என்றான். அவனுடைய சொந்தக் குரல் பதுங்கிவிட்டது. இது வேறு யாருடைய குரலோ, "தடால் என்று பூசணிக்காயைப் போட்டு உடைத்தது போல நான் சொல்லியிருக்கக் கூடாது. முதலில் உங்கள் எண்ணத்தையும் கேட்டிருக்க வேண்டும்"

பேரர் ரவா தோசையைக் கொண்டு வந்து நாஜுக்காக வைத்தான்.

"சுமித்ரனா?" என்றான் உலர்ந்த குரலில்.

ஆமாம் என்று தலையசைத்தாள்.

"லக்கி பாஸ்டர்ட்"

"சுமித்ரனுக்கு இன்னமும் தெரியாது..." என்றாள் "நான் இன்னும் சொல்லவில்லை. அவர் மனதில் என்ன ஐடியா இருக்கும் என்று தெரியவில்லை"

"ஜோத்ஸ்னா... ஐ விஷ் யூ ஆல் தி பெஸ்ட். சுமித்ரன் குருடனாயிருந்தாலொழிய நோ சொல்ல மாட்டான். ஆனால்" ரவா தோசையைக் கிள்ளி மேஜையில் இறைத்தது நடுங்கும் விரல்கள். "ஆனால் ஒரு பர்ஸன்ட் சான்ஸில் அவன் இல்லை என்று சொல்லிவிட்டால்... சொல்லிவிட்டால்.... இந்த கிருபாசங்கரை ஞாபகம் வைத்துக் கொள்வீர்களா ஜோத்ஸ்னா?"

அவன் கண்களில் ஈரம் கண்டு அவள் துணுக்குற்றாள்.

"ஒரு பர்ஸனல் மேனேஜராக நான் மற்றவர்களிடம் எப்படிக் கம்யூனிகேட் பண்ண வேண்டும் என்று நிறையப் படித்திருக்கிறேன்... நிறைய பயிற்சி செய்திருக்கிறேன். ஆனால் பர்ஸனல் விவகாரத்தில் மகா சொதப்பல் சொதப்பி விட்டேன்"

புன்னகை அவன் முகத்திற்கு திரும்பி விட்டது. தோசையை நகர்த்தினான்.

"காஃபி சொல்லிவிட்டுமா?" என்றான்.

மௌனமாய்த் தலையசைத்தாள்.

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 5

முதல் சம்பளம் வாங்கியாகிவிட்டது. ஆபீஸில் அத்தனை பேருக்கும் ஸ்வீட், காரம், காபி.

"சம்பளத்தில் பத்து பைசாவாவது பாக்கி இருக்கிறதா, இல்லையா?" என்றான் கிருபாசங்கர்.

"சந்தோஷமாகதான் செலவு செய்தேன்... ஒவ்வொரு மாதமுமா கொடுக்கப் போகிறேன்"

ஜோத்ஸ்னாவிற்கு கிருபாசங்கரின் மீது மதிப்பு கூடியிருந்தது. அன்றைக்கு நடந்த உரையாடலின் நிழல் படிந்ததாகக் கூடக் காட்டிக் கொள்ளாமல் வெகு இயல்பாக அவன் நடந்து கொண்ட விதம் அவனுடைய கண்ணியத்திற்கு சாட்சியாய் நின்றது.

"சொல்லிவிட்டீர்களா?" என்றான்.

அவன் எதைச் சொல்கிறான் என்று சட்டென்று புரியவில்லை. புரிந்ததும் இல்லை என்று உதடுகளைப் பிதுக்கினாள்.

"இன்றைக்கு சந்தோஷமான தினம்... சொல்லி விடுங்களேன்..." என்றான்.

"நான் அவசரப்படக் கூடாது என்று பிடிவாதமாக இருக்கிறேன். சரியான சந்தர்ப்பம் கிடைத்தால், இன்றைக்கு சொல்லி விடுவேன்" என்றாள். "கொஞ்சம் பயமாகக்



கூட இருக்கிறது, கிருபா... ஸாரி சார்"

"இன்றைக்கென்னவோ சுமித்ரனிடம் நீ சொல்லிவிடுவாய் என்று எனக்கு பட்சி சொல்கிறது" என்று கிருபா சங்கர் கண்ணடித்தான்.

இன்னும் தள்ளிப் போட்டுக் கொண்டே போவதில் அர்த்தமில்லை என்றுதான் ஜோத்ஸ்னாவிற்கும் தோன்றியது. இன்றைக்கு எப்படியும் சொல்லிவிட வேண்டும் "சுமித்ரன்..." என்று தைரியமாகக் கூட்டிக் கொண்ட போது.

மோட்டார் சைக்கிள் இயல்பான வேகத்தில் அண்ணாசாலைக்குள் திரும்பிய போது பட்டீர் என்ற சத்தத்துடன் பின் வீல் பங்க்சர் ஆனது. வண்டி யாரோ பிடித்து உலுக்கியது போல நடுங்கியது. ஜோத்ஸ்னா சுமித்ரனை இறுக்கமாகக் கட்டிக் கொண்டாள். மோட்டார் சைக்கிள் சுமித்ரனின் கட்டுப்பாட்டிலிருந்து நழுவியது. எப்படியோ இரு கால்களையும் சாலையில் ஊன்றி அவன் நிறுத்திய போது, பயத்தின் உச்சியை இருவரும் தொட்டு மீண்டிருந்தனர்.

சர் சர் என்று அம்பு போலக் கடந்து போகும் மற்ற வாகனங்கள் கொஞ்சம் இடைவெளி கொடுத்த நேரத்தில், ஜோத்ஸ்னா இறங்கினாள்.

"பங்க்சர்" என்றாள்.

வெள்ளை உடுப்பு போலீஸ்காரர் எங்கிருந்தோ ஓடிவந்தார். போக்குவரத்தை விசில் ஊதி நிதானப்படுத்தி, சாலையின் ஓரத்திற்கு சுமித்ரன் ஒதுங்க வழி செய்து கொடுத்தார்.

இரண்டு சக்கரங்களிலும் காற்று இருக்கும் போது இலைச்சருகு போல் மெலிதாகத் தோன்றிய வண்டி இப்போது ஒற்றைச் சக்கரத்தில் கனத்து வழிந்தது. தள்ளி நடந்த

போது பிடரியில் ஏகமாய் வியர்த்தது. கை இடுக்குகளில் சட்டை ஒட்டிக்கொண்டது.

"உட்லண்ட்ஸ் தியேட்டர் வரை போக வேண்டும். அங்கே தான் பங்க்சர் கடை இருக்கிறது. இப்படியே சர்வீஸ் லேனில் போய் விடுங்கள்" என்றார் போலீஸ்.

"நான் ஹெல்ப் பண்ணட்டுமா?" என்று ஜோத்ஸ்னா அபத்தமாகக் கேட்டாள்.

"ஜோத்ஸ்னா... பங்க்சர் போட அரை மணி, முக்கால் மணி நேரமாகும்... நீங்கள் ஆட்டோ பிடித்து போய்விடுங்கள்"

"உங்களை இப்படியே விட்டு விட்டா?"

"நீங்கள் என்ன செய்ய முடியும் ஜோத்ஸ்னா? ஆட்டோ?"

"ஆட்டோ, நீ போப்பா... நான் வரு வில்லை"

"என்ன ஜோத்ஸ்னா இது?"

"டெய்லி ஜாலியாக உட்கார்ந்துதானே வருகிறேன். இன்றைக்கு அரை மணி நேரம் லேட்டானால் பூமி பிளந்து விடவாப் போகி றது? போ போ என்று என்னைத் துரத்து தீர்கள், சுமித்ரன்..."

அதற்கப்புறம் போ என்று அவன் சொல்லவில்லை.

கிட்டத்தட்ட முக்கால் கிலோ மீட்டர் தள்ளிய பிறகு பங்க்சர் ஒட்டும் கடை. ராவண சபையில் அனுமார் வாலால் அமைத்த சிம்மாசனம் போல டயர்கள் அடுக்கப்பட்டிருந்தன. சின்னப்பையன், ஒரு கையால் டவுசரை இழுத்து விட்டுக் கொண்டே அநாயாசமாக பின் வீலைக் கழற்றினான். டயரைப் பிதுக்கி, டியூபை வெளியே எடுத்தான்.

"தோ... பெரிய ஆணி சார்... தள்ளிகினு வந்ததுல மவுத்தும் போயிரிச்சி... அரை அவரு ஆவும்... காபி கீபி குட்சிட்டு வார்தா இருந்தா போயிட்டு வாங்க..."

ஹோட்டலுக்கு நடந்தார்கள்.



நடுத்தர ஹோட்டலில் உயரமான ஸ்டூல்கள். இன்னும் சுத்தம் செய்யக் கூடிய மேஜைகள்.

வண்டி பங்க்சர் ஆகி, களைப்பாய் அவன் இருக்கும் இந்த சந்தர்ப்பத்திலா சொல்வது?

"நீங்கள் ஏதோ சொல்ல வந்தீர்களே ஜோத்ஸ்னா?" என்று அவனே எடுத்துக் கொடுத்தான்.

தயங்காதே. யோசிக்காதே. அடடா இன்னும் தாமதிக்காதே. எடு... கொடு...

ஜோத்ஸ்னா உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள். ஹேண்ட் பேகில் தயாராய் வைத்திருந்த கவரை எடுத்தாள். அதற் குள்ளிருந்து வாழ்த்து உரையை எடுத்தாள். மௌனமாக நீட்டினாள்.

வாங்கியபோது இருந்த மெருகு இல்லை. ஓரம் வளைந்திருந்தது. வியர்வை ரேகைகள் பதிந்து விட்டன.

உறையின் மீது எதுவும் எழுதப்படாத தால், தன் விரல்களை பேண்ட்டில் துடைத்துக் கொண்டு சுமித்ரன் வாழ்த்து அட்டையை வெளியே எடுத்தான். திறந் தான். படித்தான். நிமிர்ந்தான்.

அவனை சந்திக்க முடியாமல், அவள் விழிகளைத் தழைத்துக் கொண்டாள்.

"ஜோத்ஸ்னா"

"ம்?"

"இது நிஜமா?"

"ம்"

"வண்டி பங்க்சர் ஆன போது இன்றைக்கு எனக்கு ரொம்ப மோசமான நாள் என்று நினைத்தேன். எவ்வளவு தப்பு! எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. இது இப்படித்தான் முடியும் என்று மனசுக்குள் கொஞ்ச நாட்களாகவே ஒரு இரைச்சல் இருந்து கொண்டிருக்கிறது... ஐ'ம் த்ரில்ட்... ஆனால் உங்களுக்கு என்னைத் தெரியாதே ஜோத்ஸ்னா?"

"என்ன தெரிய வேண்டும்?"

"என் குடும்பப் பின்னணி...."

"உங்களைத் தெரிந்து கொண்டால் போதாதா?"

"ஆசை தவிப்பு எல்லாம் இருந்தது... ஆனால் அருகதை இருக்கிறதா என்று சந்தேகம் இருந்தது..."

சுமித்ரன் மறுபடியும் அந்த காதல் வாழ்த்தைப் படித்தான். அதன் ஒவ்வொரு எழுத்திலும் அவனுக்கு ஒரு சேதி இருப்பதைப் போல ஊன்றி ஊன்றிப் படித்தான்.

"காலேஜ் நாட்களிலிருந்தே நீங்கள் என்னைக் கனவுகளில் துரத்திக் கொண்டிருந்தீர்கள் என்றால் உங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கும் சுமித்ரன். இந்த ஆபீஸ் வருவதற்கு முன்பிருந்தே நான் உங்களுக்காக ஏங்கிக் கொண்டிருந்தேன், தெரியுமா?"

"எனக்கு பதட்டமாக இருக்கிறது, ஜோத்ஸ்னா. சுமித்ரனுக்கா இந்த அதிர்ஷ்டம் என்று என்னால் நம்பவே முடியவில்லை... ஆனால்..."

"ஆனால் என்ன சுமித்ரன்?"

"நானும், நீங்களும் ஒரே ஆபீசில் வேலை பார்க்கிறோம் என்பதுதான் நமக்குள் பொதுவாய் இருக்கிற விஷயம். உங்களிடம் கார் இருக்கிறது. இந்த மோட்டார் சைக்கிளே நான் கடனில் வாங்கியது. இன்னும் கடன் அடைபடவில்லை. என் வீட்டில் ஃபேன் இல்லை. ஏ.சி. கிடையாது. தோட்டம் கிடையாது. உங்கள் வீட்டில் நீங்கள் அடிப்படை வசதிகள் என்று நினைப்பவையே என்னிடம் கிடையாது"

"என்னை ரொம்ப மலிவாக நினைத்திருக்கிறீர்கள், சுமித்ரன்..."

"வசதிகளைப் பற்றி மட்டும் சொல்லவில்லை, ஜோத்ஸ்னா. என்னுடைய சில கடமைகளை எனக்கு வரப் போகிறவளின் தலையிலும் சுமத்துவது தப்பு என்று



நான் நினைத்தேன்.... அதுவும் பூஞ்சிறகு போன்ற ஜோத்ஸ்னாவை ஆழம் தெரியாமல் என்னுடன் சேர்த்துப் பள்ளத்தில் இறக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது என்று நினைத்ததாலேயே ஊமையாய் இருந்தேன், ஜோத்ஸ்னா"

"அப்படி என்ன உலக மகா கடமை இருந்து விட முடியும், சுமித்ரன்? உங்களுக்கு"

"நீங்கள் என் வீட்டிற்கு ஒருமுறை வர முடியுமா ஜோத்ஸ்னா? வந்து ஒரு மணி நேரம் எனக்காக செலவு பண்ண முடியுமா?"

"ஏன் இவ்வளவு தயங்கித் தயங்கிக் கேட்கிறீர்கள், சுமித்ரன்? என்றைக்கு அழைத்துப் போகிறீர்கள்? இன்றைக்கே கூட நான் ரெடி"

## அசைந்த ஆகம் வெளியுறாலே... 6

தோட்டருகிலேயே மல்லிகைப் பூ சிதறிக் கிடந்தது. நந்தியாவட்டை வாசமிருந்தது. தென்னங்கீற்றுக்களில் தென்றல் இருந்தது.

மக்கள் வாழும் பிரதேசமாக, மந்தைவெளி உருவெடுத்த போதே கட்டப்பட்ட பழைய வீடு. வாசல் வராந்தாவில் நெருக்கமான கம்பிவலை. தோட்டத்திலிருந்து ஒன்றிரண்டு கொடிகள் அந்த வலைக்கம்பிகளில் ஆதாரம் தேடி ஏறியிருந்தன. அங்கங்கே பெயர்த்துவிட்ட சிமெண்ட் கம்பளத்தில் நடந்து, காலிங்பெல்லை அழுத்தினான். சுமித்ரன்.

உள்ளே சக்கரங்கள் உருளும் ஓசை. ஜோத்ஸ்னா அரைக்கதவின் திறப்பு வழியே பார்த்தாள். உள்ளறையிலிருந்து ஒரு சக்கரநாற்காலி கதவுக்கு உருண்டு வந்தது. அதில் வீற்றிருந்தவருக்கு சுமார் அறுபது வயதிருக்கலாம். தலையின் பெரும் பகுதி வழுக்கையாகியிருந்தது. அதன் காரணமாகவே நெற்றி அதிக அகலமாய்த் தெரிந்தது. அந்த நெற்றியில் படுத்திருந்த இணை

கோடுகள் அவர் புருவங்களை உயர்த்தியதும் இன்னும் அதிக அழுத்தத்துடன் தெரிந்தன.

அவர் புருவங்களை உயர்த்தியதற்குக் காரணம் சுமித்ரனின் அருகில் நின்ற ஜோத்ஸ்னாவின் மீது பார்வை போனதால்.

"அப்பா. இது ஜோத்ஸ்னா... என் ஆபீஸ் கலீக்"

"ஹலோ.." என்றார் நட்பில்லாமல், "கம் இன்" என்றார், வரவேற்பில்லாமல்.

சுமித்ரனின் முகத்தில் இருந்த உற்சாகம் அவர் முகத்தில் இல்லை. அது சுமித்ரனுக்கு ஒரு ஆச்சரியமாய் இருந்ததை அவன் முகம் மாறிய மாற்றம் சொன்னது.

"உள்ளே வாருங்கள் ஜோத்ஸ்னா"

சக்கர நாற்காலி ஹாலின் மையத்தில் மின்விசிறிக் காற்றுக்குக் கீழே போய் நின்று திரும்பியது.

"அப்பா ஆர்மியில் இருந்தார். கர்னல் பத்மநாபன். இருபது வருஷத்திற்கு முன்னால் நடந்த போரில் கண்ணி வெடிகளை மிதித்து தூக்கி எறியப்பட்டு கால் இரண்டும் அவுட். ஆனால் அவருக்கு யாருடைய உதவியும் தேவைப்படுவதில்லை. தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும் தைரியம் அவருக்கு இருக்கிறது" அப்பாவைப் பற்றிப் பேசுகையில் சுமித்ரனின் முகத்தில் பெருமிதம் ஊற்றெடுத்தது.

ஆனால் கர்னல் பத்மநாபன் முகத்தில் அதைப் பிரதிபலிக்கும் உணர்ச்சிகள் இல்லை. சற்று தயக்கமாக ஜோத்ஸ்னாவின் வரவால் அவருடைய இயல்பு கலைக்கப்பட்டவர் போலத் தெரிந்தார்.

"உட்காருங்கள், ஜோத்ஸ்னா"

ஜோத்ஸ்னாவிற்கு அந்த சூழ்நிலை இறுக்கமாக இருந்தது.

"சுமித்ரனுடன் வேலை செய்பவளா நீ? உட்கார்"

அவருடைய குரல் ஆழமானதாய்



அடர்த்தியாய் இருந்தது.

ஜோத்ஸ்னா கூடை நாற்காலியில் பொருந்தாமல் அமர்ந்தாள்.

"என்ன ஜோத்ஸ்னா சாப்பிடுகிறீர்கள்? காபி, டீ, போர்ன்விடா?"

"இப்போதுதானே ஹோட்டலில் காபி சாப்பிட்டோம், சுமித்ரன்"

"இதுதான் முதல் தடவை எங்கள் வீட்டிற்கு, நீங்கள் வருவது, ஏதாவது சாப்பிட வேண்டும் நீங்கள்..."

"ஒன் மினிட்..." என்று சுமித்ரன் கிச்சனை நோக்கி நகர்ந்தான்.

"சுமித்ரன்..." கர்னல் பத்மநாபன் கூப்பிட்டார். "தீபா வந்திருக்கிறாள்" என்றார். அவர் அதை உற்சாகமாக சொல்லவில்லை. ஒரு சேதியை அறிவிப்பது போன்ற உலர்ந்த குரலில்தான் சொன்னார்.

"தீபாவா?" சுமித்ரன் குரலில் வியப்பு இருந்தது. சற்றே பரபரப்பிருந்தது. கிச்சனுக்குள் அவன் நுழைந்தான். உள்ளேயிருந்து மெல்லிய பாத்திர ஒலி கேட்டது. ஒரு பெண்ணின் சன்னமான குரல் கேட்டது. அந்த பெண்ணும், சுமித்ரனும் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்பது தெளிவாக புலப்படவில்லை. இரண்டு காபி தம்ளர்களுடன் சுமித்ரன் அந்த அறையிலிருந்து வெளிப்பட்டான். அவனுடைய உற்சாகம் எல்லாம் வடிந்து போய் தொய்ந்த நடையுடன் வருவதைப் பார்த்து சற்றே அதிர்ந்தாள் ஜோத்ஸ்னா.

வலிய ஒரு புன்னகையை உதடுகளுக்குக் கூப்பிட்டுக் கொண்டு ஜோத்ஸ்னாவிடம் காபி டம்ளரை அவன் நீட்டினான். "என் சிஸ்டர் தீபா வந்திருக்கிறாள். நாகரீகம் கருதி தீபாவை வெளியே கூப்பிட்டு அறிமுகம் செய்து வைக்க முனைந்த போது, ஜோத்ஸ்னாவிற்கு சற்றே கூச்சமாயிருந்தது. காரணம் தீபாவின் கன்னங்கள் அழுகையின்

காரணமாக உப்பியிருந்தன. கண்களும், இமைகளும் ஊறியிருந்தன.

"ஹலோ" என்று அவள் சொன்னபோது குரல் நடுங்கியது.

ஒரு ஹலோவை உதிர்த்துவிட்டு அதே வேகத்தில் தீபா உள்ளே போய் மறைந்து விட்டாள். ஜோத்ஸ்னா இயல்பாக சுமித்ர னையும், அவன் அப்பாவையும் கவனித் தாள். இருவர் முகங்களிலும் வலியின் வேதனை இருந்தது.

காபியை மௌனமாகக் குடித்தாள். சர்க்கரை கூடுதலாயிருந்தது. சூடு குறைவா யிருந்தது. எழுந்தாள். கை கூப்பினாள்.

"நான் கிளம்பட்டுமா, சுமித்ரன்?"

"ஆட்டோ ஸ்டாண்ட் வரை கூடப் போய் வா..." என்றார் கர்னல் பத்மநாபன்.

சுமித்ரன் ஏன் அதற்குள் கிளம்பி விட்டீர் கள் என்று கேட்கவில்லை. அவளை இன் னும் சற்று நேரம் இருக்கலாமே என்று வற்புறுத்தவில்லை. செருப்புகளை மாட்டிக் கொண்டு அவளுடன் வெளியே வந்தான்.

ஜோத்ஸ்னா சற்றே தயங்கி விட்டு அந்தக் கேள்வியை அவிழ்த்தாள்.

"தீபா ஒரே சிஸ்டர் தானே?"

ஆமாம் என்பது போல் தலையசைத்தான்.

"என் வீட்டிற்கு வந்து எங்கள் குடும் பத்தைப் பற்றி முதலில் தெரிந்து கொள் ளுங்கள் என்று நான் சொன்னதற்குக் காரணமே. என் வீடு ஒரு சாதாரணக் குடும்பம் இல்லை என்பதால்தான்" நடந்து கொண்டே அவன் பேசினான். மினுக்கிக் கொண்டிருந்த தெருவிளக்கடியில் அவன் முகத்தில் மின்னல்களாய் வெளிச்சம்.

எப்படியும் வீட்டில் கொண்டு போய் அவனே டிராப் செய்வான் என்று அவள் எதிர்பார்த்திருந்தாள். ஆனால் இப்போதிருக் கும் நிலைமையில் அவனிடம் அந்த உதவி எதிர்பார்ப்பது நியாயமில்லை என்று



அவளுக்குத் தோன்றியது. தெரு முனையில் ஆட்டோ ஸ்டாண்ட் இருந்தது. டிரைவர்கள் இறங்கி தம்மடித்துக் கொண்டிருந்தனர்.

"தீபா கல்யாணமாகிப் போய், ஒரு வரு டம் தான் ஆகியது, ஜோத்ஸ்னா. ஆனால் அவளுக்கு புகுந்த வீட்டில் பிரச்சினைகள். அவள் புருஷன் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறான் என்று தெரிய வந்து நான் ஒரு முறை நேரிலேயே போய்க் கேட்டிருக்கிறேன். தீபாவை சமாதானம் செய்து மறுபடியும் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தேன். ஆனால் புருஷன் திருந்துகிற டைப் இல்லை. முணுக் முணுக் என்று அவனோடு கோபித்துக் கொண்டு அவள் பிறந்த வீட்டிற்கு ஓடி வருவது இப்போது சகஜமாகிவிட்டது. ஒவ்வொரு தடவையும் அவளை அழைத்துக் கொண்டு போய், சமாதானப்படுத்தி, அவள் புருஷனிடம் ப்ராமிஸ்களை வாங்கிக் கொண்டு வருவது எனக்கு வாடிக்கையாகி விட்டது. இன்றைக்கும் மறுபடி வந்திருக் கிறாள்... வழக்கத்தை விட இன்றைக்கு அழுகை அதிகமாயிருக்கிறது... போனால் தான் விஷயம் தெரியும்..."

அவன் குரலில் வருத்தத்தை விட அவளுடைய வருகையின் போது வீட்டில் இந்த சூழ்நிலை அமைந்துவிட்டதே என்று குற்ற உணர்ச்சிதான் அதிகமாயிருந்தது.

"எனக்கு எப்போதுமே அதிர்ஷ்டம் கொஞ்சம் குறைச்சல் ஜோத்ஸ்னா... சந்தோஷமாய் இருந்துவிட முடியாது... சோகம் வந்து சூழ்ந்து கொள்ளும்"

"ஒரேடியாக அலுத்துக் கொள்ளாதீர்கள் சுமித்ரன்.. எல்லோருடைய குடும்பத்திலும் சோகமான நாட்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன"

அவர்கள் ஆட்டோ ஸ்டாண்டை சமீபித்து விட்டார்கள்.

ஜோத்ஸ்னா திடீர் என்று நினைத்துக் கொண்டாற்போல சுமித்ரனின் கையை அழுத்திக்கொடுத்து "எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. சுமித்ரன்" என்றாள்.

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 7

"டாட், ஆர் யூ ஃப்ரீ"

ஜோத்ஸ்னா அவருக்கு எதிரே நாற்காலியில் வந்து அமர்ந்து, கைகளைக் கிண்ணமாக்கி தன் முகவாயைத் தாங்கிக் கொண்டு. அவரை படபடக்கும் விழிகளால் பார்த்தபோது, கோபிகிருஷ்ணா புன்னகையைக் காண்பித்தார். பார்த்துக் கொண்டிருந்த ஃபைலை மூடி நகர்த்தினார்.

"சொல், கண்ணா... ஜோத்ஸ்னா டார்லிங் வந்து கேட்கும் போது நான் பிஸியாக இருக்க முடியுமா என்ன? ப்ரீதான்..."

நைட் கவுனில் அப்பா இன்னும் கம்பீரமாய்த் தெரிவது போலிருந்தது ஜோத்ஸ்னாவிற்கு. மேஜை விளக்கின் வெளிச்சம் சுவரில் மோதி அவர் பின்னணியில் வட்டமாக ஒளிச்சக்கரம் பதித்திருந்தது.

"டாட் என்னுடைய ஜட்ஜ்மெண்ட் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"உன் கேள்வியே எனக்குப் புரியவில்லை"

"ஒரு ஆளை நான் எடை போடுவதில் புத்திசாலியா, முட்டாளா என்று கேட்டேன்"

"எந்த ஆளை எடை போட்டிருக்கிறாய்?"

"சரியான போக்கிரி டாட்... நீங்கள்... நான் ஒரு படி ஏறுவதற்குள் நீங்கள் மூன்று படி ஜம்ப் செய்து விடுகிறீர்கள்"

"அந்த பையன் பெயர் என்ன?"

"ஒய், பையனைப் பற்றிப் பேசுவேன் என்று நீங்களாகத் தீர்மானம் செய்து கொண்டால்? நான் பேச நினைத்தது ஒரு பெண்ணைப் பற்றி"



"அந்தப் பெண்ணின் பெயரை நான் சொல்லட்டுமா?"

"டாட்!"

"அவள் பெயர் சுமித்ரன் தானே? பார்க்க நன்றாயிருப்பான், ஜென்டில்மேன், ஆபீஸ் வேலையில் சமர்த்து, கண்ணியமாக நடந்து கொள்பவன், டீஸன்ட்டான குடும்பத்திலிருந்து வருபவன்... மற்றவர்கள் எண்ணங்களை மதிக்கத் தெரிந்தவன், எல்லோருக்கும் நல்லவன்"

"எப்படி டாட் இவ்வளவு விஷயங்களையும் கண்டு பிடித்தீர்கள்?"

"கண்டு பிடிக்கவில்லை, யூகித்தேன்"

"யூகித்தால் கூட எப்படி கரெக்டாக யூகித்தீர்கள்?"

"ஸிம்ப்பிள். என் மகள் ஒருத்தனைப் பற்றி நல்ல அபிப்ராயம் வைத்திருக்க வேண்டுமானால், அவனுக்கு மினிமம் இந்த க்வாலிபிகேஷன்களாவது இருக்க வேண்டும் என்று கண்டு பிடிப்பது கஷ்டமான காரியமா, என்ன? சொல், நம் பேச்சு எங்கேயோ திசை மாறிக் கொண்டிருக்கிறது. சுமித்ரனைப் பற்றி என்னிடம் என்ன சொல்ல ஆரம்பித்தாய்"

"இவ்வளவு தூரம் கெஸ் பண்ண முடிந்த உங்களுக்கு அதையும் யூகிக்க முடியாதா என்ன?"

"அவன் அப்பா அம்மாவைப் பார்த்து விட்டுத்தான் வருகிறாயா? என்ன சொன்னார்கள்? பொருத்தமான ஜோடி என்று சொல்லி விட்டார்களா?"

"டா...டி..." ஜோத்ஸ்னா கையை நீட்டி அவருடைய மூக்கைப் பிடித்து திருகினாள். "பயங்கரமான ஆளப்பா நீங்கள்" என்று கண்களை உருட்டிக் காட்டினாள்.

"சுமித்ரனுக்கு அம்மா இல்லை. அப்பா, ரிடையர்ட் ஆர்மி பென்ஷனர். ஒரு சகோதரி... கல்யாணமாகிவிட்டது... பட், நம்

குடும்பத்தைப் போல வசதியான குடும்பம் இல்லை... மிடில் கிளாஸ் பேமிலி"

"உனக்குப் பிடித்திருக்கிறது?"

"சுமித்ரனைப் பிடித்திருக்கிறது. டாட்... குடும்பத்தைப் பற்றி நான் இன்னும் முழுசாகப் புரிந்து கொள்ளவில்லை...

"நான் போய்ப் பேச வேண்டுமா?"

"உங்களுக்குப் பிடித்திருக்கிறதா... டாட்"

"உனக்கு பிடித்த பிறகு வேறெதையும் பற்றி நான் யோசிக்க வேண்டாம், டியர்"

"சுமித்ரனை வீட்டிற்கு அழைத்து வரட்டுமா?"

"நாளைக்கே கூட்டி வா" என்றார்.

"தேங்க்யூ டாட்" எழுந்து அவர் கன்னத்தில் அவள் முத்தமிட்டாள். அப்படியே "ஐ விஷ் யூ ஆல் தி பெஸ்ட் கண்ணம்மா, நீ எது ஆசைப்பட்டாலும் அது உனக்குக் கிடைக்க வேண்டும்"

ஜோத்ஸ்னாவிற்கு சிறகுகள் முளைத்தன. காற்றில் அப்படியே எழும்பினாள், மேகங்களில் உலாவினாள். நிலாவில் கொஞ்ச நேரம் ஒருக்களித்திருந்தாள். நட்சத்திரங்களைத் தொட்டு உலுக்கினாள். கடல் அலைகளின் நுரைகளை சுவாசித்தாள். மல்லிகை, ரோஜா, மகிழம்பூ எல்லா மகரந்தத் தூள்களிலும் சயனித்திருந்தாள். பட்டாம்பூச்சி சிறகுகளில் பயணம் செய்தாள்.

"சொல்லிவிட்டாயா ஜோத்ஸ்னா?"

கிருபாசங்கர் ஆர்வத்துடன் கேட்டான்.

ஜோத்ஸ்னா அவனுக்கெதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள். தன் ஹேண்ட் பேக் திறந்து ஒரு பட்டை சாக்லேட் எடுத்து நீட்டினாள். முகத்தில் புன்னகையே நூறு சேதி சொன்னது.

"வெரி குட்... எனக்கு சந்தோஷமாயிருக்கிறது. ஜோத்ஸ்னா..." கிருபாசங்கரின்



குரலில் உண்மையான மகிழ்ச்சி தொனித்தது சாக்லேட் உறையைப் பிரித்து ஒரு சதுரத்தை உடைத்து தன் வாயில் போட்டான். ஒன்றை அவளிடம் நீட்டினான்.

போன் அடித்தது.

கிருபாசங்கர் ரிசீவரை எடுத்தான். சாக்லேட்டை மென்று கொண்டே "யெஸ்?" என்றான். "அப்படியா? சரி... நோ ப்ராப்ளம்..." ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

"ஆபீஸ் வந்ததும் சுமித்ரனைக் கூப்பிட்டு கட்டித் தழுவிக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தேன். பட் நோ லக்" உதடுகளைப் பிதுக்கிக் காட்டினான்.

"ஏன் கிருபா?"

"இன்று லீவாம்... சுமித்ரனின் அப்பா போன் செய்தார்"

"லீவா? ஏன், கிருபா?"

"ஏதோ ஹாஸ்பிடலிலிருந்து பேசினார் என்று நினைக்கிறேன்... பின்னால் ஸ்ட்ரெச்சரைத் தள்ளு. இன்ஜெக்ஷன் போடு என்றெல்லாம் குரல் கேட்டுக் கொண்டிருந்தது"

"ஆஸ்பத்திரியா?" ஜோத்ஸ்னாவின் குரலில் திடுக்கிடல்.

"யாருக்கு ப்ராப்ளம் என்று ஏதாவது சொன்னாரா?"

"இன்றைக்கு சுமித்ரன் ஆபீஸ் வர முடியாது. லீவு சொல்லச் சொன்னான் என்று சுருக்கமாகப் பேசிவிட்டு கட் பண்ணி விட்டார்." கிருபாசங்கர் அதற்கு மேல் விளக்கம் சொல்ல இயலாதவனாக அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

ஜோத்ஸ்னா சற்றே குழப்பத்துடன் எழுந்து தன் இருக்கைக்கு நடந்தாள்.

அவளிடமிருந்த உற்சாகமெல்லாம் பறிக்கப்பட்டு விட்டது.

சுமித்ரன் அன்றைக்கு வராததால் அவனுடைய வேலையையும் சேர்த்து அவளை

கவனிக்க வேண்டியிருந்ததால் அலுவலக வேலை மும்முரமாக இருந்தது. மாலை வரை அவளால் சற்று நேரம் ஓய்வாக உட்கார்ந்து தெளிவாக சிந்திக்கக் கூட முடியவில்லை.

மாலை அலுவலகத்திலிருந்து அவள் வெளிப்பட்ட போது, கிருபாசங்கர் எதிர்ப்பட்டான்.

"இந்த ஆபீசில் சேர்ந்ததிலிருந்து இன்றைக்குதான் முதல் தடவையாக உன்னை களைப்பாகப் பார்க்கிறேன், ஜோத்ஸ்னா..." என்றான்.

"ஈஸிட் ?"

"லன்ச் கூட சாப்பிடவில்லை போலிருக்கிறது?"

"சாப்பிட்டேன் கிருபா"

"நேரே வீட்டிற்குத் தானே?"

"இல்லை... சுமித்ரன் வீட்டிற்கு போய் எட்டிப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று பார்க்கிறேன்.."

"நானும் கூட வரவேண்டுமென்றால் வருகிறேன்"

"உங்களுக்கு எக்கச்சக்க வேலை பாக்கி இருக்கிறது என்று தெரியும் கிருபா... டோண்ட் பாதர்... நான் போய்க் கொள்கிறேன்"

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 8

**கா**ல்கள் பின்னின. கையைப் பிடித்து ஏதோ சக்தி பின்னுக்கு இழுத்தது. கண்ணெதிரே தெரிந்த வீடு இன்னும் ஒரு கிலோ மீட்டர் தள்ளி இருக்கக் கூடாதா என்று தோன்றியது. வீட்டை நெருங்குகிற வரை யோசனை செய்து கொண்டேயிருக்கலாம். இப்போது யோசனைகளை அறுத்து விட்டு காலிங் பெல்லை அழுத்துகிற அவசரம் வந்துவிட்டது.

அப்படி என்ன யோசனை?

ஜோத்ஸ்னா அந்தக் குடும்பத்திற்கு



நேற்றுதான் அறிமுகம் ஆகிவிட்டிருக்கிறாள். அறிமுகம் ஆனது கூட அர்த்தமில்லாத சூழ்நிலையில் உற்சாகமாய் அவளைப் புரிந்து கொண்ட எவரும் இல்லை. அடிக்கடி இந்த வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிரு என்ற வரவேற்புச் சொற்கள் இல்லை. இறுக்கமான சூழ்நிலையில் நட்பில்லாமல் நாகரீகம் கருதி உட்காரச் சொன்ன அப்பா, நாகரீகம் கருதியும் அழுகையை மறைக்க முடியாத தங்கை. இப்போது மறுபடியும் அந்த வீட்டுக் கதவைத் தட்டினால் அவர்களுடைய ரியாக்ஷன் என்னவாக இருக்கும்?

ஜோத்ஸ்னா கால்கள் பின்னின. கண்ணெதிரே தெரிந்த வீடு இன்னும் ஒரு கிலோ மீட்டர் தள்ளி இருக்கக் கூடாதா என்று தோன்றியது.

தெருவில் கடந்து போன இரண்டு பேர் அவளையே விநோதமாக பார்த்துக் கொண்டு போயினர். ஒரு வீட்டு வாசலில் நின்று கொண்டு கதவைத் தட்டாமல், திருட வந்தவளைப் போல முழித்துக் கொண்டு ஏன் நிற்கிறாள்?

ஜோத்ஸ்னா அதற்கு மேலும் தாமதிக்க இயலாதவளாக, மனதை இறுக்கடித்து, அழைப்பு மணியில் கை வைத்தாள். அழுத்தினாள்.

கதவு திறப்பது சுமித்ரனாக இருக்க வேண்டுமே என்ற வேண்டுதல் வீணானது, சக்கரங்கள் உருளும் ஓசை, கதவை திறந்தவர் - சுமித்ரனின் அப்பா தான். அவளைப் பார்த்ததும் கண்களில் பரிச்சய நிழல் அவளை ஆச்சரியப்படுத்துகிற மாதிரி உதடுகளில் ஒரு புன்னகை.

"வா... வா... வா..." என்றார். நாற்காலியைப் பின்னுக்கு நகர்த்தி கதவைத் திறந்து அவளுக்கு வழி செய்து கொடுத்தார். "சுமித்ரன் தான் வந்து விட்டான் என்று

நினைத்துவிட்டேன்"

அப்படியானால் சுமித்ரன் வீட்டில் இல்லையா? ஜோத்ஸ்னாவின் கால்கள் கூசின. அவற்றை இழுத்து நகர்த்தி வீட்டிற்குள் பாதம் எடுத்து வைத்தாள்.

"சுமித்ரன் மருந்துக் கடை வரைக்கும் போயிருக்கிறான். உட்கார்" என்று நாற்காலியைக் காட்டினார்.

முந்தின நாள் அவரிடம் இருந்த மேக மூட்டம் இல்லை. முகத்தில் ஒரு தெளிவு இருந்தது. அதைவிட நட்பு இருந்தது.

நாற்காலியில் அதிராமல் உட்கார்ந்தாள்.

"யாருக்கு உடம்பு சரியில்லை?" என்று கேட்பதற்கு தொண்டையை இரண்டு முறை செருமிக் கொள்ள வேண்டியிருந்தது.

"தீபாவிற்கு ஜுரம். டாக்டர் இன்ஜெக்ஷன் எல்லாம் போட்டார். அசந்து தூங்கிக் கொண்டிருக்கிறாள்..." என்றார், அவர் கண்களைப் பார்க்காமல்.

கையில் இரண்டு ஆரஞ்சு கூட வாங்கி வராமல் போனதன் முட்டாள்தனத்தை ஜோத்ஸ்னா பழித்தாள்.

"சுமித்ரன் சொன்னான்" என்றார் திடுதிப்பென்று.

தயங்கும் கண்களை நிமிர்த்தினாள்.

"எனக்கும் பிடித்திருக்கிறது. உன்னுடைய பணம் ஒன்றுதான் யோசனையாய் இருந்தது. உன்னைப் பற்றி சுமித்ரன் மயக்கத்துடன் பேசியது, கேட்டேன். பயம் விலகிவிட்டது. நேற்று நீ வந்தபோது சூழ்நிலை சரியில்லை. நாங்கள் பாறை மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு உன்னுடன் பேசியது தவிர்க்க முடியாததாகி விட்டது"

"நான்தான் தப்பான நேரத்தில் வந்து விட்டேன்"

ஜோத்ஸ்னாவிற்கு உள்ளமெங்கும் பரபரப்பாயிருந்தது. அவருக்கும் பிடித்து



விட்டது. இனி தடையில்லை. இடர் இல்லை.

"என்னைப் பற்றி சொன்னானா?"

"சொல்லியிருக்கிறார்... இந்தியாவிற்காகப் போரில் ஈடுபட்டு கால்களை இழந்ததை பெருமையுடன் சொன்னார். தேசத்திற்காக தியாகம் செய்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?"

"நீ கொஞ்சம் ஓவர் ரீ பண்ணுகிறாய்" என்று சிரித்தார். மீசைக்கு வெளியே பளீர் என்று பற்கள் பிரகாசித்தன. "என்னை இம்ப்ரஸ் பண்ண வேண்டும் என்று புகழ் பாடுகிறாய், நான் செய்தது தியாகமில்லை. முட்டாள்தனம், மிதிக்கக் கூடாத இடத்தை மிதித்து கண்ணி வெடியில் காலை இழந்தது போற்றிப் பாட வேண்டிய விஷயம் இல்லை... நான் வளவளா டைப் என்று சொல்லி விட்டானா, இல்லையா? ஆள் அகப்பட்டால் போரடித்துத் தீர்த்து விடுவேன்"

"சுமித்ரன் உங்களைப் பற்றிப் பெருமையாகத்தான் பேசியிருக்கிறார்"

"அப்பா மீது அநாவசியத்திற்கு மரியாதை வைத்திருக்கிறான். எங்கள் குடும்பத்தோடு வந்து நீ இருக்க வேண்டுமென்றால் இந்தக் காலில்லாத கிழவனை சகித்துக் கொள்ள வேண்டியிருக்கும். என்னை தினமும் மார்னிங் வாக் அழைத்துப் போக வேண்டும். வாக் என்றால் இதில்தான்" என்று சக்கர நாற்காலியைத் தட்டிக் காட்டினார். தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவது என் வேலை. சுமித்ரனின் வண்டியைத் துடைப்பது என் பொழுதுபோக்கு. உன் புடவைகளை இஸ்திரி போட்டுத் தருவேன்... புதுபுது அயிட்டம் சமைக்கக் கற்றுத் தருவேன்... என் சமையல் சாப்பிட்டதில்லையே நீ? காரம் மூக்கு வரை ஏறும். மற்றபடி

டேஸ்ட்டில் என்னை அடித்துக் கொள்ள இந்த ஊரிலேயே ஆள் கிடையாது..."

படபடவென்று ஒன்றிலிருந்து மற்றொன்று என்று கோர்த்துக் கோர்த்து பேசிக் கொண்டே போனார்.

ஜோத்ஸ்னாவிற்கு சட்டென்று அவரைப் பிடித்துப் போய்விட்டது. உங்களுக்கு சளைக்காதவள் நான் என்று எழுந்து அவருடைய அடர்ந்த மீசையை பிடித்துக் கொள்ள வேண்டும் போலொரு துடிப்பு கூட எழுந்தது.

"கிச்சன் எங்கே என்று சொல்லுங்கள், நான் காபி போட்டு எடுத்து வருகிறேன்..." என்றாள் உற்சாகமாக.

வாசலில் பைக் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. சுமித்ரனுக்கு ஒரு இனிய அதிர்ச்சி கொடுக்கும் சித்தத்தோடு, புன்னகை முகத்துடன் வாசலுக்குப் போய் "வெல்கம் சார்" என்றாள்.

சுமித்ரன் அதிர்ந்து நிமிர்ந்தான். கண்கள் விரிய அவளைப் பார்த்தான்.

"எப்போது வந்தீர்கள், ஜோத்ஸ்னா?"

"கேள்வியை மாற்றிக் கேட்டால் ஒழிய நான் பதில் சொல்லப் போவதில்லை"

"எப்படி?"

"எப்போது வந்தாய் ஜோத்ஸ்னா?"

"திடீரென்று மாற்றுவது என்பது..."

"திடீர் திடீர் மாற்றங்கள் தான் சுமித்ரன் நம் வாழ்க்கையில் சுவை. நேற்று ஒரு திடீர் மாற்றம். இன்றைக்கு ஒரு திடீர் மாற்றம்...." என்று அவன் கையிலிருந்து உரிமையுடன் கறிகாய்க் கூடையை வாங்கிக் கொண்டாள்.

சுமித்ரனுக்குப் புரிந்து விட்டது. அவனுடைய அப்பா இயல்பாகப் பேசிக் கொண்டிருப்பதில் சற்று அதிகப்படியாகவே மகிழ்ச்சி தொற்றிக் கொண்டு விட்டது அவளுக்கு.

சுமித்ரன் வீட்டிற்குள் வந்ததும், கர்னல்



பத்மநாபன் கட்டை விரலை உயர்த்திக் காட்டினார். அவனுக்காக அவர் சற்று கூடுதலான உற்சாகம் பறைசாற்றுவது போலப் பட்டது.

"காபி, டீ, போர்ன்விடா?" என்று கிச்சன் அருகே நின்று ஜோத்ஸ்னா கேட்டாள்.

"உங்களுக்கு எதற்கு ஜோத்ஸ்னா"

"உனக்கு எதற்கு ஜோத்ஸ்னா" என்று கர்னல் திருத்தினார்.

"காபி, டீ ஆர் போர்ன்விடா?" ஜோத்ஸ்னா உற்சாகமான குரல் மறுபடியும் ஒலித்தது.

"காபி" என்றான், நாற்காலியில் அமர்ந்து. "அப்பாவிற்கு ஸ்ட்ராங்காய் இருக்க வேண்டும்" என்றான். பாக்கெட்டிலிருந்து பட்டை மாத்திரையை எடுத்து அப்பாவிடம் நீட்டினான்.

"தீபா தூங்குவதைப் பார்த்தால் இன்னும் இரண்டு மணி நேரத்திற்கு எழுந்திருக்க மாட்டாள். நீ ஜோத்ஸ்னாவைக் கொண்டு போய் அவள் வீட்டில் விட்டுவிட்டு வா" என்றார், கர்னல் பத்மநாபன், அந்த மாத்திரைகளை கைகளில் புரட்டிக் கொண்டே.

"ஐம் ஸோ ஹேப்பி..." என்றாள் ஜோத்ஸ்னா. சொல்லிவிட்டு அவன் இடுப்பை நறுக்கென்று கிள்ளினாள். வண்டியை ஓட்டிக் கொண்டிருந்த சுமித்ரன் சற்றே நெளிந்தான். நேற்று வரை அவள் கடைப்பிடித்த கண்ணியமான இடைவெளி சட்டென்று நொறுங்கிப் போய் நெருக்கம் சுவாரசமாய் உருவெடுத்து விட்டது அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"நேரே வீட்டிற்குத்தான் போக வேண்டுமா, ஜோத்ஸ்னா? இல்லை கொஞ்சம் பேசிக் கொண்டிருக்க உனக்கு நேரம் இருக்கிறதா?"

"எங்கள் வீட்டில் தோட்டத்தில் உட்

கார்த்து பேசவோமா, சுமித்ரன்?"

"ஓய் நாட்?" என்றான், உலர்ந்த குரலில்.

தோட்டம். மெர்க்குரி நீலம். பிரம்பு நாற்காலிகள். வறுத்த முந்திரி. கண்ணாடி டம்ளரில் தெள்ளிய நீர். பூச்சிகளின் பின்னணி சீங்காரம்.

"இன்றைக்கு பார்த்து அப்பாவிற்கு ஏதோ கான்ஃபரன்ஸ். ஆபீசிலிருந்து திரும்ப லேட்டாகும் என்று போன் செய்தாராம். இருந்திருந்தால் உங்களைப் பார்த்து த்ரில்லாயிருப்பார்..."

"அப்பாவிடம் சொல்லி விட்டாயா?"

"ம்ம்ம்... தாலியை எடுத்துக் கொண்டு என்னைத் தோளில் தூக்கிக் கொண்டு உங்கள் வீட்டிற்குக் கிளம்பாததுதான் குறை"

"ஜோத்ஸ்னா... நேற்றைக்கும் இன்றைக்கும் கொஞ்சம் என் நிலைமை மாறியிருக்கிறது." என்றான், சுமித்ரன் புதிரான குரலில். அவன் முகத்தைக் கடந்து போன குழப்பம் அவளை நிமிர்த்தியது.

"எனி பிராப்ளம்?"

"தீபாவை நேற்று பார்த்தாயே... அவள் இனிமேல் இங்கேதான் இருக்கப் போகிறாள்... நிலைமை முற்றி புகுந்த வீட்டில் அடிதடி வரை போய் புருஷனைப் போடா என்று சொல்லிவிட்டு வந்து விட்டாள். ராத்திரி அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரை போட்டுக் கொண்டு விட்டாள்.

"ஐயையோ..."

"காலையில் அவள் தலையணை அடியிலிருந்து காலி மாத்திரை பாட்டிலைப் பார்த்ததும் அரண்டு விட்டோம். அள்ளிப் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினோம். டாக்டர்கள் காப்பாற்றி விட்டார்கள்... தூக்கம்தான் தெளியவில்லை...."

அவன் கண்களில் கண்ணீர் புரண்டது.



"என்ன முட்டாள்தனம்!"

"காலையில் அவள் கண் விழித்த போது கையிலடித்து சத்தியம் வாங்கிக் கொண்டிருக்கிறேன். இன்னொரு தடவை தற்கொலை எண்ணமே அவளுக்கு வரக் கூடாது என்று... அவள் பூ மாதிரி, ஜோத்ஸ்னா சின்ன வயதிலிருந்தே நானும் அவளும் சேர்ந்து வளர்ந்திருக்கிறோம். எனக்கு அவள் கம்பெனி. அவளுக்கு நான் கம்பெனி. வீ லவ் ஈச் அதர். அவளுக்கு இந்த மாப்பிள்ளையை பார்த்து கல்யாணம் பண்ணி வைத்ததே நான்தான். நான் பார்த்த ஆள் சொத்தையாகி விட்டான். அவள் வாழ்க்கையை நான்தான் நாசமாக்கி விட்டேன்"

"நோ, சுமித்ரன்" அவன் கைகளை அவள் பற்றி அழுத்தினாள். "தங்கையின் மீது இத்தனை அன்பை வைத்துக் கொண்டு அவள் வாழ்க்கை நாசமாக வேண்டும் என்று திட்டமிட்டா இந்த மாப்பிள்ளையை செலக்ட் பண்ணினீர்கள்? கல்யாணம் என்பதெல்லாம் அவரவர்களுக்கு அமைகிற அதிர்ஷ்டம்..."

"அவள் மறுபடி சந்தோஷமாயிருப்பதைப் பார்க்கும் வரை எனக்கு நிம்மதியில்லை. ஜோத்ஸ்னா. வலுக்கட்டாயமாக அவளை மறுபடியும் புருஷன் வீட்டிற்கு அனுப்ப எனக்கு இஷ்டமில்லை... அவள் இஷ்டப்பட்டபடியே டைவர்ஸ் வாங்கிக் கொடுத்து விட்டு புதுசாய் இன்னொரு வாழ்க்கை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

"செய்வோம், சுமித்ரன்... தீபாவை சந்தோஷமாக்கிப் பார்ப்போம்"

"ஜோத்ஸ்னா, உன்னிடம் இன்னொரு ஹெல்ப் கேட்கலாமா, நான்?"

"ஃபார்மாலிட்டிகளை எல்லாம் தாண்டி வந்து விட்டோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன், சுமித்ரன்..."

"ஸாரி... இது கொஞ்சம் தர்மசங்கடமான விஷயம்..." அவன் தயங்கிவிட்டுத் தொடர்ந்தான். "வீட்டில் வேறு பெண்கள் இல்லாததால் உன்னிடம் உரிமையுடன் கேட்கிறேன்... தீபா வயிற்றில் இப்போது அறுபது நாள் கரு இருக்கிறது. இந்தக் குழந்தை வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்கிறாள். தூக்க மாத்திரை சாப்பிட்டதில் அதற்கு ஏதாவது ஆகியிருக்குமோ என்று டாக்டரே கவலைப்படுகிறார்... அவளுக்கு அபார்ஷன் செய்ய வேண்டும். துணைக்கு உன்னால் போக முடியுமா, ஜோத்ஸ்னா?"

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 9

அதிகாலையிலேயே ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டாள். அவளுடைய குடும்ப டாக்டர். அறுபது நாள் கருவா என்று கலைக்கத் தயங்கியவள், ஜோத்ஸ்னாவின் வற்புறுத்தலுக்காக ஒப்புக் கொண்டாள்.

முதலில் அந்நியக் கூச்சம் இருந்த போதிலும், தீபா வெகு சீக்கிரத்தில் ஒட்டிக் கொண்டாள். "அக்கா என்னால் உங்களுக்கு எவ்வளவு தொந்தரவு?" என்று உறவு கொண்டாடினாள். வயிறு கழுவப்பட்டு இப்போது கட்டிலில் மயக்கம் தெளியாமல் கிடக்கிறாள்.

ம்க் என்று முனகல் கேட்டது திரும்பினாள். போர்வைக்கடியிலிருந்து தீபா கண் திறந்தாள். புன்னகையில் களைப்பிருந்தது.

"எப்படி இருக்கிறது தீபா?"

"டயர்டாக..."

"இன்னும் கொஞ்ச நாட்களுக்கு நீ ரெஸ்ட்டில் இருக்க வேண்டும். ரொம்ப அலட்டிக்கொள்ள கூடாது... நாளைக்கு காலை டிஸ்சார்ஜ் பண்ணி விடுவார்கள். ஆனால் வீட்டிற்குப் போன பிறகும் நீ ரெஸ்ட் எடுக்க வேண்டும், தீபா..."

"எக்ஸ்க்யூஸ் மீ..." என்று கதவருகே நிழலாடியது.



திரும்பினாள். கையில் ஒரு பாலிதீன் கவரில் ஆரஞ்சு பழங்களுடன் நின்றிருந்த இளைஞன் புன்னகைத்தான்.

கட்டிலில் தலை புரட்டி தீபா அவனைப் பார்த்தாள். "வாங்க ஜகதீஷ்" என்றாள் குரலில் வலுவில்லை. ஆனால் உற்சாகம் முயற்சிக்கப்பட்டது.

அவன் உள்ளே வந்தான். பழங்களை மேஜை மீது வைத்தான். அடிக்கண்ணால் ஜோத்ஸ்னாவை கவனித்தான். சுவாதீனமாக தீபாவின் கையைப் பற்றி அழுத்திக் கொடுத்தான். "எல்லாம் ஓவரா, தீபா?"

யார் இவன்?

"ஜகதீஷ்... இது.... ஜோத்ஸ்னா, என் அண்ணனின் வுட் பீ ஒய்...ப்..."

அவன் கைகளைக் கூப்பினான்.

"தீபா போனில் சொன்னாள். உங்களைப் பிடித்தால் காரியம் சுலபமாக நடக்கும் என்று. அதற்காகத்தான் இந்தக் கும்பிடு" என்று குறும்பாகச் சிரித்தான்.

"என்ன காரியம்?"

"ஜகதீஸ்... ஜோத்ஸ்னா பாவம்... காலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை என்று நினைக்கிறேன்... கேண்டீனிற்கு அழைத்துப் போய் ஏதாவது வாங்கித் தாருங்களேன்..."

"உன்னைத் தனியாக விட்டுவிட்டா?"

"எதிரிலேயே நர்ஸ் ரூம் இருக்கிறது. வேண்டுமென்றால் கூப்பிட பெல் இருக்கிறது"

"வாருங்கள் ஜோத்ஸ்னா" என்றான் அவன் இயல்பாக.

ஜோத்ஸ்னாவிற்கு தயக்கமாயிருந்தது. எந்த நிமிடமும் சுமித்ரன் வரக்கூடும் என்று அவள் எதிர்பார்த்தாள். அவன் வரும்வரை காத்திருக்கத் தயாராயிருந்தாள்.

"அக்கா, ப்ளீஸ்..." தீபா கண்களால் கெஞ்சினாள். சாப்பிடப் போ என்று சொன்னதை விட, ஜகதீஷ் சொல்லப் போகிற சேதியை தயவு செய்து

கேட்டுவிட்டு வாயேன் என்ற கோரிக்கை தான் கூடுதலாக தொனித்தது.

ஆஸ்பத்திரி கேன்ட்டீனில் நாற்காலிகள் கிடையாது. அயிட்டங்களை வைத்து சாப்பிடவதற்கு இடுப்புயரத்திற்கு சுவர்களில் பதித்த மேடைகள்தான்.

காய்ந்து போயிருந்த போண்டாவும், நீர்த்துப் போயிருந்த சட்னியும் கூட அப்போது ருசித்தது.

ஜோத்ஸ்னா பிட்டு வாயில் போட்டுக் கொண்டாள்.

"சொல்லுங்கள் மிஸ்டர் ஜகதீஷ்..." என்றாள்.

"நான் ஒரு மெடிக்கல் ரெப்... குடும்ப சொத்து விஷயமாக ஒரு கேஷ் போட்டிருக்கிறோம். அது பற்றிப் பேச லாயர் வீட்டிற்குப் போயிருந்தபோது, தீபாவை சந்தித்தேன். டைவர்ஸ் அப்ளை பண்ண அவள் வந்திருந்தாள்..."

"என்னது, டைவர்ஸ் அப்ளை பண்ணியாகி விட்டதா? இனிமேல்தான் பண்ண வேண்டும் என்று நினைத்திருந்தேனே"

"இரண்டு மாதத்திற்கு முன்பே தீபா முடிவு செய்து விட்டாள். லாயரைப் பார்த்துப் பேசி விட்டாள். அவள் புருஷனுக்கும் இந்த விவாகரத்து கொடுப்பது பற்றி எந்த தயக்கமும் கிடையாது.... தீபா ரொம்ப மென்மையானவள். அவளைக் கையாளத் தெரியாமல் அவன் கொடுமைப் படுத்தியிருப்பது பற்றி கேட்டதும் நான் மிகவும் கலங்கிவிட்டேன்... லாயர் எனக்கு சற்று பர்ஸனலாக பழக்கம் என்பதால் அவள் கேஸிற்காக நான் அக்கறை எடுத்துக் கொண்டதால் எங்களுக்குள் பழக்கம் ஆரம்பமானது. இத்தனை நேரம் நீங்கள் யூகித்திருப்பீர்கள்... யெஸ்... நான் அவளை லவ் செய்கிறேன்... அவளுக்கு டைவர்ஸ் கிடைத்ததும் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன். அவள் அனுபவிக்காத



அத்தனை சந்தோஷங்களையும் அவளுக்குத் தர விரும்புகிறேன்... அவளுக்கு அண்ணனிடம் இப்போது எடுத்துச் சொல்லக் கொஞ்சம் கூச்சமாக இருக்கிறதாம்... அதுதான் உங்களிடம்..."

ஜோத்ஸ்னாவிற்கு சிலிர்ப்பாயிருந்தது. தீபாவிற்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைக்க வேண்டும் என்று சுமித்ரன் கவலைப்பட்டது நினைவுக்கு வந்தது. சுமித்ரன் ஆசைப்பட்டது நிறைவேற இதோ தானாக வாய்ப்பு தேடி வருகிறது.

"உங்கள் குடும்பம் எங்கேயிருக்கிறது, ஜகதீஷ்"

"ஆந்திராவில் ஒரு மாமா இருக்கிறார். அவ்வளவுதான் என் குடும்பம். அப்பா கிடையாது, அம்மா கிடையாது, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை யாரும் கிடையாது. ஏற்கனவே கல்யாணமான ஒரு பெண்ணை மனைவியாக்கிக் கொள்வதை யாராவது ஆட்சேபிப்பார்களா என்பது தானே உங்கள் யோசனை? அப்படி யாரும் கிடையாது. நான் முடிவு செய்தால் அதுதான் எங்கள் முடிவு...

"வெரிகுட்..." என்றாள், ஜோத்ஸ்னா. பசி கூட கரைந்துவிட்டது. உடனே இதை சுமித்ரனிடம் சொல்ல வேண்டும் போன்றதொரு துடிப்பு எழுந்தது.

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 10

அவர்கள் கூடியிருந்தார்கள்.

கானல் பத்மனாபன், தீபா, ஜகதீஷ், ஜோத்ஸ்னா.

சுமித்ரனுக்காகக் காத்திருந்தார்கள்.

ஜகதீஷின் விருப்பத்தை சுமித்ரனிடம் அவள் சொன்னபோது, அவன் உடனே அதை ஆமோதித்தான்.

தீபா இஷ்டப்பட்டது அவளுக்குக் கிடைக்க வேண்டும். ஜோத்ஸ்னா அவள் முகத்தில் எப்போதும் சந்தோஷமும், சிரிப்பும் நான் பார்க்க வேண்டும். அப்புறம்

தான் என் மனசு சமாதானமாகும். அதற்கப்
புறம்தான் நம் கல்யாணம்... காத்திருப்பாயா,
ஜோத்ஸ்னா?

தீபாவிற்கு டைவர்ஸ் கிடைத்து, அவள்
ஜகதீஷை மணக்கும் வரையிலுமா?

ஆமாம் ஜோத்ஸ்னா. குடும்பம் அறுந்து
போய் அவள் வீட்டில் தனிமையில் இருக்
கும் போது நாம் சந்தோஷமாய் இருந்தால்
அது அநாகரீகம் இல்லையா?

புரிகிறது, சுமித்ரன். ஒரு வருஷம்,
இரண்டு வருஷம் ஆனால் கூட என்ன?
உங்களுக்காகக் காத்திருப்பது கசக்கப்
போவதில்லை எனக்கு.

சுமித்ரன் பூரித்துப் போனான். இந்த
சந்தோஷத்தைக் கொஞ்சமாவது கொண்
டாட வேண்டும் என்றான். ஒரு சின்ன
பார்ட்டி வைத்துக் கொண்டால் என்ன
என்றான்.

இதோ கூடியிருக்கிறார்கள்.

தீபாவிற்கு ஒரு இனிய அதிர்ச்சியாக,
தங்க மோதிரம் ஒன்று பரிசளிக்கப் பிரியப்
படுவதாக சுமித்ரன் சொன்னான்.
ஜோத்ஸ்னா அதை இந்த சந்தர்ப்பத்
திலேயே கொடுத்தால் நிறைவாய் இருக்கும்
என்று தூண்டி விட்டாள்.

பரிசு வாங்கிக் கொண்டு ஆபீஸிலிருந்து
நேரே ஹோட்டலுக்கு வருவதாகச் சொன்ன
வன் இன்னும் காணோம்.

ஜோத்ஸ்னா வாட்சை கவனித்தாள்.

ஏழை நெருங்கிக் கொண்டிருந்தது.

சுமித்ரனை தனியே அனுப்பாமல் அவ
ளும் போய் மோதிரத்தைத் தேர்வு செய்ய
வேண்டுமென்றுதான் அவளுக்கும் ஆசை.
ஆனால் ஜகதீஷை வரச்சொல்லிவிட்டு,
தாமதம் செய்வது சரியாய் இருக்காது என்று
அவளை முதலில் அனுப்பிருந்தான்
சுமித்ரன்.

"ஸ்வீட் ஏதாவது ஆர்டர் பண்ணலாமா?
நாம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் நேரத்
திற்குள், சுமித்ரன் வந்து விடுவார்...



என்றாள், சூழ்நிலையை இயல்பாக்கும்
எண்ணத்துடன்.

"ஓய் நாட்?" என்றார், கர்னல் பத்மனா
பன். அவர் முகத்திலும் மகிழ்ச்சி பூத்திருந்
தது.

பாசந்தி கண்ணாடிக் கோப்பைகளில்
வந்தது.

"சியர்ஸ்" என்று ஆர்ப்பரித்து விட்டு,
முதல் ஸ்பூன் இனிப்பை எடுத்து வாயில்
வைத்த போது ஜோத்ஸ்னா கவனித்தாள்.
ஹோட்டல் பகுதிக்குள் கிருபாசங்கர்
நுழைந்திருந்தான். கண்களால் ஒவ்வொரு
மேஜையாக அவன் தேடுவது தெரிந்தது.

ஜோத்ஸ்னா திடுக்கிட்டாள். திடுக்கிட
லுக்குக் காரணம் - கிருபாசங்கரின் தோற்றம்.

தலை கலைந்திருந்தது. முகம் முழுதும்
அழுகை, சட்டை இரண்டு இடங்களில்
பேண்ட்டிற்கு வெளியே தொங்கியது.
உடையில் தீற்றலாக ரத்தம்!

என்ன ஆயிற்று?

ஸ்பூனை அப்படியே கிண்ணத்தில்
போட்டுவிட்டு பரபரப்பாக எழுந்தாள். அந்த
அசைவை வைத்து கிருபாசங்கர் அவளை
கவனித்து விட்டு, அவளை விரைந்து
நெருங்கினான். கண்களால் கர்னல் பத்ம
னாபனுக்கு ஒரு அரை வணக்கம் சொல்லி
விட்டு "ஸாரி... டு டிஸ்டர்ப் யூ" என்று
மற்றவர்களிடம் கோரிவிட்டு, "ஒன் மினிட்"
என்று ஜோத்ஸ்னாவைத் தனியே கூப்பிட்
டான்.

திக் திடுக் திக் திக் என்று நெஞ்சம்
அடித்துக் கொண்டது. ஜோத்ஸ்னாவின்
கால்கள் நடுங்கின. எழுந்து அவனுடன்
நகர்ந்தாள். கண்கள் கேள்வி கொக்கிகளை
அணிந்திருந்தன.

"ஜோத்ஸ்னா... ஒரு அதிர்ச்சியான சேதி
சொல்ல வேண்டிய நிர்பந்தத்தில் இருக்
கிறேன்... சுமித்ரன் ஒரு விபத்தில் மாட்டிக்
கொண்டு விட்டான். அவன் பைக் நொறுங்
கிவிட்டது. பலத்த காயம். ரோடெல்லாம்

ரத்தம்... அவன் பாக்கெட்டில் கம்பெனி அட்ரஸ் கண்டு பிடித்து போலீஸ் போன் செய்தது. பறந்தடித்துக் கொண்டு போனேன்..."

"சுமித்ரன் எங்கே கிருபா?" என்று கேட்கும் போது அழுகை திமிறியது. ஜோத்ஸ்னா எதையாவது ஆதரவிற்குப் பிடித்துக் கொள்ள மிக விரும்பினாள்.

"ஆஸ்பத்திரிக்குப் போவோம் ஜோத்ஸ்னா..." என்று சொல்லும் போது வார்த்தைகள் நடுங்கி, கிருபாசங்கருக்கு தொண்டை அடைத்துக்கொண்டது.

பளிங்குக் கற்களால் இழைக்கப்பட்ட பணக்கார ஆஸ்பத்திரி. துல்லிய உடைகளுடன் நர்ஸ்கள், டாக்டர்கள், ஆயாக்கள், மின்சாரம் விழுங்கும் லிப்ட்கள்.

மௌனமான கண்ணாடி அறைக்குள் சுமித்ரன் உடம்பெங்கும் மூடப்பட்டு தெரிந்தான். உயிரை நிறுத்திப் பிடிக்க எத்தனை டியூப்புகள்! மானிட்டர் திரையில் துடிப்புகள்.

கிருபாசங்கர் டாக்டர் ரூமிலிருந்து வெளிப்பட்டு, ஜோத்ஸ்னாவை நெருங்கினான். முகம் வெளிறியிருந்தது.

"என்ன சொல்கிறார்கள், கிருபா?"

"ஐ'ம் ஸாரி, ஜோத்ஸ்னா"

"என்ன சொல்கிறார்கள், கிருபா?"

"சுமித்ரன்... சுமித்ரன்..."

"என்ன சொல்கிறார்கள், கிருபா?"

"இரண்டு மணி நேரங்களுக்கு மேல் தாங்காதாம், ஜோத்ஸ்னா.." கிருபாசங்கரின் அழுகை உதடுகளைக் கோணலாக்கியது.

கைகளால் தரையில் படபட என்று அடித்துக் கொண்டு கர்னல் பத்மநாபன் கதறினார்!

தீபா நாற்காலியைப் பற்றிக் கொண்டு அதில் சரிந்தாள்.

கண்ணாடி சுவர் வழியே சுமித்ரனை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள், ஜோத்ஸ்னா.

இரண்டு மணி நேரங்கள் என்று சொல்லப்



பட்டது தவறு.

நாற்பது நிமிடங்களிலேயே மானிட்டர் திரை மினுக்கிவிட்டு ஓய்ந்தது. குழாயில் ரத்தம் சொட்டவில்லை. ஆக்ஸிஜன் தடுமாறியது. எல்லாம் அடங்கிவிட்டது.

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 11

ஜோத்ஸ்னாவின் சந்தோஷம் பறிபோய் விட்டது!

வேலைக்கு சேரும் நாள் வரை கனவுக் கதாநாயகனாக இருந்தான். வேலையில் சேர்ந்த பின் ஒவ்வொரு நாற்காலியிலும் இடறினான், தினம் தோறும் சந்தித்து, தினம் தோறும், சுகம் துக்கம் பரிமாறி... எல்லாம் சிதைக்கப்பட்டுவிட்டது.

டேபிள் டென்னிஸ் மேஜைக்குப் பின்னே தெரிந்தான். லவ் ஆல் என்று மட்டையை உயர்த்துகிறான். காலையில் குட் மார்னிங் சொல்கிறான். லிப்டில் இடம் விட்டு நிற்கிறான். லஞ்ச் ரூமில் தண்ணீர் தம்ளர்களைத் தயாராய் வைத்து அவள் டிபன் டித்திறக்கக் காத்திருக்கிறான்.

ஆனால் ஒரு வார்த்தை பேசினால் யமாகி விடுகிறான். தொட்டுப் பார்க்க கை ட்டினால் காற்றாய் கரைந்து விடுகிறான். ஞ்சலாட்டத்தின் ஒற்றை வீச்சு போல வள் வாழ்க்கைக்குள் நுழைந்து, நுழைந்த வகத்திலேயே பின் வாங்கிவிட்டான்.

ஏன் சுமித்ரன்? ஏன் எனக்கு இந்த ாகம்? எதற்காக எனக்கு இந்த இழப்பு? னால் இத்தனை பெரிய தண்டனை?

"கண்ணா..." அவள் தோளில் கை ழுந்தது. அப்பாவின் வெப்பமான, தரவான கை, "உருகி உருகி மெலிந்து ட்டாய், ராஜாத்தி எனக்குப் பார்க்க க்கவில்லை"

அவளுடைய சோகம் கண்ணாடி போல வர் முகத்திலும் பிரதிபலித்தது. அவளை ரச் சொல்லிவிட்டு கட்டிலில் அமர்ந்து

தலையை கோதினார். அவர் மார்பில் விழுந்து மூக்கு தேய்த்து அவள் விசும்பியதை ஏற்றுக் கொண்டார். பேச்சால் அவள் துக்கத்தைக் கீறாமல் மௌனமாகத் தட்டிக் கொடுத்தார். அணைத்துக் கொண்டார். சாதம் பிசைந்து அவள் மறுத்த போது வற்புறுத்தி ஊட்டிவிட்டார். அவள் கன்னத்து ஈரத்தை தன் மென்மையான விரல்களால் துடைத்து விட்டார்.

"அப்புறம் சுமித்ரன் வீட்டிற்குப் போனாயா, ராஜாத்தி?"

நிமிர்ந்தாள், அலையும் கண்களை அவர் மீது நிறுத்தினாள்.

"அவனோடு அந்த குடும்பமும் போய் விட்டதா என்ன? அவர்களை அப்படி சட்டென்று மறந்து போகலாமா? துணைக்கு நானும் வரட்டுமா உன்னுடன்?"

அந்தக் கேள்வி அவளுள் அடங்கிக் கிடந்த உயிரை உசுப்பியது.

அழுகை இன்னும் எத்தனை நாளைக்கு? எலும்பு கரையும் வரை கண்ணீரை இறைத்துக் கொண்டிருப்பதையா சுமித்ரனின் மரணம் அவளிடம் எதிர்பார்த்தது?

இல்லை, இனி அழுகை இல்லை. நெஞ்சில் ஈரம் இருக்கலாமே தவிர, கண்ணில் இனி ஈரம் கூடாது. தெளிவு அவள் உள்ளத்தில் பிரகாசமாய் பிரவகித்தது.

புறங்கையால் இமைகளைத் துடைத்துக் கொண்டாள்.

"தேங்க்ஸ் டாட்" என்றாள்.

"வாழ்க்கை இன்னும் இருக்கிறது டியர்" என்று அவள் நெற்றியில் அவருடைய உதடுகள் முத்தமிட்டன.

சுமித்ரன் இல்லாத சுமித்ரன் வீடு. படியேறும் போதே கசப்பாகத்தான் இருந்தது- விழுங்கினாள்.

"வாம்மா" சக்கரநாற்காலி வரவேற்றது.

"எப்படிப்பா இருக்கிறீர்கள்?" என்றாள். சுவாதீனமாக நாற்காலியின் கைப்பிடி பற்றி



அவரை உள் ஹாலுக்கு நகர்த்திக் கொண்டு போனாள்.

"அப்பா" அவர் முகத்தில் கொண்டு வந்த உணர்ச்சிக் கலவையை அவள் கவனித்தாள்.

"நீ எப்படிம்மா இருக்கிறாய்?"

"சுமித்ரன் போட்டோ இன்னும் பிரேம் போடவில்லையா?"

"வேண்டாம்மா... அவன் ஆபீஸ் போயிருக்கும் நாட்களில் இந்த சுவர்களுக்குள் தானே வாழ்ந்து கொண்டிருந்தேன்? மாலையில் அவன் வருவான். இரவில் கதை பேசுவோம், செஸ் விளையாடுவோம் ன்றெல்லாம் எதிர்பார்த்துத்தான் என் பகல் பொழுதுகள் செலவாகிக் கொண்டிருந்தன. போட்டோ மாட்டி, பூ போட்டு சந்தனப் பொட்டு வைத்து அவன் இனி வரமாட்டான் ன்று நிமிஷத்திற்கு நிமிஷம் என்னை ானே சாட்டையால் அடித்துக் கொள்ள வேண்டுமா, சொல்?"

"சுமித்ரன் லாங் டூர் போயிருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள் அப்பா. தினமும் ாயந்திரம் நான் வருகிறேன். உங்களுக்கு ாபி போட்டுத் தருகிறேன். உங்களுடன் செஸ் விளையாடுகிறேன். சேர்ந்து பாட்டு கட்போம். டி.வி. பார்ப்போம்... நீங்கள் னியாக இல்லை உங்கள் மகள் ஜோத்ஸ்னா இருக்கிறாள்"

மகள் என்றதும் தீபா எங்கே என்று ண்கள் தேடின.

"அவன் வந்திருந்தான்மா... அவனோடு டைத்தெரு வரைக்கும் போயிருக்கிறாள்..."

"ஜகதீஷுடனா?"

"ம்" என்றார். "செத்துப் போகிறவனோடு ல்லாரும் போய்விட முடிவதில்லையே... மித்ரனுக்காக நான் சாப்பிடாமல் இருக்க டியுமா, தூங்காமல் சமாளிக்க முடியுமா? வளா வேளைக்குப் பசிக்கத்தானே ய்கிறது. கண்களைச் சுழற்றிக் கொண்டு ொட்டாவி வரத்தானே செய்கிறது?

இரண்டு காலும் இல்லையே என்று இத்தனை நாள் நான் நினைத்ததே இல்லை... இப்போதுதான் அதை நினைத்து கஷ்டப்படுகிறேன்... தீபாவிற்காக அலைந்து திரிய சுமித்ரன் இல்லையே?"

"நான் இருக்கிறேன் அப்பா... தீபாவை சந்தோஷமாக மறுபடி பார்க்க வேண்டும் என்று சுமித்ரன் என்னிடமும் ஆசைப் பட்டிருக்கிறார். சுமித்ரனிடம் உரிமையோடு என்னென்ன கேட்பீர்களோ எல்லாம் என்னிடமும் கேட்கலாம் அப்பா..."

கை உயர்த்தி அவள் தோள் பற்றி அழுத்திக் கொடுத்தார். கண்கள் நெகிழ்ந் திருந்தன.

"நீ சின்ன மொட்டும்மா... உன்னை வீணாக்கிக் கொள்ள கூடாது. உன் சந்தோ ஷத்தைக் கலைக்க காரணமாயிருந்ததாக சுமித்ரனின் ஆத்மா கவலைப்பட்டு விடக்கூடாது... உன் வாழ்க்கையை உனக் கேற்றபடி அமைத்துக் கொள்ள வேண்டும், ஜோத்ஸ்னா... நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்"

"தீபா - ஜகதீஷ் கல்யாணம் தான் அப்பா என் முதல் வேலை" என்றாள். நாள்காலியைத் திருப்பி, அவர் கண்களைப் பார்த்து "காபி, டீ, ஆர் போர்ன்விடா?" என்றாள்.

"காபி, கொஞ்சம் ஸ்ட்ராங்காக இருக்க வேண்டும்" என்றார் உற்சாகமில்லாத புன்னகையுடன்.

சம்பளதினம்.

சம்பளம் வாங்கும் நாள் வந்தால் மட்டும் அடி வயிற்றைக் கலக்கிற்று. முதல் சம்பள தினத்தில் சுமித்ரனின் வண்டி பங்க்ச ஆகியது. அவனிடம் அவள் மெல்ல தன் மனதை மொட்டவிழ்த்ததும், அவனுடைய வீட்டிற்குப் போனதும் நினைவுச் சுமைகளா வந்து மோதியது. அவளைச் சுற் எல்லோரும் களிப்பான முகத்துடன் சம்பள கவர்களுடன், கேண்டீனில் அல்வாவிற்



அலைமோதும் போது அவளுக்கு மட்டும் ஒவ்வொரு மாதமும் அது கறுப்புத்தினமாக விடிந்து கொண்டிருந்தது.

ஜோத்ஸ்னா தன் ஹேண்ட் பேகை டிராயரிலிருந்து எடுத்துக் கொண்டாள்.

"ஜோத்ஸ்னா..."

கிருபாசங்கர் அவளுக்கு நேர் முன்னால் வந்து நின்றான்.

"ஒரு கேம் டேபிள் டென்னிஸ்?" என் றான் "இன்றைக்கு சம்பள தினம். எல்லோ ரும் அவசரமாக வீட்டுக்குப் போய் விடுவார்கள். ஸ்போர்ட்ஸ் ரூம் கூட்டமில்லா மல் இருக்கும். ஒரு கேம் போட்டால் என்ன? உனக்கு மாற்றம் வேண்டும்..."

"டேபிள் டென்னிஸ் வேண்டாம், கிருபா..."

"ஏன்?"

"சுமித்ரனின் ஞாபகம் வந்துவிடும்..."

"வந்தால் என்ன? மரணம் என்பது தவிர்க்க முடியாதது. ஜோ... இன்றைக்கு நான் சாகலாம். நாளைக்கு நீ சாகலாம்... டைம் டேபிள் போட்டுக் கொண்டு வருவதில்லை சாவு... சுமித்ரனை ஞாபகம் வைத்துக் கொண்டிருந்தால் உன்னால் சந்தோஷமாய் இருக்க முடியாது என்ற நினைப்பே, அவனை கேவலப்படுத்துவது போல் இருக்கிறது. அவனால் உனக்கு என்ன துக்கம் இருந்தது? அவனை நினைக்கும் போது உனக்கு சந்தோஷம்தானே வரவேண்டும்? துக்கம் ஏன் வருகிறது?"

"கடைசியாக பார்த்த சுமித்ரன்தானே மனசில் நிற்கிறது, கிருபா?"

"உனக்கு கிடைக்காமல் போய்விட்டான் என்ற கோபம் உன் கண்களை மூடி வைத் திருக்கிறது. கடைசி தினத்திற்கு முன்பு வரை இருந்த அவனுடைய முகத்தை மறக்கடித்திருக்கிறது"

"இல்லை, கிருபா, சுமித்ரனின் சந்தோஷ முகம் ஞாபகம் வரும் போதெல்லாம் அந்தக் கண்ணாடி ரூமிற்குள் ஏராளமான டியூப்பு

களுடன் அவர் கிடந்த அந்தக் காட்சியும் மேலே விழுந்து அழுத்துகிறது. மனசு என் கண்ட்ரோலிலா இருக்கிறது?"

"சுமித்ரனின் அப்பா கர்னல் பத்மநாபனை தினமும் போய்ப் பார்க்கிறாயே... அவர் சொன்னது மட்டும் உனக்கு உறைக்கவே இல்லையா? சுமித்ரனின் போட்டோவை வைத்து பூப்போட்டு துக்கத்தை தேடிக் கொள்ளப் போவதில்லை என்று அவர் சொன்னதை ஆச்சரியமாக சொன்னாயே... முப்பது வருஷம் கூட இருந்து வாழ்ந்த அவருடைய சோகத்தைவிட முப்பது நாள் பழகிய உன் சோகம் பெரிது? உன்னை சுமித்ரனை மறக்கச் சொல்லவில்லை, ஜோ... நீ அவன் குடும்பத்துடன் பழகிக் கொண்டிருப்பது அவன் இன்னமும் அங்கேயே இருப்பதாக நினைத்துதான். அவன் உனக்கு விட்டுப்போன கடமைகளையெல்லாம் செய்து முடிப்பதுதான் உன் வாழ்க்கைக்கு அர்த்தம் தரும் என்று நீ நினைப்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் நீ கல்யாணமே செய்து கொள்ளாமல் உன் வாழ்க்கையைத் தனிமைப் படுத்திக் கொள்வது நீ அவனுக்கு செலுத்தும் அஞ்சலி இல்லை. அவனுக்கு தரும் தண்டனை... ஒரு தற்கொலை செய்து கொள்வதன் மூலம் மற்றவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிற கேவலம்... சாகிற நேரத்தில் சுமித்ரன் உன்னிடம் இரண்டு வார்த்தை பேசியிருந்தால் இதைத்தான் சொல்லியிருப்பான்.

ஜோத்ஸ்னா கைப்பையை மேஜை மீது விசிறி விட்டு உட்கார்ந்தாள். விரல்கள் நடுங்கின.

"என்னை என்ன செய்யப் சொல்கிறீர்கள், கிருபா?"

"யோசி, ஜோ... நிதானமாக யோசி, சுமித்ரன் எதிரே இருப்பதாக நினைத்துக் கொண்டு அவனோடு பேசிப் பார்... உனக்குத் தெளிவு கிடைக்கும். என்ன



செய்ய வேண்டுமென்று உனக்கே புரிந்து போகும்..."

கிருபாசங்கர் மென்மையாக பின் வாங்கினான். அவனுடைய ரூமிற்குள் நுழைந்தான். ஸ்ப்ரிங் கதவு பட்டாம்பூச்சி சிறகு போல் சிறிது நேரம் அடித்துக் கொண்டிருந்துவிட்டு ஓய்ந்தது.

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 12

நிறைந்திருந்தன விழிகள். துடித்தது உதடு.

அழு, அழுதுவிடு. கண்ணீர் முற்றிலும் உன்னிடமிருந்து காய்ந்து போகும் வரை இன்றைக்கே அழுது முடித்துவிடு. நாளையிலிருந்து நீ புதிய ஜோத்ஸ்னா...

அவளுடைய வீட்டில் அவளுடைய அறையில் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். கிருபாசங்கர் சொன்ன ஒவ்வொரு சொல்லும் அவளுக்குள் நுழைந்து புதிய அர்த்தங்களைக் கற்றுத் தந்தது. அழுகையை நிறுத்திவிட்டு சுமித்ரனின் கடமைகளைச் செய்வதுதான் உத்தமம் என்று ஏற்கனவே அவள் முடிவு செய்திருந்த போதிலும், நெஞ்சிற்குள் அவ்வப்போது கண்ணீர் கசிந்து கொண்டிருந்தது. இனி அது அவசியமில்லை. கிருபா சொல்லியபடி அவளுடைய சுமித்ரனுடன் அவள் பேசிக் கொண்டிருந்தாள். அவனுடைய சிரித்த முகம் மறுபடி மறுபடி அவளிடம் ஒரே விஷயத்தைத்தான் வலியுறுத்திக் கொண்டிருந்தது!

நீ சந்தோஷமாயிருக்க வேண்டும் ஜோத்ஸ்னா!

அழைப்பு மணி கூப்பிட்டது. சமையல் மாமி ஊரில் இல்லை.

அப்பா அதற்குள் வந்து விட்டாரா என்ன?

எழுந்து படியிறங்கிப் போய் கதவைத் திறந்தாள்.

எதிரே நின்றது - ஜகதீஷ்.

"வாங்க..."

புடவைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு உலர்ந்த சிரிப்போடு அவனை உள்ளே கூப்பிட்டாள்.

"இந்த ஏரியாவில் ஒரு டாக்டரை விசிட் பண்ண வந்தேன். அப்படியே உங்களையும்.. அழுது கொண்டிருந்தீர்களா, என்ன?" என்று அவன் கவலையுடன் கேட்டான். செருப்புகளைக் கழற்றினான். இனிப்புப் பொட்டியை நீட்டினான்.

"உட்காருங்கள்"

சோபாவில் எதிரே உட்கார்ந்தான். "சுமித்ரன் ஞாபகமா?" என்றான்.

அவளும் சுமித்ரனும் மட்டும் பேசிக் கொண்டிருந்த அந்த சந்தர்ப்பத்தில் யாரும் குறுக்கிட்டிருக்கக் கூடாது. அழுகைக்குத் தயாராகியிருந்த மனசு சட்டென்று உடைத்துக் கொண்டது. உதடுகளைக் கடித்து அடக்க நினைத்த போதும், பிய்த்துக் கொண்டு வெளியே புரண்டது.

"ஜோத்ஸ்னா... ஜோத்ஸ்னா..."

அவன் பதறினான்.

சுமித்ரன் அவள் மனதில் புகுந்து கொண்டு நர்த்தனம் ஆடினான், அழுகையை தவிர்க்க முடியவில்லை.

அதிகப் பழக்கமில்லாத ஆண் மகனுக்கு எதிரில் அழுவதா என்று அவமானம் கிளர்ந்து அவள் உணர்ச்சிகளை மூடப் பார்த்தது.

"ஜோத்ஸ்னா"

அவனுடைய கை அவள் தோளை அணைத்தது.

"உங்களுக்கு நேர்ந்த கொடுமை யாருக்கும் நேரக்கூடாது. ஆனால் அதையே நினைத்துக் கொண்டிருந்தால் வாழ்க்கையில் அர்த்தமில்லை, ஜோதஸ்னா"

அவள் கூசினாள், அவளை ஆதரவாக அணைத்த அந்தக் கையின் நோக்கம் புரிபட்ட போது திடுக்கிட்டாள்.

ஜகதீஷ்-ன் விரல்கள் அவசியமில்லாமல்



தோளிலிருந்து சற்று நகர்ந்து அவள் முதுகையும், இடுப்பையும் தீண்டின. அவளை இறுக்கி அணைத்துக் கொள்வது தான் அவளுக்கு அவன் தரக்கூடிய ஆறுதல் என்பது போல அவனாகவே தீர்மானம் செய்துவிட்டது அதிர்ச்சியாய் இருந்தது. க்ஷண நேரத்திற்குள் அவளுடைய விலா எலும்புகளை வருடி, பக்கவாட்டில் அத்து மீறி புடவை மடிப்பில் ஊர்ந்து மார்பின் மென்மையை ஸ்பரிசிக்க அவன் விரல்கள் முற்பட்ட போது, அவள் உதறிக் கொண்டு எழுந்தாள்.

அழுகை நின்றுவிட்டது உணர்ச்சிகள் கோபமாக அவதாரம் மாறிவிட்டன.

"ஜகதீஷ்... இது நன்றாயில்லை..."

அவன் அதிரவில்லை "நீங்கள் என்னைத் தப்பாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள் ஜோத்ஸ்னா... இந்த ஏரியாவில்தானே உங்கள் வீடு இருக்கிறது என்று ஜஸ்ட் ஒரு கர்ட்டஸி விசிட்டிற்குத் தான் நான் வந்தேன். அழுது கொண்டிருந்தீர்கள். ஆறுதல் சொல்ல யாரும் இல்லை. சோகத்தைத் தனியே உட்கார்ந்து பாரம் ஏற்றிக் கொள்ளக் கூடாது பங்கு போட்டுக் கொள்ளும் போதுதான் துக்கம் கரையும்..."

"என் மேல் அக்கறை இருப்பதற்கு தேங்க்ஸ்"

"உங்கள் குரலில் கோபம் இருக்கிறது... ஒரு ஆண் மகன் தொட்டாலே உங்கள் உடம்பு கூசிப் போவது உங்களுடைய பலவீனத்தைத் தான் காட்டுகிறது. உங்கள் சகோதரன் தொட்டால் கூட இப்படித்தான் உதறிக் கொள்வீர்களா?"

"என் சகோதரன் ஒருபெண்ணை எங்கே தொடக்கூடாது என்று தெரிந்து கண்ணியமாய் நடந்து கொள்கிற ஆண்மகனாய்த்தான் இருப்பான்"

"நீங்கள் இவ்வளவு வீக்காக இருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை, ஜோத்ஸ்னா"

என்ன திமிர்! அவனுடைய காமத்தை அவள் பேரில் பழிபோடுகிற மேல் சாவனிஸ்ட்!

"எனக்காகக் கவலைப்பட்டுக் கொண்டு இனிமேல் என் வீடு தேடி வர வேண்டாம், ஜகதீஷ்.." என்று இனிப்புப் பெட்டியை எடுத்து அவன் மீது எறிந்தாள்.

கீழே விழுந்த இனிப்பை அவன் பொறுக்கி நிமிர்ந்தான். "இங்கே நடந்தது நமக்குள் இருக்கட்டும், ஜோத்ஸ்னா. உங்கள் கேவலமான எண்ணங்களை அநாவசியமாய் தீபாவின் மனசில் ஏற்றப் பார்க்காதீர்கள்"

செருப்புகளை மாட்டிக் கொண்டு அவன் கதவு திறந்து வெளியேறினான்.

ஜோத்ஸ்னாவின் உடம்பு முழுதும் நடுங்கிக்கொண்டிருந்தது. அப்படியே தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு சோபாவில் பொத்தென்று விழுந்தாள்.

"ஹல்லோ! என்ன இந்த காலை நேரத்தில்? ஆபீஸ் போகவில்லை?" என்றாள் தீபா கதவு திறந்தவுடன்.

காலையில் எழுந்து குளித்து பளிச்சென்று காட்டன் புடவை உடுத்தியிருந்தாள். அவள் குரல் கேட்டு சக்கரநாற்காலியும் உருண்டு வந்தது.

"வா ஜோத்ஸ்னா..." என்றார் கர்னல் பத்மநாபன், மலர்ந்த முகத்துடன்.. "நேற்று ஏன் வரவில்லை?"

"ஸாரி அப்பா... நேற்று வராததற்கு" என்றாள் ஜோத்ஸ்னா, உள்ளே நுழைந்து பழங்களை சுவாதீனமாக கிச்சனில் வைத்தாள். "இன்றைக்கு அரைநாள் லீவு..." என்றாள்.

"ஏன்?"

"கொஞ்சம் ஷாப்பிங் வேலை இருக்கிறது.. தனியாக போக போர் அடித்தது. தீபாவையும் கூட்டிக் கொண்டு போகலாமே என்று வந்தேன்"

"புடவையா?" என்றாள் தீபா. அவள் பார்வை ஜோத்ஸ்னாவை குடைந்தது.

கோல்டு ஸ்பாட் உறிஞ்சிக் கொண்டே "உன்னிடம் கொஞ்சம் மனசு விட்டு பேச வேண்டும், தீபா..." என்று ஜோத்ஸ்னா விழிகளை நிமிர்த்தியபோது, தீபாவின் கண்கள் சற்று காழ்ப்புடன் அவளைப் பார்த்தன.

"எதிர்பார்த்தேன், காலையில் நீங்கள் வந்ததுமே எதிர்பார்த்தேன், ஸாரி கேட்டு ஒன்றும் ஆகப்போவதில்லை" என்றாள்.

"ஸாரியா? நானா? எதற்கு தீபா?"

"நேற்று ஜகதீஷ் வந்திருந்தார். சொன்னார்.. ரொம்ப அதிர்ந்து போயிருக்கிறார். நீங்கள் அப்படி நடந்து கொள்வீர்கள் என்று அவர் நினைக்கவேயில்லை. அக்கா அக்கா என்று உருகுவாயே, அவள் மனசு எவ்வளவு கீழ்த்தரமாயிருக்கிறது தெரியுமா என்ற மாய்ந்து மாய்ந்து போனார்..."

"ஜகதீஷ் உன்னிடம் என்ன சொன்னான்?"

"மரியாதை இல்லாமல் பேச எனக்கும் நேரமாகாது, ஜோத்ஸ்னா?"

"ஜகதீஷ் என் சொன்னார்?" சொன்னார் என்ற வார்த்தையை அடிக்கோடிட்டு அழுத்தினாள், ஜோத்ஸ்னா. குரலை கோபம் தாக்கியது.

"வீட்டிற்கு வந்தவரிடத்தில் நீங்கள் நடந்து கொண்ட முறை பற்றி சொன்னார்... புடவை தோளிலிருந்து சரிந்தது கூடத் தெரியாமல் நீங்கள் பேசியதும், அதை அவர் நாசுக்காக சுட்டிக் காட்டியதும், தீபாவை விட நான் அழகாய் இல்லையா ஜகதீஷ் என்று கேட்டுக் கொண்டே அவர் பக்கத்தில் நீங்கள் வந்து உட்கார்ந்தது. அவர் கையை பிடித்து மடியில் வைத்துக் கொண்டது - எல்லாம் சொன்னார்"

"தீபா!" ஜோத்ஸ்னாவின் உதடுகள்

நடுங்கின. "தீபா, ஜகதீஷை நம்பாதே. அவன் ஒரு போக்கிரி..."

"இதுவும் எதிர்பார்த்ததுதான். சட்டென்று ஆண்களின் மீது பழியைத் தூக்கிப் போட்டுவிடும் பாசாங்குப் பெண்களில் நீங்களும் ஒருத்தர் என்பது அதிர்ச்சியாய் இருக்கிறது ஜோத்ஸ்னா"

"தீபா ஜகதீஷை நீ எவ்வளவு தூரம்.. உங்களுக்குள் எதுவும்..." பெண்ணிடமே பெண் கேட்பதற்கு தயக்கமாயிருந்தது.

"ஏன்? பயமுறுத்தப் பார்க்கிறீர்களா? ஜகதீஷ் ஏமாற்றிவிட்டு ஓடிவிடுவார் என்று என்னை மிரட்டப் பார்க்கிறீர்களா?"

"கலக்கமாய் இருக்கிற பெண்களிடத்தில் ஜகதீஷிற்கு பாசம் அதிகம். தீபா... அவர்களுடைய பலவீனம் அவனுடைய பலம்... நீ ஏமாந்து விடக் கூடாதே என்றுதான்..."

"எங்களுக்குள் செக்ஸ் இருந்ததா என்று கேட்கிறீர்கள். இருந்தது. ஏன் இருக்கக் கூடாது? என்றைக்கிருந்தாலும் அவருக்குக் கொடுக்கப் போகிற உடம்பு தானே இது? கல்யாணத்தில் எனக்கு கிடைத்த ஏமாற்றத்திலிருந்து என்னை மீட்டது ஜகதீஷ்தான்... ஏன் உங்களுக்கும் என் அண்ணனுக்கும் நடுவில் செக்ஸ் இருந்ததில்லையா?"

"தீபா - நீ படபடவென்று பேசுகிறாய்... உன்னை நான் கொச்சைப்படுத்த கேட்கவில்லை. ஜகதீஷ் பற்றி உனக்குப் புரியாமல் போய்விடப் போகிறதே என்று கேட்டேன்"

"உங்களையும் புரிந்துவிட்டது ஜோத்ஸ்னா... தயவு செய்து என் வாழ்க்கையில் குறுக்கிடாதீர்கள். என் சந்தோஷத்தைக் கெடுக்காதீர்கள்..."

தீபா வெகு சட்டென்று எழுந்தாள். கோல்டு ஸ்பாட் பாட்டிலைத் தரையில் கனமாக வைத்துவிட்டு, அந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸை விட்டு வேகமாக வெளியேறினாள்.

ஜோத்ஸ்னா அதிர்ச்சியிலிருந்து மீளாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்..



பொம்மை வாங்கித் தராததற்காக கோபித்துக் கொண்டு தரையில் கையையும், காலையும் உதைத்துக் கொள்ளும் குழந்தையைப் போல தீபா நடந்து கொண்டது மனதில் பாரமாக அழுத்தியது.

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 13

கதவு தொட்டதும் திறந்தது.

கிருபாசங்கர் நிமிர்ந்தான்.

"கம் இன், ஜோ..." என்றான். "இன்றைக்கு வேலை அதிகமா? ரொம்பக் களைப்பாகத் தெரிகிறாய் நீ... ஏதோ போருக்குப் போய்த் தோற்றுவிட்டு வந்தது போலிருக்கிறது முகம்"

"தோற்கக் கூடாது, கிருபா... அதற்காகத்தான் உங்களுடன் பேச வந்திருக்கிறேன்.." ஜோத்ஸ்னா அவனுக்கு எதிர் நாற்காலியில் உட்கார்ந்தாள். "கொஞ்சம் பர்சனல் மேட்டர், இங்கே பேச வேண்டாமென்றால், வெளியே போய்விடலாம்"

"நான் இப்போது ஃப்ரீதான்... சொல்"

"நீங்களும் என் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது"

"நானாகக் கேட்கக் கூடாது என்று கட்டுப்பாடோடு இருந்தேன். நீயாக கேட்பது வரை காத்திருப்பது என்று தீர்மானமாய் இருந்தேன். சுமித்ரன் போனதும் நல்லதாய்ப் போயிற்று என்று இவன் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்து விட்டான் என்று என்னை நீ தப்பாக நினைத்துவிடப் போகிறாயே என்று பயந்தேன்"

ஜோத்ஸ்னா கண்களைத் தாழ்த்திக் கொண்டாள் "கல்யாணம் என்று நான் சொன்னது என்னுடன் இல்லை, கிருபா"

"பின்னே?"

"தீபாவை உங்களுக்குத் தெரியும். சுமித்ரனின் தங்கை... அவள் வெகுளி, கிருபா. நடந்த கல்யாணம் முறிந்துவிட்டது. விவாகரத்திற்காகக் காத்திருக்கிறாள்...

உங்களைப் போல பரந்த மனசு இருக்கும் ஒருத்தரால்தான் அவனுக்கு சந்தோஷம் கிடைக்க முடியும்..."

"ஜோ!" கிருபாசங்கர் அதிர்ந்து அவளைப் பார்த்தான். "நான் சினிமா ஹீரோ இல்லை. சட்சட் என்று தியாகம் செய்து கைத்தட்டல் வாங்க, எனக்கு ஆசையில்லை..."

"கிருபா..."

"என் மனசில் ஜோத்ஸ்னாவைத் தவிர வேறு யாருக்கும் இடம் இல்லை. தீபாவிற்கு கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று சுமித்ரன் ஆசைப்பட்டான். அதை நீ உன் பொறுப்பாக நினைத்திருக்கிறாய். எனக்கு அதில் அப்ஜெக்ஷன் இல்லை. அவளுக்கு ஏற்கனவே ஜகதீஷ் என்பவனுடன்தான் கல்யாணம் என்று நீ சொன்னதாக ஞாபகம்..."

"ஜகதீஷ்..."

ஜோத்ஸ்னா அந்தப் பெயரை உச்சரித்த போதே உதடுகள் நடுங்கின. "ஜகதீஷைப் பற்றிச் சொல்கிறேன், கிருபா..."

அவள் சொல்லச் சொல்ல கிருபாசங்கரின் முகம் விதம் விதமாக நிறம் மாறியது.

"ஸ்கௌண்ட்ரல்" என்று பற்களைக் கடித்தான். "அவனை எலும்பு வேறு, உடம்பு வேறு என்று பிரித்துப் போட்டால் கூட தப்பில்லை, ஜோ"

"தீபாவை மறந்து விடும்படி அவனிடம் எடுத்துச் சொல்ல முடியுமா கிருபா? என் பங்கிற்கு நான் சுமித்ரனின் அப்பாவிடம் பேசிப் பார்க்கிறேன்..."

"உனக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன், ஜோ. ஜோத்ஸ்னாவை விட்டுக் கொடுப்பதைத் தவிர..."

"அவளுக்கு ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் செய்து வைத்த பிறகுதான் என்னால் கல்யாணம் பற்றி யோசிக்க முடியும், கிருபா... மிஸஸ் கிருபாசங்கர் ஆவதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று எனக்கும் தெரியும்... ஆனால் சுமித்ரனின் அப்பாவைத் தனியாக விட்டு



விட முடியாது. அவரையும் நம் வீட்டில் வைத்துக் கொள்வதில் உங்களுக்கு எதுவும் அப்ஜெக்ஷன் இருக்காதே..."

"டில்லியிருந்து என் அப்பாவோ, அம்மாவோ மெட்ராஸ் வருகிற உத்தேசமில்லை. சுமித்ரனின் அப்பா நம்முடன் தங்கினால் வீட்டில் ஒரு பெரிய மனிதர் இருப்பது என்றால் சந்தோஷம்தான் கொடுக்கும். ஜோ... ஜகதீஷின் அட்ரஸ் தெரியுமா, உனக்கு?"

"திருவல்லிக்கேணியில் ஒரு லாட்ஜில் இருக்கிறான்..." என்று தன் ஹேண்ட் பேக் திறந்து அட்ரஸ் குறித்துக் கொடுத்தாள்.

"ஜோ... உன்னை நான் தொடலாமா?"

"என்ன கிருபா இது?"

"இல்லை, உன்னிடம் இருக்கும் அபூர்வ சக்தி என் உடம்பிலும் ஓட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்... தொடலாமா?"

"ம்"

அவளது கையை மிருதுவாகத் தன் கையில் எடுத்தான். நீளமான விரல்களைப் பற்றி முகத்தருகே கொண்டு போனான். புறங்கையில் முத்தமிட்டான்.

"தேங்க்யூ ஜோ..." என்றான்.

ஜோத்ஸ்னாவிற்குள் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 14

திடுக் என்று விழிப்பு வந்தபோது தலைமாட்டில் டெலிபோன் இடைவிடாமல் கதறிக் கொண்டிருந்தது.

ஜோத்ஸ்னா கண்களைக் கசக்கிக் கொண்டு ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ..." என்றாள் கொட்டாவி கலந்து.

"குட்மார்னிங் ஜோத்ஸ்னா... உன்னை தூக்கத்திலிருந்து எழுப்பியதற்கு ஸாரி... நீ உடனே இங்கே கொஞ்சம் வர முடியுமா?"

"யார் பேசுவது?"

"ஸாரி, என் குரலை இதற்கு முன் டெலி

போனில் கேட்டதில்லை என்பதை மறந்து விட்டேன்... கர்னல் பத்மநாபன்..."

"என்ன அப்பா? எனி பிராப்ளம்"

"நேரில் வாம்மா, ப்ளீஸ்"

சுமித்ரன் வீட்டில் போன் கிடையாது. பக்கத்தில் ஏதோ பூத்தைத் தேடி வந்து அவர் போன் செய்திருக்கிறார்.

நேரம் பார்த்தாள். ஜன்னலுக்கு வெளியே தெருவிளக்கு இன்னும் அணைக்கப்படாத அதிகாலை ஐந்து மணி.

போர்வையை உதறிவிட்டு எழுந்தாள்.

பியட்காரை லாகவமாகத் திருப்பி வளைத்து நிறுத்தினாள், இறங்கினாள்.

கேட்டருகிலேயே பூக்கள் வாசத்தோடு வரவேற்றன. வீட்டிற்குள் விளக்குள் எரிந் தன. கதவு திறந்து வைத்து சக்கரநாற்காலி காத்திருந்தது. கர்னலின் முகம் வெளிறி யிருந்தது.

"என்ன ஆயிற்றப்பா?"

"ஜகதீஷை எனக்கும் சுத்தமாகப் பிடிக்க வில்லை, ஜோத்ஸ்னா. நீயும் வந்து அவனைப் பற்றிச் சொன்னதும் கலங்கிப் போய்விட்டேன். ஒரு மிருகத்திடமிருந்து காப்பாற்றி இன்னொரு மிருகத்திடம் என் மகளை மாட்டி விடுவதா என்று யோசனை யாய் இருந்தது. கூப்பிட்டேன். அவளிடம் பேசினேன். கோயில் மாடு போல எல்லாவற்றிற்கும் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாள். ஆனால் இன்றைக்கு காலையில் அவள் புத்தி புரிந்துவிட்டது..."

சட்டைப் பையிலிருந்து அந்தக் காகிதத்தை எடுத்து ஜோத்ஸ்னாவிடம் நீட்டினார். வலுவான அவருடைய விரல்களே நடுங்கின.

அன்புள்ள அப்பா என்று ஆரம்பித்திருந்தது கடிதம். அவசரக் கிறுக்கலில் கையெழுத்துப் புரிய சற்று நேரம் பிடித்தது.



அன்புள்ள அப்பா,

பெற்ற மகளைவிட நேற்று வந்தவள் உங்களுக்கு முக்கியமாகிவிட்டாள். அவள் சொன்னதை நம்பிக் கொண்டு என் வாழ்க்கையை வீணடிக்க நீங்கள் தயாராகிவிட்டீர்கள். பெரியவர்கள் பார்த்து செய்து வைத்த என் திருமணம் எப்படிப் போனது என்று உங்களுக்கும் தெரியும். இந்த முறை அதே தவறு செய்ய நான் தயாராயில்லை. பேசி, பழகி எனக்கு ஏற்றவர் என்று தீர்மானித்திருக்கிறேன். ஜகதீஷை திடுதிப்பென்று விட்டெறிய எனக்கு விருப்பமில்லை. அவர் நல்லவர், கண்ணியமானவர். பெண்கள் மனதை மதிக்கத் தெரிந்தவர். அவரை விட இன்னொரு நல்ல துணை எனக்குக் கிடைக்கப் போவதில்லை.

ஜோத்ஸ்னா அனுப்பிய ஆள் ஜகதீ ஷையும் பார்த்து மிரட்டியிருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலையில் இந்த ஊரில் இருந்து கொண்டு மறுப்பவர்களுக்கு எதிராகக் கொடி தூக்கி, மறிப்பவர்களுடன் போராடி என் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு தினம் தினம் கல்லடி பட எனக்கு இஷ்டமில்லை.

உங்கள் கண்களில் தென்படாத தொலை விற்கு நாங்கள் போகிறோம். எங்கள் வாழ்க்கையை நாங்களே தீர்மானித்து விட்டோம்.

அப்பா, நீங்கள் எனக்கு கல்யாணத்தின் போது போட்ட இருபது பவுன் நகையும், என் பேரில் சேமித்த முப்பதாயிரம் ரூபாயையும் மட்டும் நான் எடுத்துப் போகிறேன் - கடனாகத்தான் விரைவில் இவற்றைத் திருப்பிவிடுவேன். புதிய மகள் ஜோத்ஸ்னாவுடன் சந்தோஷ மாயிருங்கள். என்னை மன்னியுங்கள்.!

உங்கள் அன்பை மறவா, தீபா.

"என்னப்பா இது! இப்படியாகும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை... ஸாரி... என்னால் உங்கள் குடும்பத்தில் குழப்பம்!"

"நீ ஏன் பதறுகிறாய்? நல்லது செய்ய நினைத்தாய்... . தீபாவிற்கு அதிர்ஷ்டமில்லை..." கர்னல் பத்மநாபன் உதடுகளைப் பிதுக்கினார்.

"என் அப்பாவிற்கு போலீஸில் சிலரைத் தெரியும். தீபாவையும் ஜகதீஷையும் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்யட்டுமாப்பா?"

"வேண்டாம். இன்றைக்கு பிடித்து இழுத்து வந்தால்? நாளைக்கு மறுபடியும் அறுத்துக் கொண்டு ஓடுவாள். தடுக்கிறோம் என்று தெரிந்தால் வெட்டிவிட்டு ஓடுவாள். பட்டடும்.. அனுபவத்தில் புரிகிற சில உண்மைகளை அறிவுரை சொல்லி புரிய வைக்க முடியாது..."

"தீபாவிற்கு நல்ல சந்தோஷமான வாழ்க்கை அமைத்துத் தர வேண்டும் என்று சுமித்ரன் ரொம்ப ஆசைப்பட்டார். அதை நான் கெடுத்து விட்டேனாப்பா?"

"இல்லை, ஜோத்ஸ்னா. சுமித்ரன் உயிரோடு இருந்திருந்தால், அவனையும் மீறிக்கொண்டுதான் தீபா ஓடியிருப்பாள். உன்னை எதற்கு இவ்வளவு காலையில் கூப்பிட்டேன்?... தீபா ஓடினால் கவலைப் படாதே என்று சொல்வதற்காக மட்டுமில்லை..."

அவருடைய குரல் நடுங்கியது. தழுதழுத்தது.

"திடீர் என்று ஒவ்வொரு கிளையாக முறிந்து விழுந்து விட்டு வெறும் பட்டமரமாக நான் நிற்கிறேன், ஜோத்ஸ்னா. கடிதம் படித்ததும் எனக்கு நெஞ்சில் வலித்தது. வீட்டின் வெறுமை என்னை வதைத்தது. யார் தோளிலாவது சாய்ந்து கொஞ்ச நேரம் அழாவிட்டால் இருதயம் வெடித்துவிடும் போலிருந்தது... உன்னைத் தவிர வேறு யாரையும் கூப்பிடத் தோன்றவில்லை, ஜோத்ஸ்னா"



அவருடைய பழுத்த முகம் கசங்கியது. கண்களில் நீர் கோர்த்து இறங்கியது.

"அப்பா...!" அவரை நெருங்கினாள். இரண்டு தோள்களையும் அழுத்திக் கொடுத்தாள். அவள் கைகளைப் பற்றி அதில் முகம் புதைத்து அவர் குழந்தை போல் குலுங்கி அழுதபோது அவளுடைய கண்களும் கலங்கின.

அழுது முடியட்டும் என்று காத்திருந்தாள்.!

கிட்டத்தட்ட பத்து நிமிடம் தொடர்ந்து கண்ணீர் சொரிந்துவிட்டு அவர் முகம் நிமிர்ந்தது.

"சுமித்ரன் இப்போது இல்லை. அவன் கல்யாணத்தை நான் பார்க்க முடியவில்லை. தீபாவின் கல்யாணமும் என் கண் முன்னால் நடக்கப் போவதில்லை... காய்ந்து போயிருக்கும் என் வாழ்க்கையில் ஏதாவது சந்தோஷம் வேண்டாமா, ஜோத்ஸ்னா? உன் மூலம் எனக்கு அந்த சந்தோஷம் கிடைக்குமா?"

"என்ன வேண்டும், சொல்லுங்கப்பா?"

"என் கண் முன்னால் உன் கல்யாணம் நடக்க வேண்டும். என் கையால் அட்சதை தூவி ஆசீர்வதிக்க வேண்டும்..."

"அப்பா... ஆனால் தீபா..."

"ப்ளீஸ்... மாட்டேன் என்று சொல்லி விடாதே. முடியாது என்று மறுத்துவிடாதே. அப்புறம் என்று தள்ளிப்போட்டு விடாதே" என்று குரல் மண்டியிட்டுக் கெஞ்சியது.

"சரிப்பா" என்றாள், ஜோத்ஸ்னா. ஒரு தீர்மானத்தோடு.

## அசைந்து ஆடும் வெண்புறாவே... 15

மேளம் அதிர்ந்தது. வயிற்றுக்குள் தம் தம் என்று ஒலித்தது. குனிந்த தலைகளின் மீது பூக்களும், மஞ்சள் அரிசியும் பொழிந்தன. யாரோ அப்பாவின் தூரத்து சொந்தக்காரி கட்டிப்பிடித்து கன்னத்தில் வெற்றிலை வாசத்துடன் முத்தமிட்டாள். தோழிகள் கூட்டத்தினூடே நுழைந்து அவளது

கையைக் குலுக்கினார்கள். ஆண் நண்பர்கள் புன்னகையுடன் சரிகை காகிதம் சுற்றப்பட்ட தத்தம் பரிசுப்பொருட்களை நீட்டினார்கள்.

ஜோத்ஸ்னாவிற்கு நிஜமும், கனவுமான உணர்வு புரண்டது. சுமித்ரன், சுமித்ரன் என்று சகல நாடியும் உச்சரித்துக் கொண்டிருந்த தனக்கு கிருபாசங்கருடன் தீர்மானமாக பந்தம் ஏற்பட்டு விட்டதா! கிருபாசங்கரின் முகத்தில் பிரகாசித்த குதூகலமும், பெருமிதமும் அவளுள் மெல்லிய உணர்வுகளை மீட்டின.

சுமித்ரன் அல்லாது கிருபாசங்கர் அமைந்து போனது அப்படியொன்றும் அவளுள் பெரும் வலியைத் தோற்றுவிக்கவில்லை என்பதை உணர்ந்து ஆச்சரியப்பட்டாள். சுமித்ரனை அடியோடு மறக்கச் சொல்லுகிற குரூரமானவன் அவனில்லை என்பதாலேயே இந்த புதிய உறவு அவளுக்கு முள்ளாகத் தைக்கவில்லையா? கிருபாசங்கர் என்ற ஆண்மகன் அவளுக்குக் கிடைத்த நல்லபரிசு என்று அறிவுப்பூர்வமாக புரிந்து போனதால் இந்த உறவு இனிக்க விழைகிறதா?

எது காரணம் என்று அவளுக்கு குறிப்பிட்டு நிறுத்த முடியவில்லை. ஆனால் கிருபாசங்கர் அவள் கையை தாமரை மொக்காய் சேர்த்துப் பிடித்த போது சந்தோஷப்பட்டாள். இனி இவனுடன்தான் வாழ்க்கை முழுவதும் என்பதில் பெருமை கொண்டாள்.

அப்பாவின் கால்களில் விழுந்து எழுந்ததும், சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த கர்னல் பத்மநாபனின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தனர்.

அவர் கண்களில் ஆனந்தம் நீராக சொரிந்தது. கையால் இருவர் உச்சந்தலைகளையும் தொட்டு அழுத்தினார்.

"தம்பி, உன்னைப் பார்க்கும்போது



சுமித்ரனையே பார்ப்பது போல் இருக்கிறது எனக்கு. இது ரொம்ப மிருதுவான பெண், பூ மொட்டு, கண் கலங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு..."

இனி இவளுடைய சகலமும் என் பொறுப்பு என்பது போல் கிருபாசங்கர் அவருக்கு நம்பிக்கையூட்டும் விதமான புன்னகை ஒன்றை உதிர்த்தான்.

கிருபாசங்கரின் அப்பா ஆங்கிலமும் அரசாங்கமுமாக பெரிய மனிதர்களுடன் அளவளாவிக் கொண்டிருக்க, அவன் அம்மா லிப்ஸ்டிக் கலையாமல் ஜூஸ் உறிஞ்சிக் கொண்டிருந்தாள். கல்லூரித் தம்பி ஜோத்ஸ்னாவை சற்று பிரமிப்புடனேயே பார்த்துக் கொண்டிருந்தான்.

கல்யாணக் கூட்டம் கலைந்துவிட்டது. தில்லி விட்டு சென்னை வருவதாவது என்று கிருபாசங்கரின் பெற்றோர் சிரித்துவிட்டு பிளேன் ஏறிவிட்டார்கள்.

கிருபாசங்கருடன் காரில் சுமித்ரனின் வீட்டில் போய் இறங்கினாள் ஜோத்ஸ்னா.

"வாம்மா, வா தம்பி..."

கர்னலின் புன்னகை பிரகாசமாயிருந்தது.

"அப்பா, திங்கள் கிழமை நாள் பார்த்திருக்கிறது..." என்றாள் ஜோத்ஸ்னா, அவர் கையை அழுத்தி.

"எதற்கும்மா?"

"நம் புது வீட்டிற்கு குடிபோக..."

"நம் என்றா சொன்னாய்? இந்தக் கிழவன் எப்படிம்மா வர முடியும்?"

"கல்யாணமான பிறகு என்னோடு வந்து இருப்பதாக சொன்னீர்களே, மறந்து விட்டதா?"

"மறக்கவில்லை, நிலைமை மாறி விட்டது. தீபா முறைத்துக் கொண்டு ஓடிப் போயிருக்கிறாள். அவளுடைய வாழ்க்கை கலைந்துவிடும் என்று எனக்கு பயம் இருக்கிறது. எல்லாம் இழந்துவிட்டால் அவள் திரும்பி வர ஒரு வீடு இருக்க

வேண்டும், ஜோத்ஸ்னா. வா என்று சொல்ல அங்கே, நான் இருக்க வேண்டும்... அவனைப் பற்றித் தீர்மானமாக தெரியும் வரை நான் இந்த வீட்டை விட்டு விலக முடியாது"

"தீபாவை நான் வேற்று மனுஷியாக நினைக்கவில்லை அப்பா..."

"நீ நினைக்கவில்லையம்மா... ஆனால் உன் பேச்சை முறித்துக் கொண்டு கிளம்பிப் போனவனுக்கு உன் வீடு என்று கால்கள் கூசும். போவதற்கு இடமில்லை என்று நினைத்து பைத்தியக்காரத்தனமாக எதையாவது செய்துவிடப் போகிறானே என்று பெற்ற மனசு கவலைப்படுகிறது ஜோத்ஸ்னா.."

"புரிகிறது, அப்பா"

"அதற்காக நீ இங்கே வருவதை நிறுத்தி விடாதே... உன் முகத்தைப் பார்க்கும் போது எனக்கு கிடைக்கிற சந்தோஷத்தை மறுத்து விடாதே"

"இல்லை அங்க்கிள்... ஜோத்ஸ்னா உங்கள் வீட்டுப் பெண். தினமும் உங்களை பார்க்க வந்துவிடுவாள்... நீங்களாக மனசு வைத்து அம்மா, ராஜாத்தி, உனக்காக வீட்டில் ஒருத்தன் காத்துக் கிடப்பான். கொஞ்சம் நேரம் அவனுக்கும் ஒதுக்கு என்று சொல்லி துரத்தினாலொழிய போக மாட்டாள்..." என்றான், கிருபாசங்கர்.

"ஏய்!"

ஜோத்ஸ்னா கிருபாசங்கரை பெருமையுடனும், காதலுடனும் முதல் முறையாக ஏறிட்டுப் பார்த்தாள்.

முற்றும்

விவேக் பப்ளிகேஷன்ஸ் சார்பில் வெளியிடு பவரும், ஆசிரியரும், எஸ்வி. ராமு, 6/84, மல்லன் பொன்னப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. அச்சிட்டவர் எஸ்.பி. மெய்யப்பன், எஸ்.பி.எம். பைன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 005. ஆசிரியர் எஸ்வி. ராமு. தொலைபேசி : 28487533, 28483163.

[illegible] நாவல்